Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ஒக்ரோபர் 15 - 21, 2015

ரூபா 30.00

முரசு 1139

# தினமுரசு வாரமலர்


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY



## அரசியல் சாசனத்திலும் அநாதரவாகுமா? இனப்பிரச்சினைத் தீர்வும்



## புதிய அரசின் அடுத்தகட்ட நகர்வு என்ன?



## கிராம மக்களை அச்சுறுத்தும் இடர்கள்

## முத்தத்தை விரும்பும் பெண்கள்





## சுடர்மிகு நட்சத்திரம்



சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ஆலயங்களில் செய்யக் கூடாதவை

உடம்பைப் போர்த்திக்கொண்டு பிரதட்சணம், சமஸ்காரம் செய்தல். (பெண்கள் இதற்கு விதிவிலக்கு), பிரசாதத்தைத் தவிர வேறு உணவு வகைகளை கோவிலுக்குள் சாப்பிடக்கூடாது., சாவுத்தீட்டு போன்ற அசுத்தநிலையில் செல்லக்கூடாது.

கண்டகண்ட இடத்தில் கற்பு'ரம் ஏற்றக்கூடாது. விக்கிரங்களைத் தொட்டு வணங்கவே கூடாது., கர்ப்பக்கிரகத்தினுள் நமஸ்காரம் செய்யக்கூடாது., கொடிமரம், நந்தி, பலிபீடம் இவைகளுக்கு குறுக்காகச் சென்று பிரதட்சணம் செய்யக்கூடாது. தெற்கு முகமாக நமஸ்காரம் செய்யக்கூடாது., தலைக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டோ, ஈரஆடையுடன் கூடவோ தெய்வ வழிபாடு செய்யக்கூடாது., ஆலயத்தினுள், படுத்து உறங்குதல், அரட்டை அடித்தல், உரக்க சிரித்தல், அழுதல், தாம்பு'லம் தரித்தல் போன்ற காரியங்களைச் செய்யக்கூடாது., பொய் பேசுதல், மற்றவர்களை நிந்தித்தல், பெண்களிடம் தகாத முறையில் நடத்தல் போன்றவைகூடாது. ஆலயத்தினுள் மனிதர்கள் யாருக்குமே நமஸ்காரம் செய்யக்கூடாது. காலணிகள், தோல் பை மற்றும் மிருகத்தோலாலான எந்த பொருளுடனும் ஆலயத்தினுள் நுழையக்கூடாது. கோவில் மூடியநிலையில் இருக்கும்போதும் சுவாமி வீதி யில் உலாவரும்போதும் கோவிலினுள் சென்று தரி சனம் செய்ய முயற்சிக்கக்கூடாது.

ஆன்மீகம்

## நம்பிக்கை என்னும் நற்பண்பு

பழங்காலத்தில் மக்கள் தீய ஆவிகள் இருப்பதை முழுமையாக நம்பினர். காற்று முழுவதும், ஊசி நுழையாத அளவுக்கு தீய ஆவிகள் இருந்ததாக அவர்களிடையே ஒரு நம்பிக்கை இருந்தது. இந்த தீய ஆவிகள் சுத்தமில்லாத பகுதி களில் குறிப்பாக கல்லறைகள், பாலைவனம் போன்ற இடங்களில் வாழ்ந்ததாகவும் ஒரு பேச்சு இருந்தது.

தீய ஆவிகளைப் பற்றிய அச்சம் இருந்த அந்த காலச்சூழ்நிலையில் இயேசு துணிவோடு தீய ஆவிகளிடம் பேசுவது அவர் கடவுள்மீது வைத்திருந்த முழுமையான நம்பிக்கையைப் பறைசாற்றுவதாக அமைகிறது. இன்றைய காலத்தில், பேய்களையும், தீய ஆவிகளையும் நம்புகிற அளவுக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லாதது மிகப் பெரிய வேதனையைத்தருகிறது.

எல்லாவற்றிற்கும் காரணம் தீயஆவிகள் என்று நம்புகிற நமக்கு கடவுள் நம்பிக்கை எங்கே போயிற்று? இயேசு அதனைக் கற்றுத்தருகிறார். கடவுள் நம்பிக்கை இருக்கிறவனுக்குத்தான் துணிவு இருக்கும். கடவுள்மீது நம்முடைய் முழுமையான நம்பிக்கை நம்வாழ்வில் வெளிப்படவேண்டும். நம்பிக்கை என்பது நமக்குள்ளாக மூடி வைத்திருப்பது அல்ல. அது வாழ்வில் வெளிப்படவேண்டியது. அத்தகைய நம்பிக்கயை நாம் வாழ்ந்துகாட்டுவோம்.

## மறுமையில் மகிழ்ச்சியுடன் வாழ...

உலக வாழ்வு பற்றி மனிதன் என்ன கூறுகிறான் தெரியுமா? இவ்வுலக வாழ்வு எமக்களிக்கப்பட்ட ஒரேயொரு சந்தர்ப்பம். இதனை நாம் நன்றாய் அனுபவித்து சகித்து வாழ வேண்டுமென்று.

இதுவல்ல இஸ்லாம் கூறும் வாழ்க்கை. மறுமை வாழ்வுக்காக மனிதன் உழைக்கும்போது ஈருலக வாழ்வும் இனிதாய் அமையும் என்பதே.

ஆம். அநியாயம் செய்யும் நோக்கமோ அத்துமீறும் நோக்கமோ இன்றி எவரொருவர் இவ்வையகத்தில் வாழ்கின்றாரோ அவரே மனிதரில் புனிதர்.

மறுமை வாழ்வு பற்றி மனிதன் தெளிவாக தெரிந்து கொள்ளும் போது இவ்வுலக வாழ்வை தமக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமைத்து மறுமை வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

**எம்.சி.கலீல், கல்முனை – 05.**

## கவிதைப்போட்டி 1138



● பாராட்டுக்குரியது ●

### நல்லாவே நடிப்பாங்க!..

நல்லாயிருக்கும் போது
நாலு பேர் வருவாங்க!...
நட்பு நிறையக் கொள்வாங்க!...
நலிந்து நயந்து செல்லும்போது
நான் யார்? நீ யார்
என்பது போல்
நல்லாவே நடிப்பாங்க!...

ம.கானகன், கொக்குவில்.

## கவிதைப் போட்டி இல 1139



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26. 10. 2016

**கவிதைப் போட்டி இல. 1139 தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.**
**இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### வேதனை!

வன்முறைதான் வழியென்று
வழிவமைத்த அரசியலால்
வாசலுக்குவந்த வேதனையிது
வருந்துவதில் என்ன பயன்
வரவழைத்தது நாம் தானே

**எஸ்.மரீதலுன், மன்னார்.**

### தீருமா உன்வலி?...

அன்று அதைத் தடுத்து நிறுத்தவில்லை – இன்று
விசாரணையாம் ஐ.நா வில்
உன் நிலைக்கு உருவம்
கொடுத்தோர்க்கு
தீருமா உன்வலி?...
திருந்தாத
ஜென்மங்களய்யா இவர்கள்

**எம்.மேனகா, யாழ்ப்பாணம்.**

### பதில்?

தன்னிலை தெரியவில்லை உன் தாய்க்கு
உன் நிலை புரியவில்லை உலகிற்கு
வெம்மையின் வெறுப்பாயிது
வெளியுலகம் சொல்லுமா உனக்குப்பதில்?

**த.யாழினி, பதுளை.**




### கண்ணீர்

கண்ணீரில் தியாகங்கள்
கலந்துமென்ன
காலனவன் வென்றுவிட்டான் – இந்த
பாலன் முகம் பார்க்க
முடியவில்லை – யேசு
மீண்டும் பிறக்காரா?...

**சு.தனயன், தெல்லிப்பளை**

### கண்ணீர்

உலக வாழ்வு கனக்கிறதா மகனே
உன் தாய்க்குக்கூட
நினைவில்லையா?...
பிஞ்சு வயதில் வஞ்சமின்றித்
தூங்குகின்றாய் – ஐயா
நெஞ்சு பொறுக்குதில்லை உன்
வெந்த நிலை பார்க்க!

## உங்கள் பக்கம்

### இடி தாங்கியில்லாது போனது ஒருயிர்

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதிக் கடலில் படகு இயந்திரம்மீது (எஞ்சின்) மின்னல் தாக்கியதில் இயந்திரத்தைச் செலுத்திக்கொண்டிருந்த மீன்பிடித் தொழிலாளியான இளைஞன் அந்த இடத்திலேயே தலைவெடித்துப் பரிதாப கரமாக உயிரிழந்தார். குருநகர் முதலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த ஜசன் ஜுட் கனிஸ்ரன் (வயது-24) என்பவரே உயிரிழந்தவராவார். குருநகர் கரையிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கடந்தவாரம் காலை 6.45 அளவில் இந்தப் பரிதாப சம்பவம் இடம்பெற்றது. அந்தச் சமயம் லேசான மழை பெய்துகொண்டிருந்தது.

இது தொடர்பாக அவருடன் சென்றவர்கள் கருத்து வெளியிடும் போது "தொழிலுக்குச் சென்ற நால்வரும் கரை திரும்பிக்கொண்டிருந்தபோது கனிஸ்ரனே படகின் இயந்திரத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். அதன் போதே மின்னல் தாக்கியுள்ளது. படகு இயந்திரம்மீது கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னல் விழுந்ததைக் கண்டோம். அடுத்த விநாடியே கனிஸ்ரன் கடலில் விழமுற்பட்டார். அவரை நாம் உடனே தாங்கிப் பிடித்துவிட்டோம். அதன்போதே அவரது தலைவெடித்து இரத்தம் பாய்ந்தது. வாய், காது வழியாகவும் இரத்தம் வெளியேறியது. அவரில் எந்த உணர்வும் இருக்கவில்லை என்று அவருடன்கூடச் சென்றவர்கள் கூறினார்கள்.

படகு இயந்திரமும் பழுதடைந்ததை அடுத்து வேறொரு படகு அந்த இடத்துக்கு அழைக்கப்பட்டது. உணர்வற்றுக் கிடந்த கனிஸ்ரனையும் தூக்கிக் கொண்டு அவர்கள் அந்தப் படகில் கரை திரும்பியுள்ளனர். உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டபோதும் அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரியவந்தது. நீதிமன்ற உத்தரவுப்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். ஏனைய விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது" என்றனர்.

"மண்டதீவு, கற்பிட்டி, குருநகர் போன்ற இடங்களில் இடிதாங்கி அமைக்க வேண்டும் எனப் பல துருவங்களில் பல மீனவர்கள் பலமுறை கோரிக்கைகள் விட்டும்கூட இதுதொடர்பாக சம்மந்தப் பட்டவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தற்போது ஒருயிர் பலியாகிவிட்டது" என மீனவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதனை மீன்பிடித் தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்கள் வலியுறுத்தவேண்டும். அப்பாவி உயிர்கள் இவ்வாறு இயற்கைக்குப் பலியிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

குருநகரில் இருந்து
**கபிலன்**

## வாசகர்சாலை

### மீண்டும் வந்தார்

நீண்டகாலமாக முரசில் முகம் காட்டாத ஒருவர் கடந்த வாரத்தில் தனது காலைப்பதித்துள்ளார் அவர் தான் எங்கட அதிரடி ஐயாத்துரை. அவர் வந்தாலே போதுமே இனி கலக்கல்தான். **எஸ்.சுஜா, கொழும்பு.**

### அன்பின் முரசுக்கு!

1138ஆவது முரசில் ஒரு புதுமாற்றம் தெரிகிறது. மாற்றம் வரவேற்கக் கூடியது. முரசின் பக்கங்களில் வெளிச்சத் தன்மையும், வாசகர்களைக் கவரும் விதத்திலும் வெளியாகின்றது.

கிராமங்களை நோக்கி..... விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசியங்கள் என்பவை அருமையாக உள்ளது. புதுப்புது மாற்றங்கள் இன்னும் வேண்டும்.

**மு.பவித்ரா, அச்சுவேலி.**

### முரசுக்கு வணக்கம்!

முரசில் வரும் பக்கங்கள் அனைத்தும் பிரமாதம். சினிவிசிட், ஆசிரியர் தலையங்கம், எக்ஸ்ரே ரிப்போரட் போன்றவற்றில் பல மாற்றங்கள் தெரிகின்றது. முரசை சுவைபடத் தொகுத்த தந்தமைக்கு நன்றி.


**த.காயா, கொழும்பு –06**

### ஹாய் முரசு!

சென்ற வாரம் வெளிந்த உனது இதழ் மிகவும் அழகாக உள்ளது. உட்பகுதியில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள், மற்றும் அரசியல் கட்டுரைகள், போன்றவை மிகவும் விரும்பிப் படிக்கக் கூடி யதாக உள்ளது என்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.


**கே. பாணு, கிளிநொச்சி.**

## ஒக்ரோபர் - 15



**❛ ஒரு காரியம் கஷ்டமாக இருப்பதால் நாம் பயப்படுவதில்லை. நாம் பயப்படுவதால்தான் அந்த காரியம் கஷ்டமாக இருக்கிறது. ❜**

# வடக்கில் இன்னும் போர்வடுக்கள் அழியவில்லை



## டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவிப்பு

போரினால் இலங்கையின் பல பிரதேசங்கள் சேதப்படுத்தப்பட்டதுடன் பல உயிர்ச்சேதங்களும் ஏற்படுத்தப்பட்டது. வடபகுதியில் மாத்திரமின்றி தென்பகுதியிலும் பல அழிவுகள் போரினால் ஏற்பட்டது. ஆனால் தென்பகுதியில் ஏற்பட்ட அழிவுகள் புனருத்தாரணம் செய்யப்பட்டுவிட்டது. உதாரணமாக, தலதா மாளிகை, மத்திய வங்கி குண்டுவெடிப்புக்களால் ஏற்பட்ட சேதங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவிட்டது. ஆனால் தமிழ் மக்கள் வாழுகின்ற வடபகுதியில் ஏராளமான அழிவுகள் மற்றும் இடப்பெயர்வுகள் இடம்பெற்ற கூடுதலான பகுதிகள் இதுவரை புனர்நிர்மாணம் செய்யப்படாது போர் வடுக்கள் நிறைந்த பிரதேசமாக காட்சியளிக்கின்றது. மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை என்பதற்கப்பால் போரினால் பல இடங்கள் சேதமுற்றன. அதுகூட இதுவரை புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை.

மாறாக, ஆனையிறவு உட்பட ஒருசில இடங்களில் போரினால் பாதிக்கப்பட்ட ஆயுதங்கள், தளபாடங்கள் என்பன காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளன. மக்களின் உளநிலையை பாதிக்கின்ற இச்செயல் ஒழுங்குகளில் மாற்றம் ஏற்படவேண்டும். வடபகுதியில் அழிவடைந்த கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்ய அரசு ஆவன செய்யவேண்டும். நடந்த துன்பியல்களை மறந்து மக்கள் வாழ தேசிய அரசு வழிசெய்யவேண்டுமென டக்ளஸ் எம்.பி கோரியுள்ளார்.

## வல்வெட்டித்துறையில் வெள்ளை நிற அபூர்வ நாகம்



வல்வெட்டித்துறை தெணியம்பை நகர் பகுதியில் அபூர்வ நாகம் ஒன்று பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து அங்கு கூடியிருந்த இளைஞர்கள் இந்த நாக பாம்பினை போத்தலில் அடைத்தனர். பின்பு அவர்களினால் இந்த வெள்ளை நாகம் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு எடுத்து சென்று அங்கு வெளியே விடப்பட்டுள்ளது.

# புதிய யாழ்.மறைமாவட்ட ஆயர் நியமனம்



யாழ்.மறைமாவட்ட ஆயராக அருட்தந்தை ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் பாப்பாண்டவரால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவரின் நியமனம் குறித்த அறிவிப்பு கடந்த 13ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்த ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

யாழ்.மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றியதுடன் யாழ்.ஆயர் இல்லத்தின் குரு முதல்வராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மைத்திரியின் முகநூலில் இடம் பிடித்தார் முதலமைச்சர் சீ.வி




ஜனாதிபதி மைத்திரி வடக்கு பயணம் முடிந்த பிற்பாடு தனது முகநூலின் முன்பக்க படத்தை மாற்றம் செய்துள்ளார். அதில் வடக்கு முதல்வர் சீ.வி.விக்னேஸ்வரனின் படத்தை பதிவேற்றம் செய்துள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் வடக்கு முதல்வருக்கும் இடையில் முறுகல்நிலை உள்ள நிலையில் ஏனைய மகாண முதலமைச்சர்களின் படங்களை இதுவரை பதிவேற்றம் செய்யாத மைத்திரிபால முதலமைச்சர் சீ.வியின் படத்தை பதிவேற்றம் செய்தமை அரசியல் அவதானிகளால் உன்னிப்பாக அவதானிக்கப் படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நல்லுறவில் உள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரி வடக்கு முதல்வரை மதிப்பதும், அரவணைப்பதும் கூட்டமைப்பின் - கூத்தமைப்பு உறுப்பினர்கள் மட்டில் கலக்கத்தை ஏற்பாடுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரி வடக்கு பயணம்முடிந்த பிற்பாடு தனது முகநூலின் முன்பக்க படத்தை மாற்றம் செய்துள்ளார். அதில் வடக்கு முதல்வர் சீ.வி.விக்னேஸ்வரனின் படத்தை பதிவேற்றம் செய்துள்ளார். பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் வடக்கு முதல்வருக்கும் இடையில் முறுகல்நிலை உள்ள நிலையில் ஏனைய மகாண முதலமைச்சர்களின் படங்களை இதுவரை பதிவேற்றம் செய்யாத மைத்திரிபால முதலமைச்சர் சீ.வியின் படத்தை பதிவேற்றம் செய்தமை அரசியல் அவதானிகளால் உன்னிப்பாக அவதானிக்கப் படுகிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்களுடன் நல்லுறவில் உள்ள நிலையில் ஜனாதிபதி மைத்திரி வடக்கு முதல்வரை மதிப்பதும், அரவணைப்பதும் கூட்டமைப்பின் - கூத்தமைப்பு உறுப்பினர்கள்மட்டில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

# யார் அந்தப் பிள்ளையான்





பிரபலமாக பிள்ளையான் என அறியப்பட்ட சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிறப்பு: ஒகஸ்ட் 18, 1975) இலங்கையின் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் இவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமாவார். இவர் கருணா என அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரனுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரிந்துச் சென்று கருணா குழுவில் முக்கிய தலைவராக செயற்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை, பேத்தாழையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிள்ளையான் பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயத்திலும் பின்னர் வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் க.பொ.த. (சாதாரண தர) வகுப்பு (தரம் 11) வரை கல்வி பயின்றவர். ஏப்ரல் 4, 1990 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தனது 15வது வயதில் பிள்ளையான் என்ற இயக்கப் பெயரில் போராளியாக இணைந்தார். 1997இல் முல்லைத்தீவு இராணுவமுகாம் தாக்குதல், 2001 இல் ஆனையிறவு முகாம் தாக்குதல் ஆகியவற்றில் பங்குபற்றினார்.

2004 இல் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா அணியுடன் சேர்ந்து விலகி அவ்வமைப்பில் பதில் தலைவரானார். கருணாவின் சகோதரர் ரெஜி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவ்வமைப்பின் இராணுவப் பிரிவின் தலைவரானார். விடுதலைப் புலிகளுக்கெதிராகத் தாக்குதல்களில் நேரடியாக ஈடுபட்ட இவர் பின்னர் இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டார். 2007இல் கருணா அணியில் இடம்பெற்ற உள்ளக மோதல்களைத் தொடர்ந்து கருணா இலண்டனுக்குத் தப்பி ஓடியதை அடுத்து அவ்வமைப்பின் தலைவரானார்.

# ஜப்பானில் கரை ஒதுங்கிய வித்தியாசமான உருவம்

## பீதியில் பொதுமக்கள்



ஜப்பான் நாட்டில் வித்தியாசமான பாறை போன்ற உருவம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதால் பொதுமக்கள் பீதியில் உறைந்துள்ளனர். திமிங்கலம் போன்ற உருவ அமைப்பு கொண்ட அந்த உருவம் பார்வையில் பெரும் பாறை போன்று காட்சியளிக்கின்றது.

ஜப்பானியர் ஒருவர் இந்த உருவத்தை படம் பிடித்து தற்போது இணையத்தில் வெளியிட்டுள்ளார். இந்த உருவத்தின் தலை பகுதி அல்லது வால் பகுதி என்பது எதுவும் இல்லாத தால் மீன் போன்ற உருவம் அல்ல எனவும், ஒருபகுதி சிதைந்து காணப்படுவதால் அது எந்த வகையான உருவம் என இதுவரையில் எவருக்கும் தெரியவில்லை.

இதுபோன்ற சில வித்தியாசமான உருவங்கள் சுனாமி தாக்கியதன் பின்னர் அமெரிக்க கடற்கரையிலும் ஒதுங்கியதாக கூறப்படுகிறது.உடைந்து நொறுங்கிய வீடுகள், படகுகள், அலுவலக கட்டடங்கள் என 50 இலட்சம் டன் அளவுக்கு இடிபாடுகள் கடலில் கலந்திருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் [illegible] உள்ளனர். அதில் 70% [illegible] குள் மூழ்கியதாகவும் 15 [illegible] பன் டன் பொருட்கள் இன்னமும் கடலில் மிதப்பதாகவும் தெரிவிக்கின்றனர். இந்த உருவத்தை ஆராய்ச்சி நடத்தவேண்டும் என ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

**தினமுரசு** வாரமலர்
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் தலைவிதி மாறாது சிலரால் அதை மாற்றவும் முடியாது

* ''ஏமாற்றியது ஐ.நா" முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு.

*''தடுப்பில் இருக்கும் தமிழ் இளைஞரை விடுவிக்கமாட்டீர்களா"? சபையில் சம்பந்தர்.

*''பயங்கர வாத தடைச்சட்டம் நீக்கப்படாமை ஏன்"? சுமந்திரன் கேள்வி.

*''வடக்கிற்கு இனிமேல் வரக்கூடாது சந்திரிக்கா" வடமாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு.

*மாவட்ட இணைப்பாளர் பதவியை எதிர்த்து வடமாகாண-சபையில் தீர்மானம் நிறைவேற்றம்.

*தேசிய அரசுக்குள் குழப்பம் அமைச்சரவையில் விவாதம்.

*இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் கோரிப் போராட்டம் நடாத்த ஏற்பாடு.

*''வடமாகாண மாகாண சபையுடன் ஒத்துப் போகாத அதிகாரிகள்" ஜனாதிபதியிடம் வட மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு.

*மீனவர் பிரச்சினை தொடர்பாக வடமாகாண முதல்வர் மற்றும் வடமாகாண மீன்பிடி அமைச்சர் ஏன் மௌனம்?

இவ்வாறு நாளுக்கு நாள் செய்திகள் வக்கிரமடைந்து வருகின்றது. பழைய இடத்திற்கு மீண்டும் தமிழர் தலைவிதி போகுமோ!... எனும் அச்சப்பாடுகள் எழுந்துள்ளது. மக்களின் பிரச்சினைகளைப் பற்றி சிந்திக்கமுடியாத, தீர்க்கமுடியாத அளவிற்கு உள்ளூர் முரண்பாடுகளெல்லாம் உருப்பெற ஆரம்பித்து வருகின்றது. மத்திய அரசுக்குள் முரண்பாடு முற்றிவிட்டது. வடமாகாண அரசுக்கும் - மத்திய நிர்வாக பிரிவு-கள் மற்றும், தமிழரசுக் கட்சிகளிற் கிடையில் பனிப்போர் படர்ந்து கொண்டு இருக்கின்றது. இதையெல்லாம் நோக்கும்போது தமிழர் தலைவிதி மாறப்போவதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் தென்படுவதாக தெரியவில்லை.


“வடக்குக், கிழக்கு மலையக தமிழ்மக்களை என்றுமே நான் மறவேன், மீள்குடியேற்றத்தை விரைவில் அமுல்படுத்துவேன்” என்று வாக்குறுதியளித்த ஜனாதிபதியின் அதிகாரங்கள் கூட மட்டுப்படுத்தப்பட்டுவிட்டன. இதுவரை மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. மக்களிற்கான மீள்குடியேற்றத்தைக்கூட பாராளுமன்ற பெரும்பலத்தால் நிறைவேற்றமுடியாத தேசிய அரசு எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்கப் போகின்றது?.... என்பது மக்கள் மத்தியில் தற்போதெழுந்துள்ள விடையில்லா வினாவாகும்.

தற்போது தேசிய அரசுக்குள்ளும் குழப்பங்கள் எழ ஆரம்பித்த விட்டன. அமைச்சரவையில் விவாதங்கள் இடம்பெறுகின்றன. சுமூகமாக இருக்கின்ற போதே தீர்க்கப்படாத பிரச்சினைகள் இனியெங்கே...?மறுபுறத்தில் 2016இல் தீர்வினைப் பெற்றுத் தருவோம் என மக்களிற்கு வாக்குறுதியளித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எங்கே...? அடிப்படைப் பிரச்சினைகள் இவ்வாறிருக்க சந்திரிக்காவை வரக்கூடாது, ரணிலை நான் சந்திக்கமாட்டேன். என புதிய புதிய முரண்பாடுகளை சிலர் பொறுப்பற்றரீதியில் உருவாக்கிவருகின்றனர்.

இத்தனை அமைச்சர்கள் ஆளுனர்கள் என மத்திய அரசின் செயற்பாடுகளை நெறிப்படுத்த பலர் இருந்தும்கூட தற்போது மாவட்ட இணைப்பாளர் பதவியைக் கொண்டுவர ஏன் அரசு எத்தனிக்கின்றது. இது சாதாரண அதிகாரம்கொண்ட பதவியல்ல, அமைச்சரவை அந்தஸ்துக்கு இணையான பதவியிது. இதுதொடர்பாக ஏன் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காக்கின்றனர் என்பதுதான் புரியவில்லை. வடமாகாண சபை யில் இதை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இதைத் தடுக்க இத்தீர்மானத்தால் முடியுமா?. என்பது மறு துருவ வினாவாகும்.

தற்போது “இராணுவத்தை காக்கும் நோக்கில் போர்க்குற்ற விசாரணையும் நெகிழ்வுத் தன்மைகொண்டதாக மாற்ற எத்தனிக்கின்றோம்” என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அந்தவகையில் அதிலும் அப்பாவித் தமிழ் மக்களிற்கு நியாயம் கிடைக்கப்போவதில்லை. ஆக மொத்தத்தில் தேசிய அரசை ஆதரித்ததில் இதுவரை தமிழ் மக்கள் பெற்ற நன்மை என்று எதுவுமேயில்லை. மறுதுருவத்தில் ஆதரிக்கச் சொன்ன தமிழ்தேசியக் கூட்டமைப்பு பெற்று தந்த நன்மைகள் என்றும் எதுவுமேயில்லை...? என்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

நடந்து முடிந்த தமிழரின் வன்முறை போக்குகள்தான் இத்தனை பின்னடைவுகளிற்கும் காரணம் என விமர்சிக்கத் தெரிந்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தரிற்கு நடக்க இருக்கும் அரசியலை செப்பனிட ஏன் இதுவரை தெரியவில்லை...? என்பது ஒரு பக்கம் ஆனந்த சங்கரி மறுபக்கத்தில் இவர் சொல்லும் வன்முறைக் கூடாரத்திற்குள் தானே இவரும் அன்று அரசியல் நடத்தினார். அப்போது இது சாத்தியப்படாது என்று விலத்தியிருக்கலாம் தானே...? அன்று விலத்தவில்லையா? ஏன் விலத்தவில்லை...? எதிர்க்கத்தான் முடியாதே தவிர விலத்த வழி இருந்ததுதானே...! உங்கள் அரசியல் அந்தஸ்துத் தேட அன்று அவர்கள் வேண்டும். இன்றும் உங்களிற்கான அதே அரசியல் அந்தஸ்துத் தேட அவர்களை விமர்சிக்கவேண்டும். இதுதான் உங்கள் நிலைப்பாடு. எல்லாம் தமிழர் தலைவிதிதான். மக்களின் தெரிவுகள் தெளிவாகும்வரை இதை எவராலும் மாற்றமுடியாது.



# அரசியல் சாசனத்திலும் அநாதரவாகுமா?... இனப்பிரச்சினைத் தீர்வும்

தேசிய அரசு சர்வதேச நாடுகளின் முன்னிலையில் புதியதோர் அரசியல் சாசனத்தை விரைவில் இலங்கையில் கொண்டு வரவிருப்பதாக வாக்குறுதிகளை அளித்துவருகின்றது. இதில் தமிழ் மக்கள் விரும்புகின்ற இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளடங்குமா? அது தமிழ் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கியதாக இருக்குமா...? அதை தமிழ் தேசிய கூட்டமைப்பு வலியுறுத்துமா...? எதை கூட்டமைப்பு வலியுறுத்தும்...? எதை சிங்கள தேசிய ஏற்றுக்கொள்ளும்...? அல்லது போர்க் குற்ற விசாரணைக்காக போத்து மூடும் கதையா இது. எது அந்த அரசியல் சாசனம்...? என்பதுதான் தேசிய அரசை தெரிவுசெய்த சிறுபான்மையினங்களின் கேள்வியாகும்.

**தேர்தல் முறை மாற்றம், ஜனாதிபதி அதிகாரத்தை மட்டுப்படுத்தல் போன்ற சில அரசியல் முறையில் இதுவரை அங்கம்பெற்ற அத்தியாயங்களை மாற்றுவதையே குறித்து நிற்கின்றது. தேசிய அரசு தமிழ் பிரதிநிதிகளையும் சர்வதேசத்தையும் நிதானமாக கையாளுகின்றது. இது எவர்க்கும் புரியவில்லை.**

தமிழ் மக்கள் விரும்புகின்ற அரசியல் தீர்வு எது?. என்பது தொடர்பாக முதலில் எம்மவர்க்குள் பல்வேறு கருத்து முரண்பாடு உள்ளது. அதனை நாம் எமக்குள் முதலில் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். கடந்த பாரளுமன்றத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புக் கூறியது, “வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சமஸ்டி முறையிலான சுயாட்சியையே தமிழர் விரும்புகின்றனர். தேர்தலில் எமக்கு வாக்களியுங்கள். 2016 இல் அத்தகைய தீர்வினை நாம் உங்களுக்கு நிச்சயம் பெற்றுத்தருவோம்." இதை நம்பி மக்களும் வாக்களித்தனர். பெரும்பலத்துடன் பாராளுமன்றம் சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மைப் இனத்தையே வென்று இலங்கையின் எதிர்க்கட்சிப் பதவியை தனதாக்கிக்கொண்டது. இதன்பின் யாழ்ப்பாணம் வந்த தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தரிடம், “அன்று நீங்கள் கூறிய 2016 இல் தீர்வு தொடர்பாக தற்போதைய நிலைப்பாடு என்ன...? ”என ஊடகவியலாளர் வினாக்கேட்டபோது, “எங்கள் கையில் எதுவும் இல்லை, அதை தற்போது சர்வதேசம்தான் முடிவு செய்யவேண்டும்.” என்றார். இதுதான் தற்போது இவர்களின் பதிலென்றால் இந்த இணக்கப்பாட்டுக்கு அர்த்தமென்ன...? இலங்கையில் பலம் பெற்ற மூன்றவது தலைமையான எதிர்க்கட்சித் தலைமையின் அர்த்தமென்ன? பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் இவர்களிற்கு வழங்கிய ஆதரவுக்கு அர்த்தமென்ன...?

மறுதுருவத்தில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன். தமிழ் மக்கள் எதை விரும்புகின்றார்கள் என்பது தொடர்பாக ஜனாதிபதியவர்களுடன் அண்மையில் கருத்துப்பரிமாறும்போது “பெரும்பான்மை எனும் மரத்தோடு கொடிகள் போல ஒட்டிவாழ தமிழ் மக்கள் விரும்பவில்லை இவர்கள் தனிமரங்களாகவே வாழ ஆசைப்படுகின்றனர்" எனக்கூறியிருந்தார். இவர் கூறுவது ஒற்றையாட்சிக்குள் ஓர் அதிகாரப்பகிர்வா...? அல்லது மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையா? என்பது தொடர்பாக ஓர் தெளிவின்மை உள்ளது.


இவற்றிகெல்லாம் அப்பால் அரசியல் சாசனம் என்று தேசிய அரசு எதைக்கருதுகின்றது என்பது தொடர்பாக நேக்கினால் தேர்தல் முறை மாற்றம், ஜனாதிபதி அதிகாரத்தை மட்டுப்படுத்தல் போன்ற சில அரசியல் முறையில் இதுவரை அங்கம்பெற்ற அத்தியாயங்களை மாற்றுவதையே குறித்து நிற்கின்றது. தேசிய அரசு தமிழ் பிரத-நிதிகளையும் சர்வதேசத்தையும் நிதானமாக கையாளுகின்றது.

இது எவர்க்கும் புரியவில்லை. சர்வதேச போர்க்குற்ற விசாரணை தொடர்பாக பாரளுமன்ற விவாதத்திற்கு விடப்பட இருக்கின்றது. தேசிய அரசின் தலைமைகள் சர்வதேச விசாரணையை நிராகரித்தது என்கின்ற எதிர்ப்பை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தாமல் ஜனநாயக நாட்டின் பாராளுமன்றத் தீர்மானமிது என சர்வதேசத்திற்கும் காட்டலாம். மறுதுருவத்தில் உள்ளூர் கட்சிகள் மற்றும் இராணுவ எதிர்ப்பையும் பாராளுமன்றத் தீர்மானம்மூலம் காவாந்து பண்ணலாம் என்பதே பாராளுமன்ற விவாதத்திற்கு விடப்படுவதன் அடிப்படையாகும்.

இதேபோன்று தான் தமிழ் மக்களின் பிரச்சினையையும் “அரசு புதிய அரசியல் சாசனம்” எனும் பெயரில் சர்வதேசத்தை சாந்திப்படுத்த முனைகின்றது. இதயசுத்தியோடு தொழிற்படுகின்றது என்றால் இதுவரை தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் என்ன மாற்றம் இடம்பெற்றது...? மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெற்றதா...? மாகாண அதிகாரப்பகிர்வுகள் செப்பனிடப்பட்டதா...? 13இல் உள்ள பெலீஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வடமாகாண சபைக்கு வழங்கப்பட்டதா? பட்டதாரிகள் நியமனம் இடம்பெற்றதா...? இதுபோலவே புதிய அரசியல் சாசனத்திலும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு அநாதரவாகும்.

வெண்கட்டியன்

ஊடுருவி



WikiLeaks

பகுதி -02-

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசியங்கள்!!

## நாய்களின் நண்பன்

யாழ்ப்பாண பிராந்திய தளபதி கிட்டு ஆவார். புலிகள் இயக்கத்தில் பிரபாகரனுக்கு அடுத்தபடியாக அதிகாரம் வாய்ந்தவராக இவர் உள்ளார். இவரின் சொந்தப்பெயர் சதாசிவம் கிருஷ்ணகுமார் என்பதாகும். இவருக்கு 27 வயது. இவர் பிரபாகரனுக்கு நெருக்கமான உறவினர்களில் ஒருவர் என்றும் மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர் என்றும் சொல்லப்படுகின்றது.

இவர் தமிழ்மொழி மாத்திரம்பேச அறிந்தவர் என்று கூறப்படுகின்றது. எனினும் கொஞ்சம் ஆங்கிலம் விளங்கிக் கொள்பவராக இருக்கக் கூடும். இவர் தரம் 10 வரை படித்து இருக்கின்றார்.

கிட்டுவின் செல்லப்பிராணி ஒரு குரங்கு. இதன் பெயர் பில். இச்செல்லப் பிராணியை கிட்டு வைத்திருக்கின்ற புகைப்படங்களை கொழும்பு ஊடகங்கள் பிரசுரித்து உள்ளன. இதேநேரம் இவரை பேட்டி கண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர் கிட்டுவை எப்போதும் நட்புடன் நாய்கள் கூட்டம் சுற்றித் திரிந்தது என்று எமக்கு தெரிவித்தார்.

கிட்டு படுபயங்கரமான, மோசமான சாரதி ஆவார் என்றும் இவ்வூடகவியலாளர் கூறினார். இவரை கிட்டு வாகனத்தில் ஏற்றி ஓட்டி சென்று யாழ்ப்பாணத்தை சுற்றிக்காட்டிய அனுபவம் மயிர் கூச்செறிய வைப்பதாக இருந்தது என்றும் ஊடகவியலாளர் கூறி உள்ளார். கிட்டு மோட்டார் தாக்குதலில் 1986ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒரு காலை இழந்தார் என்று இலங்கை அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் பயங்கரமான வாகன வெடிப்பு சம்பவம் ஒன்றுக்கு அப்பால் காலை இவரே அடித்து நொருக்கினார் என்று தமிழ் வட்டாரங்கள் சொல்கின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கின்ற அண்மைய தகவல்களின் படி கிட்டு காருக்கு பதிலாக ஸ்கூட்டர் ஒன்றில் சுற்றித் திரிகின்றார் என்று அறியமுடிகின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கக்கூடும். ஒன்று புலிகள் இயக்கத் தலைமை இவரை பதவி இறக்கம்செய்து இருக்கக்கூடும். இரண்டாவது யாழ்ப்பாணத்தின்மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள எரிபொருள் தடையின் தாக்கமாகவும் இருக்கலாம். ஆனால் காரை மீண்டும் ஒரு முறை வெகுசாதாரணமாக கிட்டு அடித்து நொருக்கியதும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

### காகங்களின் எதிரி

ஊடகவியலாளர் ஒருவரின் கருத்துப்படி கிட்டு ஒரு விசித்திரமான பேர்வழி போல தோன்றுகின்றார். இருண்ட, கொடுமையானவராக தெரிகின்றார். இவர் கைத்துப்பாக்கி ஒன்று வைத்து இருந்தார் என்று எமது தொடர்பாளர் ஒருவர் கூறினார். கிட்டு ஏ - 45 ரக துப்பாக்கி ஒன்றை சிறுத்தைத் தோலிலான உறைக்குள் வைத்திருக்கின்றார் என்றும் இத்தொடர்பாளர் குறிப்பிட்டார்.

> கிட்டுவின் மூர்க்கத்தனம், இயல்பான வன்முறைச் சுபாவம் ஆகியன குறித்து இலங்கை அரசாங்க வட்டாரம் ஒன்று தெரிவித்த தகவலையும் இங்கு தருகின்றோம். ஒரு முறை கிட்டுவின் இல்லத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஒரு டசின் புலிகள் வரை இதில் பங்கேற்றனர். பெரும்பாலான புலிகள் கிட்டுவின் வீட்டுக்கு வெளியே சைக்கிள்களை நிறுத்தியிருந்தனர். அப்போது இலங்கை அரசாங்கத்தின் ஹெலிகொப்டர் ஒன்று மேலாக பறந்துசென்றது. உடனே பாதுகாப்புக் காரணங்களுக்காக சைக்கிள்களை அப்புறப்படுத்த கிட்டு கட்டளையிட்டார்.

நாம் முன்னர் குறிப்பிட்ட வெளிநாட்டு ஊடகவியலாளருடைய சுற்றுலா அனுபவத்துக்கு மீண்டும் செல்வோம். இவ்வூடகவியலாளரை காரில் ஏற்றிச் சென்ற கிட்டு அவ்வப்போது காரை நிறுத்தி இருக்கின்றார், வானத்தில் பறந்து செல்கின்ற காகங்களுக்கு கைத்துப்பாக்கியால் வெடிவைத்து இருக்கின்றார், ஆனால் ஒரு வேட்டுக்கூட காகங்கள்மீது படவே இல்லை.

இவர் கழுத்தில் பொட்டாசியம் சயனட் குப்பி அணிந்து இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. கைதாகின்ற பட்சத்தில் தற்கொலை செய்கின்றமைக்காகவே இவ்வேற்பாடு. இது புலிகளின் பொதுவான வழக்கம் ஆகும்.

இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு வைத்திருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்ற தமிழர்கள் விடயத்தில் கிட்டு மிக கொடூரமாக நடப்பவர் என்று பல வட்டாரங்களும் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் இராணுவத்துடன் கால்பந்தாடினார் என்கிற குற்றத்துக்காக கிட்டுவின் கட்டளைக்கு அமைய சுட்டுக் கொல்லப்பட்டார் என்று எமது தொடர்பாளர் ஒருவர் கூறினார். சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எட்வின் ஆனந்தராஜாவே கொல்லப்பட்டு இருக்கின்றார் என்று எமது தூதரகம் உறுதிப்படுத்தியது. 1985 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 26ஆம் திகதி இப்படுகொலை இடம்பெற்றது. இராணுவ அணிக்கு எதிராக கல்லூரி அணியை விளையாட அனுமதித்தமைக்காகவே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஆனந்தராஜா வின் மைத்துனர் எமக்கு கூறினார்.

கிட்டுவின் மூர்க்கத்தனம், இயல்பான வன்முறைச் சுபாவம் ஆகியன குறித்து இலங்கை அரசாங்க வட்டாரம் ஒன்று தெரிவித்த தகவலையும் இங்கு தருகின்றோம். ஒரு முறை கிட்டுவின் இல்லத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்தது. ஒரு டசின் புலிகள்வரை இதில் பங்கேற்றனர். பெரும்பாலான புலிகள் கிட்டுவின் வீட்டுக்கு வெளியே சைக்கிள்களை நிறுத்தி இருந்தனர். அப்போது இலங்கை அரசாங்கத்தின் ஹெலிகொப்டர் ஒன்று மேலாக பறந்துசென்றது. உடனே பாதுகாப்புக் காரணங்களுக்காக சைக்கிள்களை அப்புறப்படுத்த கிட்டு கட்டளையிட்டார். ஆனால் இக்கட்டளை உடனடியாக நிறைவேற்றப்படாமையை அடுத்து கிட்டு கோடாரி ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து சைக்கிள்களை கொத்திக் கூறுபோட்டார்.

### காதல் தளபதி

கிட்டுவின் அரசியல் நிலைப்பாட்டை சரியாக தெரிந்துகொள்ள எம்மால் முடியவில்லை. இராணுவ தமிழ் தேசியவாதத்துக்கு அப்பால் இவரின் சித்தாந்த ஈடுபாடு மிகவும் நொய்தலானது என்பது இதற்கான காரணமாக இருக்கக் கூடும். இவர் 1986 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் புலிகள் புரட்சிகர சோஷலிஸ்ட்டுகள், புலிகளின் ஒரேயொரு இலட்சியம் ஒரு கட்சிச் சோஷலிச நாட்டை உருவாக்குவதே என்று குறிப்பிட்டு இருந்தார்.

கிட்டுவுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு உள்ளது என்று கொழும்பு ஊடகம் அண்மைய மாதங்களில் எழுதிவருகின்றது. கிட்டு காணாமல் போய்விட்டார். புலிகளுக்குள் இடம்பெற்ற உள்வீட்டு மோதலில் இவர் கொல்லப்பட்டு இருக்கக்கூடும் என்றுகூட பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியாகின. பிரபாகரன் தமிழ்நாட்டில் மறைந்து வாழ்ந்த மூன்று வருடங்கள் வரையிலும் கிட்டுவே தலைவராக நடந்து கொண்டார். அத்துடன் தமிழ் வைத்திய கலாநிதி ஒருவரை கிட்டு திருமணம் செய்ய தயாராக இருந்தார். இவர் இப்போது யுத்தம் செய்வதைக் காட்டிலும் காதல் செய்கின்றமையில் அதிக ஈடுபாடு உடையவராக உள்ளார்.

ஆனால் பிரபாகரன் - கிட்டு மோதல் இலங்கை அரசாங்கம் உருவாக்கிய கட்டுக்கதையாக இருக்கவேண்டும் அல்லது புலிகள் பிரியப்போகின்றார்கள் என்கிற கருத்தை பெரிதாக்கிக் காட்டுகின்ற பிரசாரமாக இருக்க வேண்டும் என்றே பெரும்பாலான அவதானிகள் உணர்கின்றார்கள்.

### நெருப்பும் நீரும்

யாழ்ப்பாணத்தில் கிட்டுவுக்கு அடுத்த நிலையில் உள்ளவர் ராஹிம் ஆவார். ராஹிம் உயர்குடியில் பிறந்தவர். மும்மொழிகளும் தெரிந்தவர். உரை பெயர்ப்பாளர். யாழ்ப்பாணத்தில் புலிகளின் பேச்சாளரும்கூட. இவருக்கு 22 வயது என்று கூறப்படுகின்றது. இவரின் சொந்தப்பெயர் பாலசுப்பிரமணியம் கனகரத்தினம். 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் வெடித்தபோது கண்டி ரினிற்றி கல்லூரியில் இவர் இடைநிலை வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார். இவரின் தகப்பன் அரசாங்க தேயிலை தோட்டத்தில் பணியாற்றிக் கொண்டு இருந்தார். கலவரத்தில் பாதிக்கப்பட்ட இவர்களின் குடும்பம் யாழ்ப்பாணம் திரும்பியது. சிலநாட்களின்பின் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தார் ராஹிம்.

ராஹிமின் இரு நெருக்கமான உறவினர்கள் பிரசித்திவாய்ந்த சத்திரசிகிச்சை நிபுணர்கள். ராஹிமின் அப்பப்பா இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் பதவியை வகித்து இருந்தார். இவரின் குடும்பம் பொதுவாக தமிழர் போராட்டத்தை உள்வாங்கி இருந்தது.

ராஹிம் யாழ்ப்பாண உயர் சாதியை சேர்ந்தவர் ஆவார். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் திறமை வாய்ந்தவர். யாழ்ப்பாணத்துக்கு வந்த சிங்கள அரசியல்வாதி ஒருவர் இச்சுற்றுப பயணத்தை வீடியோவாக படம்பிடித்து நாடுமுழுவதும் விநியோகித்தார். இவ்வீடியோவில் தோன்றிய ராஹிம் கம்பீரமாக, மிருதுவாக, திறமைசாலியாக காட்சிகொடுத்தார். குட்டையான, மொட்டையான, கண்ணாடி அணிந்த ஒரேயொரு மொழி தெரிந்த கிட்டுவுக்கு நேர் எதிர்மாறானவராக ராஹிம் உள்ளார்.

(யாத்திரை தொடரும்)



# நிலமெல்லாம் இரத்தம்

174

பா.ராகவன்

எந்த ஒரு தேசமும் எந்த ஓர் அமைப்பும் பி.எல்.ஓ.வுக்கு ஆதரவோ, அனுதாபமோ தெரிவிக்கத் தயங்கியது.

தனது ஆயுதப் போராட்டத்தைத் தற்காலிகமாகவாவது ஒதுக்கி வைத்துவிட்டு, அமைதிப்பேச்சு களில் கவனம் செலுத்தி, ஏற்பட்டு விட்ட அவப்பெயரைத் துடைத்துக் கொண்டால்தான் விடுதலைப் போராட்டத்தில் ஓர் அங்குலமாவது முன்னேற முடியும் என்று அரபாத் முடிவு செய்தார். அதனால்தான் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் அவர் தனது சறுக்கலை அவர் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு இருக்கிறார். ஆனால், அதன் விளைவுகள் தனது தேசத்தின் விடுதலையைப் பாதித்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான் அவர் ஒஸ்லோ உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டார் என்பதைத்தான் பலஸ்தீனியர்கள் ஏற்க மறுத்து விட்டார்கள்.

இஸ்ரேலுடன் நல்லுறவு வேண்டாம். குறைந்தபட்சம் பேசிக்கொள்ளும் அளவுக்காவது சுமாரான உறவு இருந்தால்தான் அடுத்தகட்டத்தை நோக்கி நகர முடியும் என்பது அரபாத்தின்



இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்தார். நோர்வேயின் அமைதி ஏற்பாட்டுக்குச் சம்மதம் சொன்னார். பெரிய இலாபமில்லாவிட்டாலும் ஒஸ்லோ உடன்படிக்கைக்கும் ஒத்துழைக்க் முடிவுசெய்தார். அமெரிக்க அதிபருடன் கைகுலுக்கினார். அத்தனை காரியங்களையும் ஆத்மசுத்தியுடன் செய்தார்.

இந்த விவரங்களை பாலஸ்தீனிய அரேபியர்கள் சிந்தித்துப் பார்க்க மறந்ததன் விளைவுதான் அரபாத்தை துரோகி என்றும், விலை போய்விட்டவர் என்றும், பதவி ஆசைபிடித்தவர் என்றும் வசைபாடவைத்தன.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் எதற்கும் அரபாத் கடுமையான பதில்களை ஒருபோதும் தந்ததில்லை. புரிந்துகொள்ளுங்கள், புரிந்துகொள்ளுங்கள் என்று மௌனமாக மன்றாடியதைத் தவிர, அவர் வேறெதுவும் செய்யவில்லை.

குவைத் யுத்தத்தில் அவர் சதாமை ஆதரித்தது ஒரு விபத்து. சந்தேகமில்லாமல் விபத்து. அது பற்றிய வருத்தம் அரபாத்துக்கு இறுதிவரை இருந்திருக்கிறது. நம்பிக்கை. ஏனெனில், இஸ்ரேலை ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று இதர பலஸ்தீனிய இயக்கங் கள் கோஷமிட்டுக்கொண்டு இருந்ததைப்போல் அவர் செய்ய வில்லை. இஸ்ரேலை ஒழிப்பதென்பது வெறும் மாய யதார்த்தம் மட்டுமே என்பதை அவர் மிக நன்றாக அறிந்திருந்தார்.

இங்கேதான் ஒரு போராளிக்கும் அரசியல் விற்பன்னருக்கும் உள்ள வித்தியாசம் வருகிறது. அரபாத் ஒரு போராளியாக மட்டும் இருந்திருப் பாரேயானால் அவரும் அந்தக் கற்பனையான இலக்கை முன் வைத்துக் கண்ணில்பட்ட இடங்களையெல்லாம் சுட்டுக் கொண்டேதான் இருந்திருப்பார். அவர் ஒரு இராஜதந்திரியாகவும் இருந்ததால்தான் அமைதிக்கான வாசல்களை அவரால் திறந்து வைக்க முடிந்தது.

அன்றைக்கு அவர் விதைத்தது தான் இன்றைக்கு காஸாவிலிருந்தும் மேற்குக்கரையிலிருந்தும் இஸ்ரேலியர் களை, இஸ்ரேலிய அரசே வெளி யேற்றும் அளவுக்குப் பலனளிக்கத் தொடங்கியிருக்கிறது.

**(தொடரும்)**



அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

24

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

புது வாழ்க்கையை தொடங்க இதுதான் சரியான இடம் என்று மண்டேலா தீர்மானித்தான். ஜொஹன்னர்ஸ்பெக் நகரத்தின் உள்ளே செல்லச் செல்ல நிலைமை தலைகீழாய் மாறியது. மண்டேலா எதிர்பார்த்ததுபோல் இல்லை. தங்கச் சுரங்கங்கள், காதைப் பிளக்கும் சத்தங்கள், எங்கும் தூசி, குப்பை, முள்கம்பி வேலிகள் என்பன அந்தப் பிரதேசத்தை ஒரு சிறைச்சாலை போல் தோன்றச்செய்தன. திடீரென்று டைனமைட்டின் வெடிச்சத்தம் கேட்டது. கிடுகிடுக்கும் சத்தத்துடன் பாறைகள் இரட்டைப் பிளவுற்று உருண்டு விழுந்தன. சிறுபாறைகள் சுக்குநூறாகச் சிதறின.

திரும்பும் பக்கமெல்லாம் கறுப்பின மக்கள் குனிந்து நிமிர்ந்து வியர்வை ஒழுக இரத்தம் சிந்துமளவுக்கு கடுமையாக தங்கச் சுரங்கத்தில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த காட்சியை பார்த்ததும் மண்டேலா மனம் வெதும்பினான். இரத்தம் அனலாய் கொதித்தது. தம்மின மக்கள் தங்கச்சுரங்கத்தில் மாடுபோல் படாத பாடுபடுத்தப்படு கிறார்கள் என்று நினைக்கும் போதெல்லாம் அவன் மனம் விம்மி வெடித்தது. நூற்றுக்கணக்கான கறுப்பின மக்களே இருப்பார்கள் என்று மண்டேலா ஊகித்தான்.



உள்ளே செல்ல செல்ல அங்கே ஆயிரக் கணக்கான கறுப் பினத்தவர்கள் எறும்புக் கூட்டம்போல் இயங்கிகொண்டிருந்தார்கள். டைனமைட் சத்தமும் தூசியும் முள்கம்பி வேலியும் வியர்வையும் வெப்பமும் அவர்களை சிறிதும்கூட இம்சித்ததாக தெரியவில்லை. அவர்கள் அதற்கு இசைவாக்கம் அடைந்தவர்களாகவே தென்பட்டார்கள்.

மண்டேலா ஜஸ்டிஸிடம் "ஏன் நம்மின மக்களுக்கு இப்படியொரு நிலைமை. அவர்களும் மனிதர்கள் தானே மாடுபோல் அல்லவா வேலை வாங்குகிறார்கள் மனச்சாட்சி இல்லாத கயவர்கள் வெள்ளையர்கள் தோல் மட்டும் வெள்ளையாக இருந்தால் போதுமா? மனதும் வெள்ளையாக அல்லவா இருக்கவேண்டும் மனதில் சிறிதும் ஈவு இரக்கமில்லாத ஈனப்பிறவிகள் அவர்களோ எவ்வளவு சொகுசாக காரில் உலாவந்து போகிறார்கள் தங்களது ஆடம்பர சொகுசு வாழ்க்கைக்காக நம்மின மக்களையா பலிக்கடாவாக்குவது? என்னால் பொறுக்க முடியவில்லை.

ஏன்தான் இந்த நகரத்திற்கு வந்தோமோ தெரியவில்லை" என்று தன் மனக்கிடக்கைகளை கொட்டித் தீர்த்தான். ஜஸ்டிஸ் அமைதிப் படுத்தும்விதமாக கூறினான்.

"நாம் ஊரைவிட்டு ஓடிவந்துவிட்டோம். இங்கு நமக்கு ஒருவரையும் தெரி யாது. எப்படியாயினும் பொறுத்துப் போவோம். நீ எடுத்ததுக்கெல்லாம் கோபப்பட்டு காரியத்தை கெடுத்துக் கொள்ளாதே. பொறுமையாக இரு. காலம் பதில் சொல்லும். நம்மின மக்களுக்கு விடிவு காலம் வர வேண்டிய காலத்தில் வரும். நீ ஆவேசப்படாதே. ஆவேசப்பட்டு ஒன்றும் ஆவப்போவதில்லை.

**(தொடரும்)**

# குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தலில் குடும்பம் மற்றும் பாடசாலைக் காரணிகளின் பங்கேற்பு!



**கலாநிதி (திருமதி ஜெ.இராசநாயகம்)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கல்வியியற்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலில் இன்று பல அமைப்புக்கள் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. குழந்தைகளின் முழுமையான பாதுகாப்பு என்பதைக் கருத்திற்கொண்டு அவர்களிடம் அன்புகாட்டி அவர்களை எதிர்கால வாழ்விற்குத் தயாராக்க முழு உலகமும் ஆர்வம் கொண்டுள்ளன. இவ்வுலகைப் பிள்ளைகளுக்குச் சிறந்த இடமாக மாற்றிக்கொடுப்பதில் ஒவ்வொரு தனிமகனும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவேண்டும். பிள்ளைகளின் அதிகூடிய பாதுகாப்பை எப்போதும் வழங்குபவர்களாகப் பெற்றோர்கள் அடையாளப்படுத்துகிறார்கள். ஆயினும் பெற்றோரின் பாதுகாப்பிற்கு அப்பால் பாடசாலைகள், சமுதாய அமைப்புக்களின் பங்களிப்பும் இவ்விடயங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாகப் பல இடங்களில், பல விடயங்கள் உண்மையில் கோட்பாட்டளவில் பேசப்பட்டுத்தான் வருகின்றன. இது பேசப்படும் ஒரு விடயம் அல்ல. குழந்தைகளின் நன்மைகருதி அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கும் பொறுப்பைப் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இது பெரியதொரு சமூகப்பொறுப்பாகும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவலானது உலகிலுள்ள பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதில்லை என்பதே உண்மையாகும் என்றவகையில் அமைகின்றது. பிள்ளைகள் நாள்தோறும் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, வன்முறைகள் என்பவற்றுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதோடு அதற்கு ஆளாகி வருகிறார்கள். குறிப்பாக இன்று சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் என்பது சமூகத்தின் சகல மட்டங்களிலும் இடம்பெறுகின்ற மிகப்பெரிய பிரச்சினையாக உருப்பெற்று வருகின்றது. இத்தகைய துஷ்பிரயோகங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமிடத்து, உண்மையில் பிள்ளைகள் சரியான முறையில் அறிவூட்டல்களுக்கு ஆளாகவில்லை என்றும் இதுதொடர்பாக எச்சரிக்கப்படவில்லை என்றும் தெரிகின்றது. இத்தகைய நிலை இன்றுவரைக்கும் தொடர்ந்துவருகின்றன.

ஆகவே பிள்ளைகளின் பாதுகாப்பு என்பது அவர்களது முக்கிய உரிமைகளில் ஒன்றாகும். பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள் என்றவகையில் பிள்ளைகள் ஏதேனும் ஒரு பாதுகாப்பற்ற சூழலில் வாழ்கிறார்கள் என்பதை அறியும்நிலையில் அத்தகைய துஸ்பிரயோகங்களில் சிக்கிக் கொள்வார்கள் என்பதை உணர்ந்து அச்சிக்கலில் இருந்து அவர்களைக் காப்பாற்றப் பெரியவர்கள்மீது பிள்ளைகள் நம்பிக்கை கொள்ளும்வகையில் அவர்கள் செயற்பாடுகள் இருக்கவேண்டும். பிள்ளைகளை இலகுவான முறையில் அணுகி அவர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளல் வேண்டும். அவர்களைப் பயமுறுத்தித் துன்பம் விளைவித்தால் அவர்கள் தமது பிரச்சினைகளை மனம்விட்டுப் பேசமாட்டார்கள்.

சிறுவர்கள் என்ற பதமானது 18 வயதிற்கு குறைந்தவர்களைக் குறித்து நிற்கின்றபோதிலும் உண்மையில் பத்து வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு எதுவுமே விளக்கமில்லாத பருவம் உலகம் பற்றியோ, சமூகம் பற்றியோ விழிப்புணர்வு அவர்களிடம் இருக்காது. இதனால் அப்பருவத்தில் அவர்கள் சிக்கல்களில் மாட்டிக்கொள்வார்கள். ஆகவே இப்பருவத்தில் பிள்ளைகளைச் சரியான முறையில் அறிவூட்டி வளர்த்தல் முதலில் குடும்பத்தில் பெற்றோர்களின் கடமையாகும்.

இந்த உலகைப் பிள்ளைகளுக்கு உரிய சிறந்த இடமாக மாற்றும் முக்கிய பொறுப்பு முதலில் பெற்றோர்களையே சாரும். பெற்றோர்களின் பாதுகாப்பிற்கு அப்பால் பாடசாலைச் சமுதாயம் போன்ற இடங்களிலும் பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆனால் இன்று சமூகம் இத்தகைய பொறுப்பினைச் சரியான முறையில் நிறைவேற்றத் தவறியமையால் இன்று பிள்ளைகளுக்கு அச்சுறுத்தும் பாதுகாப்பற்ற இடங்கள் பல உள்ளன. இதனால் இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன்மூலம் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

**சிறுவர் பாதுகாப்பு என்பது என்ன?**



சிறுவர் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு சிறுவர்களும் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு அவர்களுக்குக் கிடைக்கும் ஆபத்தில்லாத ஒரு சூழல் ஆகும். சிறுவர்களுக்கான புறக்கணிப்புக்கள், சுரண்டல்கள், வன்முறைகள் போன்ற செயற்பாடுகளைத் தடுத்தல் அல்லது அது தொடர்பான நடவடிக்கைகள் எடுத்தல் என்பவைகள் அடங்கும். சிறுவர் பாதுகாப்பு என்னும்போது சிறுவர்கள் உடல்ரீதியாக மட்டும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் உளரீதியாகவும் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களையும் தவிர்த்துவிடுதல் என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும். எனவே பாதுகாப்பை வழங்கும் முகவர்களாகப் பெற்றோர்கள், குடும்பம், ஆசிரியர், பாடசாலை என்ற இரு முக்கிய வலுவூட்டமான காரணகளின் பங்கேற்பு முக்கியமானது என்பதை எல்லோரும் கவனத்திற்கு கொள்ளவேண்டும். குடும்பத்தில் பிள்ளைகள் உடல், உளரீதியாகப் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இன்று அதிகமாக உள்ளன. இது அவர்களின் மகிழ்ச்சியாக காலப் பகுதிகளைத் தொலைத்துவிடுவதாக அமைவதோடு கல்வியிலும் அக்கறை கொள்ளமுடியாத நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

**சிறுவர்களின் பாதுகாப்பை வழங்குவதில் குடும்பம்**

சிறுவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவதில் குடும்பத்தின் பங்களிப்பு அதிகமானதாகும். ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவத்தில் முதல் ஆறு வருடங்களும் மிகமுக்கியமானதாகும். ஒரு குழந்தை தனது வாழ்க்கைக் காலத்தில் முதல் ஆறு வருடங்களிலும் பெற்றுக் கொள்ளும் அறிவைத் தனது வேறெந்த ஆறு வருடங்களிலும் பெற்றுக்கொள்ள முடியாது என்பது ஜீன் ஜதாக்ஸ் றூசோவினது கருத்து ஆகும்.

இப்பருவத்தை ஒரு அசட்டைப் பருவமாகக் கொள்ளாது அதிபாதுகாப்பான தொரு பருவமாகக் கருதவேண்டும். ஆகவே இப்பருவங்கள் பெரும்பாலும் பெற்றோர்களின் அரவணைப்பில் வளரும் பருவமாகும். ஆகவே அவர்களின் உடல் உள வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்துவதோடு பிள்ளைகளின் பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும். அவர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கும் தமது கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கும் உரிய வழிமுறைகளைக் குடும்பம் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

குடும்பம் சமூகத்தின் ஆணிவேராகும். குடும்பத்தில் பிள்ளையின் எதிர்கால வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பாக அக்கறை குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். குடும்பம் பிள்ளைகளின் பாதுகாப்புக் கருதிச் சில செயற்பாடுகளை ஆற்றவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

01. குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றிய விழிப்பணர்வு உள்ளவர்களாயிருத்தல்.
02. வீடுசார்ந்த அச்சுறுத்தும் இடர்க் காரணிகள் பற்றித் தெரிந்துவைத்திருத்தல்.
03. பிள்ளைகளுடன் மனம்விட்டுக் கதைத்தல்.
04. கிணறு, மின்சாரம், நெருப்பு போன்ற ஆபத்தான விடயங்களில் பிள்ளைகள் தலையிடுவதைத் தவிர்த்தல்.
05. பாடசாலை, தனியார் கல்வி நிலையங்கள் போன்ற இடங்களுக்குப் பிள்ளைகள் சென்றுவருவதில் பாதுகாப்பு ஏற்படுத்தல்.
06. வீதி விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
07. இயற்கைக் காரணிகளின் ஆபத்துக்களை விளக்குதல்.
08. பாதுகாப்பற்ற சூழலில் பாதுகாப்பாகத் தப்பித்துக்கொள்ளல் தொடர்பாக அறிவுறுத்தல்.
09. கெட்ட நண்பர்கள் கூட்டம் தொடர்பாக விளக்கல்.
10. தெரியாதவர் எவராவது தரும் உணவுகளை உண்பதையோ அல்லது பானங்களையோ, பருகுவதையோ தவிர்த்தல்.
11. பெற்றோரின் அனுமதி இல்லாமல் எங்கும் செல்லக்கூடாது என விளக்கல்.
12. பாடசாலைக்குள்ளும் பிள்ளைகளுக்குச் சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்பற்ற சூழல் ஏற்படலாம் என விளக்கல்.
13. சமூக வலைத்தளங்களில் அவர்கள் தொடர்பான விளக்கங்கள், புகைப்படங்கள் போன்றவற்றைப் பதிவு செய்யாதிருத்தலை உறுதிப்படுத்துதல்.
14. தேவையில்லாத தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்க்குமாறு கூறுதல்.
15. பாடசாலை சென்று வரும் தனியார் வாகன சாரதி, நடததுனர் பற்றி அவதானமாக இருத்தல்.
16. வழியில் சந்தேகத்திற்கிடமான ஒருவரின் நடமாட்டம் கண்டால் பாதுகாப்பான வழிகளில் ஒன்றை ஏற்படுத்துமாறு கூறி வைத்தல்.
17. பாடசாலை முடிந்ததும் நீண்டநேரம் உங்களின் வருகைக்காக காத்திருத்தலைத் தடுத்தல்.
18. தேவையானபோது திடீர் முடிவுகளை எடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்தல்.
19. விருப்பத்தகாத இரகசியங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தலைத் தவிர்க்கச் செய்தல்.
20. தேவையிலாத நபர்கள் உடலில் தொட்டுப் பேசுவதைத் தவிர்க்குமாறு கூறுதல்.
21. இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான ஆபத்துக்களைக் கூறி வையுங்கள்.
22. நஞ்சு மருந்துகளைக் கவனமாகப் பாதுகாத்தல்.
24. தேவையில்லாத பொருட்களைத் தொடவேண்டாம் என விளக்குதல்.
25. தேவையில்லாத முறையில் பணத்தினைக் கையாளுதலைத் தவிர்த்தல்.

இவ்வகையான பாதுகாப்பு முறைகளைக் குடும்பத்தில் பெற்றோர்கள் தெரிந்து வைத்திருத்தல் அவசியமானது.

இன்றைய நிலையில் ஒவ்வொரு பிள்ளையும் தம்மை எதிர்நோக்கி வரும் ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு வாழும் முறைகள் பற்றிய அறிவு பெற்றோர்களால் கற்பிக்கப்படவேண்டியது ஒன்றாகும். பாதுகாப்பற்ற சூழலில் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முழுப்பொறுப்பும் பெற்றோர்களுக்கே என்பதை உணர்ந்து அதற்கேற்ப நடத்தல்வேண்டும்.

**பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலில் பாடசாலைகள்**

01. பாதுகாப்பற்ற கிணறு. சுற்றுமதில், வெளிப்புறக் கதவு தொடர்பான மிகுந்த அக்கறையுடையவர்களாக இருத்தல்.
02. சகபாடிக் குழுக்கள் தொடர்பான அக்கறையுள்ளவர்களாக இருத்தல்.
03. குடும்பம் குடும்ப அக்கங்கத்தவர்கள் தொடர்பான விடயங்கள் பற்றி அறிந்திருத்தல்.
04. பாடசாலை முடிவடைந்ததும் பிள்ளைகள் நீண்ட நேரம் நிற்பது தொடர்பாக கவனமெடுத்தல்.
05. பெற்றோர்களுடனான சந்திப்பை ஒழுங்கு செய்தல்.
06. பிள்ளைகளின் சுகாதாரம் தொடர்பாக அக்கறை உள்ளவர்களாக இருத்தல்.
07. விளையாட்டுக்களை ஒழுங்கு செய்யும்போது வகுப்புக்கும் வயதுக்கும் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்துக்கும் பொருத்தமான விளையாட்டுக்களைத் தெரிவுசெய்தல்.
08. பிள்ளைகளுக்குப் பாடசாலை நேரத்தில் ஏற்படும் சுகயீனம் தொடர்பாகவும் அக்கறைகொள்ளல்.
09. பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பாடசாலைத் தண்டனைகள் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ளல்.
10. சுற்றுலாக்களின்போது அவதானமாகச் செயற்படல்.
11. வீதி விபத்துப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
12. ஆபத்துக்களிலிருந்து எப்படித் தப்புவது என்ற விளக்கம் கொடுத்தல்.
13. நிறைய நண்பர்களைச் சம்பாதிக்க வேண்டுமேயொழிய பல எதிரிகளைச் சம்பாதிக்கக்கூடாது என விளக்கல்.
14. தேவையில்லாத பொருட்களைத் தீண்டாதிருத்தல் என விளக்கல்.
15. ஒதுங்கியிருக்கும் சிறுவர்கள் தொடர்பாக விழிப்பாக இருத்தல்.
16. உடல் சுகாதாரத்தில் அக்கறை கொள்ளும்படி விளக்குதல்.

இவ்வகையில் பாடசாலைகளில் பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்கள் அவர்களுக்கு போதிக்கப்படவேண்டும். குடும்பத்திற்கு அடுத்த நகர்வாக பாடசாலைகள் செயலாற்றுகின்றன. இதனால் பாடசாலை களின் பணி மிகப்பெரும் பணியாகும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் சிறப்பான எதிர்காலத்தை கருத்திற்கொண்டு செயற்படும்போதுதான் எதிர்காலத்தில் சிறந்த மாணவர்கள் உருவாகும் சந்தர்ப்பம் அதிகமாகும். ○



# கிராம மக்களை அச்சுறுத்தும் இடர்கள்

இயற்கை செயற்கை அழிவுகள் என்று எது நடந்தாலும் அவற்றால் முதலில் பாதிக்கப்படுவது கிராம மக்கள். கிராம மக்கள் என்று கூறும்போது அவர்களின் பொதுவான அடையாளமாக நீங்கள் அவர்களின் இனத்தையோ, மதத்தையோ, மொழியையோ வைத்துப் பிரித்துப் பார்க்கமுடியாது.

ஏழ்மையும், அரசியல் மற்றும் பொருளாதார பலமின்மையுமே அவர்களின் பொதுவான அடையாளங்களாக இருக்கும்.

பொதுவாகவே இயற்கை வளங்களையே தமது ஜீவனோபாயத்துக்கு நம்பிவாழும் அவர்கள் பாதிக்கப்படுவதும் இயற்கை, செயற்கை அழிவுகளால்தான். அகோரமாக இடம்பெற்ற ஆயுத வன்செயல்கள் தானுண்டு, தன்பாடுண்டு என்று இயற்கையோடு இணைந்து வாழ்ந்த கிராம மக்களையே வெருண்டோட



வைத்தது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற பாகுபாடில்லாமல் பொதுவாக கிராமவாசிகள் என்ற அடையாளத்தின் அடிப்படையிலேயே அரசியல் பொருளாதார பலமில்லாதிருந்த அந்த மக்கள் அழிவுகளைச் சந்தித்தார்கள்.

ஆயுத வன்முறைகள் இப்பொழுது முடிவுக்கு வந்திருக்கின்ற தறுவாயில் இப்பொழுது காட்டு யானைகளின் தொல்லைகளால் கிராம மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறார்கள்.

நாம் ஏற்கனவே கூறியபடி, இந்த காட்டு யானைகளால் ஏற்படுத்தப்படும் ஆபத்துக்களுக்கும் இனமத பேதம் இல்லை.

யானைகளால் கிராம மக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் அதிகரித்துள்ளநிலையில் அது அக்கறையுள்ள தரப்பாரின் கவனத்தில் எடுபட்டுள்ளதா என்ற கேள்வி தொடராகவே எழுப்பப்பட்டு வருகின்றது.

ஆனால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் ஓரக்கண் பார்வையில்கூட அது எட்டவில்லையா என்பதுதான் கிராம மக்கள் கேட்கும் துயர் நிறைந்த கேள்வி.

கிராமப்புறங்களில் அதிகரித்து வரும் காட்டு யானைகளின் தொல்லை தொடர்பாக கிழக்கு மாகாணத்தின் கிராமப்புற மக்கள் கலங்கிப்போய் உள்ளார்கள்.

இலங்கையில் மனிதருக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்துவருகின்றன. உயிரிழப்பும் அதிகரித்துள்ளது.

உலகின் மிகப்பெரிய விலங்கான காட்டு யானைகளின் முக்கியமான வாழிடங்களில் இலங்கையும் ஒன்று.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால் சுவடு தெரியாமல் இன்னுமொரு பிரச்சினை அங்கு தொடர்ந்துகொண்டிருக்கிறது.

ஆளுடன் ஆள் மோதியது முடிந்து இப்போது ஆனைக்கும் ஆளுக்கும் இடையில் மோதல் நடக்கிறது.

மனிதனுக்கும் காட்டு யானைகளுக்கும் இடையிலான் இந்தச் சண்டை இலங்கையில் நடப்பது நிலத்துக்காக. இந்த மோதல்களில் ஒவ்வொரு ஆண்டும் 80 ஆட்களும் 225 காட்டு யானைகளும் பலியாக நேரிடுகிறது.

அதுமாத்திரமல்லாமல், இந்த யானை மனித மோதல்களால் இலங்கையில் மொத்தமுள்ள 9 மாகாணங்களில் 8 மாகாணங்கள் பாதிக்கப்படுகின்றன.

நாட்டின் பெரும்பாலும் எல்லாப் பகுதிகளிலும் காட்டு யானைகள் சுதந்திரமாக நடமாடிவருவதால் இந்தப் பிரச்சினை இப்போதைக்குத் தீரும் என்று தெரியவில்லை.

இயற்கைப் பாதுகாப்பு ஆர்வலர்கள் இந்த விவகாரத்தை நெருக்கடி என்று வருணிக்கிறார்கள்.

மனிதர்கள் காட்டு யானைகளின் வாழ்விடங்களில் குடியேறிவிட்டார்கள் என்று சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றார்கள்.

அதனால் மனிதர்களின் பண்ணைகளில் காட்டுயானைகள் அத்துமீறி நுழைவதுடன் அவர்களது பயிர்களையும் மனிதர்களையும் அழிக்கமுனைகின்றன.

இது உண்மையில் ஒரு நெருக்கடி நிலை என்கிறார்கள் இலங்கை வனவிலங்கு இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள்.

ஆனால், காட்டு யானைகள் இலங்கையில் இன்னமும் ஒரு கலாசார சமய சின்னமாகவே பார்க்கப்படுகின்றன.

வன பாதுகாப்புச் சங்கத்தின் உதவியுடன் சில கிராமங்களில் யானைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அதற்காகச் சில இடங்களில் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வேலிகள் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தி காட்டுயானைகளைப் பயந்தோடச் செய்யஉதவும். ஆனால் காட்டு யானைகளை அது கொல்லாது.

காட்டு யானைகளைச் சுதந்திரமாக மேய்ந்துவர அனுமதிக்கவேண்டும் என்று இயற்கை ஆர்வலர்கள் கூறுவதால் காட்டுயானைகளைச் சுற்றி அல்லாமல் கிராமங்களைச் சுற்றியே இந்த வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.அதேவேளை எலி அலர்ட் என்று கூறப்படுகின்ற ஒருவகையான முறை இங்கு பயன்படுத்தப்படுகின்றது.

அதாவது, காட்டு யானைகள் வந்து இந்த வேலிகளை உடைக்கும் போது அந்த முறைமை தானாகவே கிராம முக்கியஸ்தர்களின் கைத்தொலைபேசியிலிருந்து டெக்ஸ்ட் மெசேஜ்களை அனுப்பும். இதனை அறிமுகப்படுத்தியவர் லங்கா விஜேசில்வா. இது கிராம மக்களுக்கு மேலதிக பாதுகாப்பை வழங்குவதாக அவர் கூறியிருந்தார்.

இந்த வேலிகளுக்குப் பக்கத்தில் பாதுகாப்பாக மரம் ஒன்றில் தங்கும் வாடி வீடுகளையும் சில குடும்பங்கள் அமைத்துள்ளன. இந்த வேலி, நிலைமைகளை மேம்படுத்தியிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

காட்டு யானைகள் குறித்த அச்சமும் அழிவும் இன்னமும் தொடர்கின்ற அதேவேளை கலாசாரரீதியாகவும் மத ரீதியாகவும் யானைகளைப் போற்றும் தன்மையும் இன்னமும் இலங்கையில் இருக்கிறது.

“குப்பி விளக்குகளோடு குந்திக்கொண்டிருந்த நாம் காட்டு யானைகள் பிளிறிக் கொண்டுவருவதைக் கேட்டு விளக்கை அணைத்து குழந்தைகளைக் கையில் பிடித்துக்கொண்டு மூச்சுவிடாமல் அசைவற்று இருந்தோம். பிள்ளைகள் கலவரத்தாலும் தூக்க மயக்கத்தாலும் அழுவார்கள். அவர்களது அழுகுரலைக் கேட்டால் யானைகள் எமது குடிசையை அடித்து நொருக்கிவிடும். இதனால் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு சாவா அல்லது வாழ்வா என்றுதான் ஒவ்வோர் இரவும் கழிகிறது. விடியும் வரை கண்களில் தூக்கம் இருக்காது. நெஞ்சு படபடத்தபடியே இராப்பொழுது கழியும்” என்று தனது அச்சம் கலந்த வாழ்க்கையை விவரிக்கிறார் மட்டக்களப்பின் கிராமப்புறத்தில் வாழும் ஒரு குடும்பப்பெண்.

இது காட்டு யானைகளின் அச்சுறுத்தலால் சூழப்பட்ட ஒட்டுமொத்தக் கிராமத்தவர்களின் அச்சமும் பீதியும் கலந்த வாழ்வை பட்டம் பிடித்துக்காட்டுவதாய் உள்ளது.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முறுத்தானை ஈச்சையடிக் கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி தங்கமணி (வயது - 55) தனது குடும்பத்தில் தொடராக 4 பேரை காட்டு யானைத் தாக்குதலினால் பறிகொடுத்து தவித்து நிற்கிறார்.

கறுவாப்பிள்ளை எனும் தனது அப்பாவின் தகப்பனாரை கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் வைத்து காட்டு யானையொன்று தாக்கிக் கொன்றது என்று கூறிய அவர், கண் கலங்கியவராக கடந்த 18 வருடங்களுக்கு முன்னர் எனது தாய் கந்தப்பர் பாக்கியம் (அப்போது வயது - 45) மற்றும் எனது தங்கை சோதிமலர் (அப்போது வயது - 18) ஆகியோர் தூங்கிக்கொண்டிருக்கும்போது காட்டு யானையொன்று அவர்களை அடித்துக் கொன்றது என்றார்.

அத்துடன் அவரது துயரத்திற்கு முடிவு வந்துவிடவில்லை. தனது தங்கையின் கணவர் கோவிந்தன் (அப்போது வயது - 35) 2 வருடங்களுக்கு முன்னர் இதே கிராமத்தில் வைத்து தூங்கிக்கொண்டிருந்தபோது காட்டு யானை துவம்சம் செய்ததில் பரிதாப-

**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

கரமாக உயிரிழந்தார் என்றும் அவர் தனது முடிவுறாத துயரத்தைப் பகிர்ந்து கொண்டார்.

தனிடையே மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலடங்கும் எல்லைக் கிராமங்களில் இடம்பெற்றுவரும் காட்டு யானைகளின் தாக்குதல்களை தடுத்து நிறுத்த நிரந்தர நடவடிக்கையினை எடுக்க வலியுறுத்தி 30 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பிரதேச செயலக வீதியினை மறித்து கடந்த திங்கட்கிழமை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலகத்தின் வாயில் கதவினை மூடி பிரதேச செயலாளர் உட்பட ஊழியர்களை உள்ளே செல்ல கிராம மக்கள் அனுமதிக்கவில்லை.

கடந்த ஒரு மாத காலத்தில் போரதீவுப் பற்றின் எல்லைப் பிரதேசங்களில் காட்டு யானைகளின் தாக்குதல்கள் காரணமாக 5 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் காட்டு யானைகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்கு இதுவரையில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லமுடியாத நிலையிலும் தமது வாழ்வாதாரத்திற்கான தொழிலை செய்யமுடியாத நிலையிலும் தாங்கள் அச்சத்துடன் கண்ணீரும் கம்பலையுமாக காலங்கழிப்பதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானை - மனிதமுறுகல் இனியும் தொடரலாம்.

# தமிழரின் பாரம்பரிய கலை வடிவமான

# வசந்தன் கூத்து

## பாதுகாக்கப்பட வேண்டும்

தமிழரின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான வசந்தன் கூத்து இன்று அருகிக்கொண்டு வருகின்ற நிலையிலே அதனைப் பற்றிய ஆய்வு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த வசந்தன் கூத்தானது. அழகியல் உணர்வினைக் கொண்டமைவதோடு சிறுவர்களுடைய அரங்கச் செயற்பாடாகவும் பாமர மக்களிடையே பயிலப் பட்டுவருகின்ற ஒன்றாக இருக்கின்றவேளையிலும் அவை ஓர் அழகுசார் கிராமிய கலை என்பதில் வியப்பில்லை.

ஈழத்து தமிழ் பாரம்பரியத்திலே தமிழருக்கு என தனியான கலைகளை வைத்திருக்கின்ற கலைகளில் இதுவும் பிரசித்தமானதாக பல்வேறு பிரதேசங்களிலும் ஆடப்பட்டுவந்தாலும் இவற்றின் சிறப்பான தன்மையை மட்டக்களப்பு பிரதேசத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றிலே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தேத்தாத்தீவு என்னும் கிராமத்தில் ஆடப்பட்டுவரும் வசந்தன் கூத்தின் ஆற்றுகையினை அடிப்படையாகக்கொண்டே இக்கட்டுரையினை எழுதுகிறேன்.

இங்கு வசந்தன் ஆடப்பட்டு



கலை வளர்த்துவரும் பெரியார்கள்

சிறார்களை அளவு பிரமாணங்களுக்கேற்ப தெரிவுசெய்து விடுவார்கள். அன்றையதினம் சிறார்களின் மனதில் ஓர் சந்தோசமான நாளாக ஆரம்பிக்கத் தொடங்குகிறது என்றார்.

இவ்வாறு இடம்பெறத் தொடங்கினாலும் சிறார்கள் கல்வி பயிலுகின்றவர்கள் ஆதலால் கூத்து பயிலுகின்ற நேரமும் மாலை நேரமும் ஆதலால் அவர்களுக்கு பிரத்தியேக வகுப்பு, கூத்து எனப் பல பிரச்சினைகள் ஏற்படும். பின்னர் அதற்கேற்ப நேரமாற்றங்களைச் செய்து கூத்து செயற்பாட்டில் ஈடுபடுவது அவர்களுக்கு சந்தோசமாக அமையும்.

அதுமாத்திரமின்றி அவர்கள் பெரியோர் சொற்கேட்டு அந்த அண்ணாவியார் குழாமுடன் அந்நியோந்நியமாகி எங்கிருந்து தூரச் சொந்தமாக இருக்கும்.

இவர்களை விருத்திசெய்யும் களமாகவும் இக் களநிலை முன்னெடுக்கப்படுகின்றது.

அவர்களைக் குறிப்பிட்ட நேரத்திற்கு அழைத்தவுடன் அவர்கள் சேருதல், அண்ணாவியாரின் சொற்கேட்டு நடத்தல் என்பன சிறுவனின் துள்ளல் பருவத்திலும் அவனை அவனே கட்டுப்படுத்தி வாழும் அதிகாரத்தனமற்ற அன்புக்குள் கட்டுப்பட்டு வாழுதல் என்பன சிறுவர்களின் குறுநாள் கலைக் கூட்டமாக களரி விளங்குகின்றது என்பது வசந்தனின் சிறப்பாகவே நாம் பார்க்கலாம். அத்தோடு இவ்வாறாகப் பயிலப்பட்டு வரும்போது அவர்களை அரங்கேற்றம் செய்து அதனை ஊருக்குக் காட்டவேண்டிய நிலை ஏற்படும்போது அதற்கான பூர்வாங்க வேலைகளில் அனைவரும் ஈடுபடுவார்கள்.

சமூகஉறவினை புதுப்பித்தலுடன் ஏனைய கூடத்தாரும் சிறுவர்களின் நண்பர்களும் கண்டுகளிக்க வரும்போது அவர்களுக்கும் தாமும் ஆடவேண்டும் என்ற ஆசையும் ஊட்டுவதோடு ஏதோ ஒரு வாரத்தில் அவர்களையும் அந்த உணவர்வுக்குள் கொண்டு சென்றுவிடுகின்றது. இவ்வாறாக அவர்களும் பாடசாலைகள்போன்ற இடங்களில் பயின்றுவருவது இந்த கிராமிய கலையினை வளர்க்கின்றதாக அமையும்.

இவ்வாறாக அரங்கேற்றப்பட்டு கோயில்களில் ஆடுவதற்காக செல்லுகின்றவேளைகளில் சிறுவர்கள் ஏதோடு ஓர் புது இடங்களுக்கு நாம் கூத்தினை ஆடப் போகின்றோமே என்கின்ற எண்ணத்தினால் மேலும் கூத்தில் ஈடுபடல் நேரத்திற்கு தயாராதல் என்பன தங்களைத் தாங்கள் அறியாமலே அவர்களுக்குள் சேர்வதும்



இதன் பழமையினை இல்லாமல் செய்திருப்பதும் வேதனைக்குரிய விடயமாகும். இக்கலையினை சிதைவுறாது பாதுகாத்து வளர்ப்பதோடு இவ்வாறான சிறுவர் அரங்கச் செயற்பாடான இக்கூத்துக் கலையினை இன்றைய சமுதாயத்தில் சிறுவர்களிடையே சிறுவயதிலே தனித்திருந்து போட்டி, குரோதம், ஒருவரை ஒருவர் வீழ்த்துதல், தான் முந்த வேண்டும் என்ற கணினிமயமான இக்கால கட்டத்திலும் இவ்வாறான ஓர் அரங்கச் செயற்பாட்டினூடாக சிறுவர்களைப் பெரியவர்களுடனும் கூடிச் செயற்படுகின்ற தன்மையினைக் இக்கூத்தானது ஏற்படுத்தியிருக்கிற தோடு இதனால் இச்சிறுவர் அரங்கு உளவியல் மற்றும் உடலில் விருத்தி போன்றனவும் உருவாவதற்கு இவ்வர ங்கச் செயற்பாடானது உதவுகின்றது.

வசந்தன்கூத்து சிறுவர்களை ஒன்றிணைத்து சிறுவர்களின் கற்றல் மகிழ்விப்பு சிறுவர் அரங்கப் பண்புகளை முன்னெடுத்து செல்கின்ற ஓர் கல்வி ஊடகமாக இவ் அரங்கச் செயற்பாட்டினைக் காணலாம்.

இதற்கும் மேலாக இவ் ஆட்டத்தினை பார்க்கின்ற சிறுவர்களிடையே தாமும் முன் வந்து இவ்வாறு செயற்படக் கூடிய ஓர் ஆர்வத்தினையும் வளர்த்தெடுப்பதனையும் இதனூடாக கோயிலில் ஓடுதல், கடைபார்த்தல் என்கின்றதற்கும் அப்பால் இவ்வாற்றுகைகள் இடம்பெறுகின்ற வேளைகளில் ஏனைய சிறுவர்களை இவ்வாற்றுகை ஒரு வகையில் கவர்ந்துகொண்டு அவர்களையும் ஒருவகையில் முனைப்புடையதாக, வளமானவர்களாக ஓர் கவர்ச்சியினைக் கொடுத்து ஒருவகையில் அவர்களையும் ஆடுதல், பாடுதல் என்கின்ற ஓர் செயற்பாட்டுக்குள்

வருவதோடு இதற்கென ஓர் பரம்பரையே இருந்து செயற்பட்டு வருகின்றமையினைக் காணலாம். இவர்கள் வசந்தன் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்களை கொடுத்திருப்பதனைக் காணலாம்.

வசந்த காலத்தில் ஆடியதால் வசந்தன்கூத்து எனவும் சிறுபிள்ளைகளை வசந்தன் பிள்ளைகள் எனவும் இவ்வாறான பிள்ளைகளால் ஆடப்படுவதால் வசந்தன் கூத்து வசந்த மகாராசனின் மனைவியை மகிழ்விப்பதற்காக ஆடியதால், கூறுவதோடு இவ் ஆற்றுகை கண்ணகியின் கோபம் தணிக்க வசந்தன் பிள்ளைகள் கோல்கொண்டு ஆடியதால் வசந்தன் எனவும் பெயர் வந்ததென ஓர் விழிமிய சார்பான கதையும் இருப்பதாகவும் வசந்தனை விளக்கும் இவர்களின் இக்கலைவடிவமானது முழுக்கமுழுக்க சிறுவர்களின் ஆற்றுகையாகவே இடம்பெறுவதனை இதன் அறிக்கையில் இருந்து காணலாம்.

இவ்வசந்தன் ஓர் பருவகால செயற்பாடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இந்த வசந்தன் ஆற்றுகை வைகாசி மாதம் இடம்பெறுகின்ற கண்ணகை அம்மன் ஆலய நேர்த்திக் கடனுக்காக ஆடப்படுவதனால் தை, மாசி, பங்குனி காலப்பகுதியில் சிறுவர்களை அழைத்து அவர்களுக்கு வசந்தன் பழக்கப்பட்ட ஆயத்தமாகும்.

இந்த வேளையில் சிறுவர் மாத்திரமின்றி ஊரிலுள்ள பெரியவர்களும் அழைக்கப்பட்டு அண்ணாவியாரால் வசந்தன் ஆடப்படப்போகிறது என அனைவரினதும் முன்னிலையில் கூறப்படுகின்றவேளை அனைவராலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு, எத்தனை சிறார்களைக் கொண்டு ஆடுவது யார் யாரைத் தெரிவுசெய்வது என்பது சிறார்களின் எண்ணிக்கையிலிருந்து தேர்வு இடம்பெறும்.

அன்று சிறுவர்களும் பெரியவர்களுடன் அமைதியாக மரநிழலில் அமர்ந்திருந்து அண்ணாவியார் குழாமும் தேர்வில் ஈடுபட்டு

சிறார்களும் ஓர் குடும்பம் மாதிரி இணைந்து மகிழ்வாக வாழுகின்ற ஓர் நிலை ஏற்படுத்தி சிறுவர்களின் எழுச்சியையும் ஆளுமையையும் வளர்க்கின்ற சூழலை இந்தக் கூத்து ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

சிறுவர்கள் ஆடலைப் பழகுகின்றவேளையில் அண்ணாவியார் பாடல்களை பாடுவார். அதாவது தரு, விருத்தம் போன்றவற்றினால் கவரப் படுகின்றார்கள். அதனால் ஆடல், கோலங்களை பயில்கின்றார்கள். இதனால் பெரியவர்களால் செய்யமுடியாத துள்ளல், பாய்தல், குந்துமிதி, பொடியடி, வீசரணம், சிறுவட்ப எனப்பல ஆடல் அசைவுகளை பயில்வது அவர்களின் பரிபூரண ஆளுமையின் விருத்தியையும், உடல் விருத்தியையும் விருத்தி செய்கின்றவகையில் அமைவதோடு அவர்களின் சிந்தனைகளின் எழுர்ச்சிகளும் மேலோங்கி உதவிசெய்வதாக இந்த வசந்தன் அமைவது மிகவும் முக்கியமானதாக காணலாம்.

அவர்கள் மாத்திரமின்றி ஏனைய பார்வையாளர்களாக இருக்கின்ற சிறுவர்களும் இதனை இரசனை உணர்வோடு கூத்துப் பார்ப்பதற்காக அந்த ஆடல் தொடங்கியபொழுதே வந்து சேர்கிறார்கள்.

கணினி தொலைக்காட்சி என சிறுவர்களை தன்வசமாக உள்வாங்கி வைத்திருக்கும் இந்தக் காலச் சூழலில் இவ்வாறான சிறுவர் சமூகங்களை இணைத்துக் கொள்வதாக இந்த கூத்து அமைகின்றது. அதில் ஆடப்படும் சிறார்களையும், பார்வையாளர்களாக இருக்கின்ற சிறுவர்களும் ஓர் இடைவேளை நேரங்களில் இந்த ஊடகவலையில் இருந்து விடுபட்டு ஒன்றாக தாகசாந்திகளில் கலந்து மகிழ்வாக வாழுவது என்பது எல்லாச் சூழலிலும் கிடைக்காதது.

மேலும் இவ்வாறாக செல்கின்ற வேளையிலே சிறுவர்களின் ஒழுக்கவிழுமியங்களும், கடமை உணர்வுகளும், பொறுமை எனப் பல்வேறு நலன்களுக்கு

சிறார்களின் பெற்றோர்கள், பொதுஅமைப்புக்கள் என இவ் வேலைகளில் கூந்தர் குழாமுடன் இணைந்து செயற்படுபவர். இதில் சிறார்கள் மகிழ்வு உணர்வுடன் இவர்களே இதில் முழுமுனைப் புடன் அதற்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபடுவார்கள்.

கூத்துக்கான ஆடைகளைத் தெரிவு செய்தல் மாலைகள். தலைப்பாகைகள், சதங்கை கூத்துக்கான கம்பினை (கோல்) அலங்கரித்தல் என ஆர்வமாக செயற்படுவார்கள். எப்போது அரங்கேற்றம் என இமை மூடாது செற்படுபவர்களாக இருப்பது அவர்களில் ஊக்கத்தினைக் காட்டுகின்றது.

அரங்கேற்றத்தில் அழைப்பிதழ் கொடுக்கின்ற வேலைகளில் சிறார்களே முன்நின்று செயற்படுவர். அரங்கேற்றத்தில் ஓர் வருடமாக நினைத்து தம் உறவினரின் வருகையை எதிர்பார்க்கும் இந்த சிறார்களுக்குரிய வருடம் அன்றுதான் எனும் மகிழ்வுடன் வாழும் நாள் அன்றாகும். ஏனைய கிராமத்தில் இருக்கும் அவர்களது உறவுகளும் இதில் கலந்து மகிழும் நாளாக அன்று இருப்பதோடு அரங்கேற்ற கலரியில் கௌரவிப்புக்கள் எல்லாம் இடம்பெறும்.

இவ்வாறான அரங்கேற்ற நாளில் மக்களின் பலர் கூடுவதால் அந்த இடம் களைகட்டும். அதில் சிறுகடை வியாபாரிகள் தாம் சிறு இலாபமானது பெறவேண்டும்.

எனும் நோக்கோடு சிறுகடைகளைக் கொண்டு வருவதும் அதில் சிறார்களின் உறவினர்கள், ஏனையவர்கள் எனப்பலரும் பொருட்கள் வாங்கி மகிழ்வுடன் இருப்பது ஓர் சந்தோசமாக அமைவதும், அனைவரது மனதினையும் இன்பத்தில் ஆழ்த்துவதோடு

அவர்களின் பெற்றோருக்கு சிறுவர்களின் நலனுக்காக உதவ வேண்டும் எனும் எண்ணமும் மேலோங்கும் அளவிற்கு சிறுவர்கள் இவற்றில் முனைப்புடன் செயல்பட அவர்களின் வயது, மனநிலை போன்றன உறுதுணை செய்கின்றது.

மேலும் இவ்வாறான இடங்களில் கூத்து ஆடச்செல்லும்வேளையில் விருத்தங்கள், தாளிசைகள் பாடுவதற்காக சிறார்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும்போது அவர்கள் முனைவது என்பது அவர்களை கல்வித்துறையில் முன்நோக்கி செல்கின்ற நிலைகளுக்கும் வழியமைக்கின்ற வகையிலும் கூத்து விளங்குகின்றது எனலாம்.

இவர்கள் வயதுடையவர்களுடன் கோயில்போன்ற இடங்களுக்கு அவர்களின் கட்டுப்பாட்டுடன் செல்வது போன்றனவும் பணிவுபோன்றவற்றினையும் வளர்ப்பதுடன் கலைஞர்களின் பணிவுகள் போன்றனவும் சிறார்களைச் சார்கின்றது. அத்தோடு நேர்த்தி அழகியல் போன்றன சிறார்களை சார்கின்றது என்பதும் கூத்தின் அறிவூட்டல் என்றே கூறலாம்.

இவ்வாறான சின்னஞ்சிறார்களினால் வெளிப்படுத்தப்படும் கோல்கொண்டு ஆடும் வசந்தனூடாக சில சிறார்கள் நற்பழக்கம் மற்றும் பொறுமை, விட்டுக் கொடுப்பு, ஞாபகசக்தி, கற்பனைத்திறன் எனப் பல்வேறு விடயங்களுடன் வசந்தன் பற்றிய அறிவு, வரலாற்றுக் கதைகள், கிராமியக் கதைகள், தொழில்சார் கதைகள் எனப் பல்வேறு அறிவுகளை இவ் அத்தியாயத்திலே பெற்றுக்கொள்கின்றார்கள்.

எனினும் இக்கலையினை சிலர் துஷ்பிரயோகம்செய்து

கொண்டு செல்வதனை எமது சிறார்களின் ஊடாக அவதானிக்கக்கூடியதாய் இருக்கின்றது.

எனவே இவ் ஆற்றுகையானது ஓர் சிறுவர் அரங்கச் செயற்பாடே என்பதற்கு எந்தவித ஐயமும் இல்லை. இதில் இடம்பெறுகின்ற தெரிவு, பயிற்சியளித்தல், தாமாக ஒன்றை மனனம் செய்துகொள்ளல், தெரிவுகளின்படி ஒத்திகைகள், அரங்கேற்றம் எனப் பல்வேறு அரங்கிற்குரிய செயற்பாடுகளை சிறுவர்களின் தன்மையில் பார்க்கக்கூடியதாய் இருக்கின்றது.

கந்தப்பன் சூரியகுமார்
கலை கலாசார பீடம், கிழக்கு பல்கலைக்கழகம்


இந்த நிலையில் தாமாகவே தாம் சிறுவர்கள் என நினையாது தாம் ஓர் ஆற்றுகையைச் செய்கின்றோம் என முனைப்புடன் செயற்படும் இச்சிறார்களின் பிஞ்சி உள்ளங்களில் இக்கூத்து முயற்சியினை ஓர் சிறுவர் அரங்காக காணுகின்றோம். இது ஓர் சிறுவர் அரங்கச் செயற்பாடே எனலாம்.

எனவே இக்கலையினை ஏனைய சிறார்களுக்கும் முறை தலைமுறையாக கையளித்து அவர்களில் பாடல், மகிழ்விப்பு, ஒப்பனை, வினோதம் பயிற்சி என உள வியல் செயற்பாடுகளோடு உடலியல் விருத்திக்கும் ஒத்தாசை வழங்குகின்றது. எனவே இதனை வளர்த்து கிராமிய மண் வாசனையுடன் செழுமை பெறச் செய்து என்றும் வாழும் கலையாக மாற்றி சிறுவர் அரங்கினை வளம் பெறச் செய்வது எமது அனைவரினதும் தலையாய கடமையாகும்.



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# "விளையும் பயிரின் முளை!"

தகப்பனார் கூறிய வார்த்தைகளை காதில்போட்ட சேகரன் மின்சாரத்தால் தாக்குண்டவன்போன்று திடுக்குற்றவனாகக் கேட்டான். "தம்பி இருக்கிற வியாதியை எங்களுக்கல்லவா தெரியும். உனக்கு அப்படித்தான் இருக்கும். ஏதோ பலவீனம் உனக்கு ஏற்பட்டுள்ளதாக நினைக்கிறம்.

மேலும் அழுத்திக் கூறியதைக் காதுற்றவன் தந்தையை எதிர்த்துப் பேசும் விருப்பம் இல்லாமல் வாதாடுவதை நிறுத்திக் கொண்டான்.

"நாளைக்கே ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும்..."

தகப்பனார் இவ்விதம் கட்டாயப்படுத்திக் கூறிச்சென்றதும் "எதையாவது செய்வதைச் செய்யட்டும்" எனப் பேசாமல் இருந்தாலும் அவனுள் பிரளயமே தோன்றிக் குழம்பியது.


"அப்படி ஏதும் தன்னிடம் தன்னை அறியாமலே இருக்கிறதா" என்பதற்கு "இல்லை" என்னும் முடிவையே அவனால் எடுக்கவும் முடிந்தது.

பெற்றோரின் விருப்பையும் நிராகரித்துவிட அவன் விரும்பவில்லை. அவனால் நிராகரிக்கவும் முடியவில்லை.

அதிகாலையே எழுந்து தாயார் அன்னம் அன்றைய அலுவல்களில் இயந்திரமாக செயற்பட்டுக் கொண்டிருந்தாள். பொழுது நன்றாகப் புலர்ந்த பின்னால் சேகரனை டாக்டரிடம் கூட்டிப்போக வேண்டி இருந்ததாலே அவளும் அப்படிச் சற்றுச் சுறுசுறுப்பாக வேலைகளைக் கவனித்தாள்.

நேரமும் நகரப் பொழுதும் மலர்ந்தது. கதிரவன் நன்றாய் பிரகாசிக்கத் தொடங்கியிருந்தான். காலைச் சாப்பாட்டை முடித்து டாக்டரைச் சந்திக்கப் போவதற்கான ஆயத்தங்களில் குடும்பத்திலுள்ள நால்வரும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அவ்வேளைகூட சேகரனின் சகோதரி நளினிக்கு நளினம் விட்டுப் போகவில்லை.

"சகோதரனின் பரிதாபகர நிலையை எண்ணி ஏங்கும் சகோதரி" போன்று சேகரனைப் பார்த்து அடிக்கடி நடித்துப் பாசாங்கு செய்துகொண்டிருந்தாள்.



(தொடரும்)



## வாரம் ஒரு திருக்குறள்

### அன்புடைமை

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை**
**வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று.**

அகத்தில் அன்பு இல்லாமல்
வாழும் உயிர் வாழ்க்கை வளமற்ற
பாலைநிலத்தில் பட்டமரம்
தளிர்த்தாற் போன்றது.

குறள் : 78

# தகவல்கள்

**நல்ல காரியத்திற்கு...**

திருக்குறளார் ஒருசமயம், ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று இருந்தார். எதிர்பட்ட நபரிடம் "நீங்க விசேஷத்திற்குப் போகலை?" என வினவ... அவர் "எவன் என்னை கூப்பிட்டான்?" அப்படின்னார். "உடனே பெரியோர்... " அப்படி சொல்வது தவறு. மனிதன் நல்ல காரியங்களுக்கு தானாகப் போகவேண்டும்.

மிருகங்கள்தான் கெட்ட காரியங்களுக்கு தானாகப் போகும். எப்படி எனில் "ஒரு மாடு தானாக பால் கறக்காது. ஆனால் ஒருவரை முட்டவேண்டுமானால் அது தானாகப் போய் முட்டும். அதனால் விலங்குகளை போலின்றி மனிதன் நல்ல காரியங்களுக்கு தானாகப் போய் செய்யவேண்டும்" என்றார்.

**மனிதாபிமானம்**

ஜோர்ஜ் ஹெர்பர்ட் என்ற ஆங்கிலேயர் சிறந்த பாடகர். ஒருசமயம் அவர் கச்சேரி செய்வதற்குச் சென்றுகொண்டு இருந்தார். வழியில் மிகுந்த பாரத்துடன் ஒரு குதிரை வண்டி ஓட்டுபவர் வண்டியைச் சிரமத்துடன் தள்ளிக்கொண்டு செல்வதைப் பார்த்தார்.

மனம் பொறுக்காமல் ஜோர்ஜ் ஹெர்பர்ட்டும் அவருடன் சேர்ந்து அந்த வண்டியைத் தள்ளியபடி உரிய இடத்திற்குக்கொண்டு சேர்த்தார். பிறகு தமது கச்சேரிக்குச் சென்றார். வண்டியைத் தள்ளியதால் அவரது உடைகள் கசங்கி அழுக்காகிவிட்டன. கச்சேரி நடத்துபவர்கள் அவரிடம் "நீங்கள் எல்லாம் ஏன் இதுபோன்ற காரியத்தில் ஈடுபடுகிறீர்கள்? இப்போது அழுக்கான உடையுடன் நீங்கள் கச்சேரி செய்ய வேண்டியிருக்கிறதே" என்றனர்.

உடனே ஜோர்ஜ் ஹெர்பர்ட் "கவலைப்படாதீர்கள்! நான் அந்த வண்டியோட்டிக்குச் செய்த உதவி இரவில் எனக்குச் சங்கீதமாக ஒலித்துக்கொண்டு இருக்கும். சரியான சமயத்தில் நான் அந்த உதவி செய்யத் தவறி இருந்தால் என் சங்கீதம் அபஸ்வரம் தட்டியதாக ஆகிவிடும்" என்றார் அமைதியுடன்.

**தேடல்...**

புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் பால்சாக். அவர் வசித்த அறைக்குள் ஒரு திருடன் நுழைந்து மேஜையை ஆராய்ந்துகொண்டிருந்தான். இதைப் பார்த்ததும் பால்சாக் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறாய்...?" என்றான் திருடன்.

அதற்குப் பால்சாக் "பகலில் என்னால் காணமுடியாத பணத்தை, இரவில் கண்டுவிடலாம் என்று தேடுகிறாயே... அதை எண்ணித்தான் சிரிக்கிறேன்!" என்றார்.




பேரின வாத்து



நாரை

**பெரிக்ரைன் ஃபால்கான்ஸ், இராசாவளி வகை கழுகினத்தைச் சேர்ந்த பறவையாகும். இதற்கான இரையைக் கண்டுகொண்டால் மணிக்கு 360 கிலோமீற்றர் ஆழத்திற்குச் சீறிப் பாய்ந்து இரையைத் தாக்கும் தன்மை கொண்டது.**







பேரின அன்னம்



வாத்து



சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 26.10.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1117**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1117**

**என்.பவித்ரன்,**
**பூண்டுலோயா.**

பரிசுக்குரியவர்: 1115

பாராட்டுக்குரியவர்கள்

01. சு.செந்தூரன், நானாட்டான், மன்னார்.
02. சி.தேவகி, பிரதான வீதி, கதிர்காமம்.
03. எம்.நிவேதிதா, பரந்தன், கிளிநொச்சி.
04. எஸ்.அக்சயன், தொட்டிலடி, சங்கானை.
05. அ.பாவனா, முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்.
06. என்.சியா, முள்ளியவளை, முல்லைத்தீவு.
07. எம்.சமந்தா, உடப்பு, புத்தளம்.
08. ச.அரவிந்த், கொடிகாமம் வீதி, பருத்தித்துறை.

## பொது அறிவு

* முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து
* மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது - மூளையில் உள்ள செல்கள்
* எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதை கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு
* இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி
* ஒரு மணிநேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது - நெருப்புக்கோழி
* எறும்புகள் உள்ள வகைகள் - 14 000 (அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)
* நயாகரா நீர்வீழ்ச்சியை கண்டுபிடித்தவர் - லூயிஸ் ஹெனபின்
* ஆசியாவில் முதன்முதலாக தொழில் மயமான நாடு எது - ஜப்பான்
* சூரியக் குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் - புதன்


வாரமொரு வாழ்வியற் சிந்தனை


# "கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்"



காலங்கள் கடந்தும் காதோரம் பொருள் சொல்லும் கண்ணதாசனின் வரிகள் இவை. இந்த பூவுலக மாந்தர்களின் அவதரிப்பின் சாராம்சம் எது?.... என்பதை எண்ணெழுத்து அண்ணளவாக்கத்தில் அருமையாகச் சொன்ன அற்புதக் கவிஞர் அவர். இந்த பூமியில் பிறந்த நாம் எத்தனையோ சொற்பனங்கள் காணுகின்றோம். அத்தனைக்கும் இந்த அகிலமதில் அர்த்தம் கிடைப்பதில்லை. "கனவு காணும் வாழ்க்கையாவும் கலைந்து போகும் கோலங்கள் துடுப்புக்கூடப்பார மென்று கரையைத் தேடும் ஓடங்கள்" இந்த வரிகளின் ஆழங்களை சற்று சிந்தித்துப்பாருங்கள் துடுப்பு என்பது ஓடத்தில் ஓர் அங்கம் எத்தனையோ பாரங்களைச் சுமக்க வேண்டிய அந்த ஓடங்கள் தனது அங்கங்களைக் கூடச் சுமக்க முடியாமல் சரியாக தொளிற்படுத்த முடியாமல் கரையைத் தேடுகின்றனவாம்.

ஆணிவேர் இல்லாத மானிடம் இந்த அகிலமதில் அந்தரத்தில் ஆடுகின்றது. ஆயிரம் ஆசைகளைச் சுமந்து அல்லலுறுகின்றது. யார் பெரிது ?... யார் சிறிது?... எனப் பல ஜாதங்கள் எழுதுகின்றது. எது எங்கு முடியும்?.. என்பது கூடத் தெரியாமல் இது இப்படித்தான் என இருட்டுக்குள் இருந்து இசை பாடுகின்றது. உண்மையில் இந்தப் பூவுலகில் எதுவுமே எமக்கு நிரந்தர சந்தோஷங்களைத் தரப்போவதில்லை. இன்று எமக்கென்று இருப்பது நாளை பிறர்க்காகின்றது இன்றிருந்த சந்தோஷங்கள் நாளை வேதனையின் வேராகின்றது. இதற்குள் ஆயிரம் ஆணவங்களை சுமந்து அல்லலுறுகின்றோம்.அர்த்தமற்ற முரண்பாடுகளிற்காக முதுகொலும்பைக் காட்டுகின்றோம்.காமத்தில் முழ்கி கண்டதையும் இரசிக்க எத்தனிக்கின்றோம்.எது சரி எது பிழை என்பதுகூடத் தெரி யாமல் எட்ப்பர் பக்கம் நின்று எக்காளமிடுகின்றோம். இந்த இடத்தில் சுவாமி விவேகானந்தர் கூறும் பலமான கருத்துரைகள் நோக்கற் பேறுடையவை.





உண்மை, தூய்மை, சுயநல மின்மை இந்த மூன்று குணங்களும் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுல கிலும் இல்லை, இந்த மண்ணுலகிலும் இல்லை.

இந்த மூன்றினையும் பெற்றவனை பிரபஞ்சமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து போரிடும் ஆற்றல் அவனுக்கு உண்டு. நீ செய்த தவறுகளை வாழ்த்தக் கற்றுக்கொள்.

அந்த தவறுகளே உனக்கு வழிகாட்டும் தெய்வங்கள். தவறு செய்தவன் மீண்டும் தவறான பாதைக்கு செல்ல மாட்டான். சரியான பாதையில் செல்வதற்கான முயற்சியை மேற்கொள்வான். அதனால், வாழ்வில் தவறினால் உண்டாகும் துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள் தெரிவியுங்கள்.

நம்மை விட தாழ்ந்த நிலையில் இருப்பவர் மீது இரக்கம் கொள்ளுங் கள். ஏழைகள்,

அறியாமையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள் ளுங்கள். இதயமே நின்று போகும் வரையிலும், மூளை கொதித்துப்போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள். அடுத்தவரின் பாதையை பின்பற்றாதீர்கள்.

ஏனெனில், அது அவருடைய பாதை. உங்களுடையது அல்ல. உங்களுடைய பாதையை கண்டுபிடித்து விட்டீர்களானால், அதன் பிறகு நீங்கள் செய்ய வேண்டியது என்று எதுவும் இல்லை. அப்பாதை யில்கைகளை குவித்த வண்ணம் சரணடைந்து விடுங்கள்.

ஆர்.கே.மேனன்

கடமை என்பது என்ன?

கர்மயோகத்தைப்பற்றி ஆராயும்போது கடமை என்றால் என்ன என்பதுபற்றி அறிய வேண்டியது அவசியமாகும். நான் ஒன்றைச் செய்ய வேண்டும் என்றால் முதலில் அது என் கடமை என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும், அப்போது அதை என்னால் செய்ய முடியும். கடமை என்ற கருத்து பல்வேறு நாடு களில் பல்வேறு விதமாக உள்ளது. தன் நூலாகிய குரானில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதுதான் என் கடமை என்று முகமதி யன் கூறுகிறான். வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதுதான் தன் கடமை என்று சொல்கிறான் இந்து. கிறிஸ்தவனோ பைபிளில் கூறப்பட்டது தான் தன் கடமை என்கிறான், எனவே பல்வேறு வாழ்க்கை நிலைகளுக்கும், பல்வேறு வரலாற்று காலகட்டங்களுக்கும், பல்வேறு நாடுகளுக்கும் ஏற்ப கடமை என்ற கருத்தும் பல்வேறுவிதமாக மாறுபடுவதை நாம் காண்கிறோம். உலகம் தழுவியதான் சில நுண் கருத்துக்களை விளக்குகின்ற மற்ற சொற்களைப் போலவே கடமை என்னும் சொல்லின் பொருளையும் முழுமையாக விளக்கமுடியாது.

(19 ஆம் பக்கம் பார்க்க)

முரசு

## குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 646

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | | 15 | 16 | | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 644 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | 2 ஞ் | 3 சி | 4 வ | 5 ர | 6 ம் |
| 7 ரி | 8 பா | 9 தா | 10 த | | 12 ப |
| 13 ய | 14 சா | 15 ர | 16 ந் | 17 தி | 18 ம் |
| 19 சி | | 21 ம | 22 ல | 23 க் | 24 கு |
| 25 த் | | 27 ம் | 28 ப | 29 க | |
| 31 தி | 32 வ | 33 ன | 34 ம் | 35 ரி | 36 ச |

**இடமிருந்து வலம்**

01. சிவன். மங்கையோர் பாகன்.

07. பதுங்குதல். ஒளித்தல். (குழம்பியுள்ளது)

15. உடல் ஆரோக்கிய மாக இருக்க ஒரு கலை.

19. கொடையாளி. (குழம்பியுள்ளது)

25. கப்பல்கள் தரிக்கும் இடம். (குழம்பியுள்ளது)

33. தடாகம். குளம்.

**மேலிருந்து கீழ்**

01. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரு தொழில்நுட்ப பாடம்.
02. பெண். அழகு.
03. இடங்கள் காலங்களுக்கேற்றவாறு நடந்துகொள்ளும் முறை. (கடைசி எழுத்து இடம் மாறியுள்ளது)
04. நொண்டி நடப்பவன். (குழம்பியுள்ளது)
06. தசரதன் புத்திரன். (திரும்பியுள்ளது)
20. தமிழ் வருடங்களில் ஒன்று. (திரும்பியுள்ளது)
29. சாப்பிடு என்பதை சிங்களத்தில். (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **26.10.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **646**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.


தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.644 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**இ.நிவேதன், பிரதான வீதி, களுத்துறை.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. என்.சாந்தி, கச்சாய் வீதி, கொடிகாமம்.
02. ச.பரந்தாமன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
03. எஸ்.கவின், பிரதான வீதி, புத்தளம்.
04. து.சிவஞானம், கந்தரோடை, யாழ்ப்பாணம்.
05. மு.பாமினி, வாகரை, மட்டக்களப்பு.
06. எம்.எம்.அசாம், பேராதனை, மட்ட க்களப்பு.
07. ம.அருட்கடாட்சம், தும்பளை, பருத்தித்துறை.
08. கா.பரமேஸ்வரன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
09. ந.நிருபா, பிரதான வீதி, வவுனியா.
10. என்.இசக்கி, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.






## சிவகார்த்திகேயனுடன் மோதும் பிரபல நடிகர்

சிவகார்த்திகேயன் வளர்ச்சி தற்போது முன்னணி நடிகர்களுக்கு இணையாக உள்ளது. இந்நிலையில் இவர் நடித்த ரஜினிமுருகன் திரைப்படம் கடந்த மாதமே வெளிவரவேண்டியது. ஆனால், ஒரு சில பிரச்சினைகளால் இப்படம் ஒக்டோபர் மாத இறுதியில் வெளிவருவதாக கூறப்படுகின்றது.

இதே வாரத்தில்தான் விஜய் சேதுபதி நடித்த நானும் ரவுடிதான் படமும் வருகிறதாம். ஏற்கனவே சு‘து கவ்வும், எதிர்நீச்சல் படத்தில் சிவகார்த்திகேயன், விஜய் சேதுபதி மோதினர்.

ஆனால், அப்போது விஜய் சேதுபதிக்கு நல்ல மார்க்கெட் இருந்தது. தற்போது இந்த இரண்டு படங்களும் ஒரே நாளில் மோதினால் யாருக்கு வெற்றி கிடைக்கும் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## சிம்புவிற்கு பதிலடி கொடுத்த வடிவேலு

வடிவேலு இருவரும் நல்ல நட்பில்தான் இருந்துவந்தவர்கள். கோவில் படத்தில் நடித்ததில் இருந்தே வடிவேலுவிற்கு சிம்புமீது ஒரு மரியாதை இருந்துவந்தது.

ஆனால், பாண்டவர் அணியை சிம்பு திட்டியதற்கு வடிவேலு பதிலடி கொடுத்துள்ளார். அவர் கூறுகையில், “சிம்பு தம்பி ரொம்ப நல்லவர், அவர் அப்படி பேசவாய்ப்பில்லை. யாரோ தூண்டிவிட்டுத்தான் பேசச்சொல்கிறார்கள், நாடக நடிகர்களை நாங்கள் மதிக்கமாட்டோம் என்று அவர் கூறுவது முழுவதும் தவறு” எனக் கூறியுள்ளார்.

## அனைவரையும் கண்ணீர்விடவைத்த எஸ்.ஜே.சூர்யா

நியூ என தொடர் வெற்றி படங்களை இயக்கியவர் எஸ்.ஜே. சூர்யா. இவர் நடிப்பின்மீது கொண்ட ஆசையால் சில காலம் இயக்கத்திற்கு விடைக்கொடுத்தார். பின் மீண்டும் இவர் இயக்கி நடித்த இசை திரைப்படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

இந்நிலையில் தற்போது இவர் கார்த்தி சுப்புராஜ் இயக்கத்தில் இறைவி படத்தில் நடித்துவருவது அனைவரும் அறிந்ததே.

எஸ்.ஜே. ... இருந்த ... அழவைத்துவிட்டா... பிறகு இவருக்கு ... சினிமாவில் கண்டி... ஒரு நல்ல இடம் காத்திருக்கின்றது என அனைவரும் கூறினார்களாம்.

## செசல்ஸின் கலாசார தூதரான ஏ.ஆர்.ரஹ்மான்

தனது இன்னிசையால், இரு ஒஸ்கார் விருதுகளைப் பெற்று இந்தியாவிற்கு பெருமைச் சேர்த்த ஏ.ஆர்.ரஹ்மான் தற்போது, தனது அன்பான நடவடிக்கைகளால் வெளிநாட்டினரையும் கவர்ந்துள்ளார். கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள தீவு நாடான செசல்ஸின் கலாசார மேம்பாட்டுக்கு உதவிய ஏ.ஆர்.ரஹ்மானை, அந்நாட்டின் சுற்றுலா மற்றும் கலாசார அமைச்சரவை, கலாசார தூதராக நியமனம் செய்துள்ளது.

இதற்கான சான்றிதழை தனது பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கங்களில் ஏ.ஆர். ரஹ்மான் நேற்று வெளியிட்டார். மேலும், இந்த அங்கீகாரத்துக்காக அந்நாட்டு மக்களுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். இதுமட்டுமின்றி, பிரபல இயற்பியலாளர் ஸ்டீவன் ஹாக்கிங்ஸ், வறுமை ஒழிப்பு, சமத்துவமற்ற நிலையை எதிர்த்து போராட, காலநிலை மாற்றத்துக்கேற்ப செயற்பட உலகெங்கிலும் குளோபல் கோல்ஸ் என்றபெயரில் விழிப்புணர்வு ஏற்படுத்த உலகெங்கிலும் உள்ள பிரபலமான மனிதர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார். அதில், ரஹ்மானும்

## துல்கருக்குப் பதிலாக நானி!

மணி ரத்னத்தின் புதிய படத்தில் நடிக்க தெலுங்கு நடிகர் நானி ஒப்பந்தமாகியுள்ளதாகத் தெரிகிறது.

ஓ காதல் கண்மணிக்குப் பிறகு மணி ரத்னம் இயக்கும் படத்தில் கார்த்தி, துல்கர், கீர்த்தி சுரேஷ், நித்யாமேனன் போன்றோர் நடிப்பதாக முதலில் சொல்லப்பட்டது. ரவி வர்மன் ஒளிப்பதிவுசெய்யும் இப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். படப்பிடிப்பு டிசம்பர் முதல் ஆரம்பமாகும் என்றும் தகவல்கள் வந்தன. ஆனால் துல்கர் 2 மலையாளப் படங்களில் பிஸியாக உள்ளார். டிசம்பருக்குள் அந்தப் படங்களின் படப்பிடிப்பு முடிவடைய வாய்ப்பில்லை என்பதால் அவருக்குப் பதிலாக வேறு நடிகரைத் தேர்வுசெய்துள்ளார் மணி ரத்னம்.


“அண்மையில் தெலுங்கு நடிகர் நானி மணி ரத்னத்தைச் சந்தித்தார். அப்போது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். துல்கருக்குப் பதிலாக நானி நடிக்கக்கூடும்” என்று படக்குழுவினர் தகவல் தெரிவிக்கிறார்கள்.






## கத்துக்... விமர்...

தஞ்சை ... கிராமத்தில் ... தன்னுடைய நண்பர் ... ஜாலியாக ஊர் ... இருந்தாலும், ... அதிக ... திட்டத்திற்கு ... இதேபோல், அதே ... அவருடைய மகள் ... நிலங்களையும், ... நோக்கில் ... கட்சி ஒன்றில் முக்கிய ... ஆண்டுகளாக கட்சியில் ... கொடுக்காமல் ... தேர்தல் வருக- ...றது. ... இந்த ... சீட் ... இதனால் ... ஜெயராஜ்.




இப்படத்தின் இறுதிக்கட்ட
படப்பிடிப்பில் அழுது
நடிப்பதுபோல் ஒரு
காட்சியாம். இதில் நடித்த
எஸ்.ஜே.சூர்யா, படப்பிடிப்பில்
ந்த அனைவரையும் தன் நடிப்பால்
வைத்துவிட்டாராம். இப்படத்திற்கு
இவருக்கு தமிழ்
மாவில் கண்டிப்பாக
நல்ல இடம்
திருக்கின்றது
அனைவரும்
னார்களாம்.

# ஆயிரம் திரைப்படங்கள் கண்ட ஆச்சி

**மாலையிட்ட மங்கையாய் தோன்றி**
**கொஞ்சும் குமரியாகி**
**ஜில் ஜில் ரமாமணியாய் ஜொலித்து**
**சம்சாரத்தில் மின்சாரம் காட்டி**
**பாட்டிக் கதைகள் பல சொல்லி**
**பல்லாயிரம் ரசிகர்களின் நெஞ்சில் நிறைந்த**
**ஆச்சியே உன்னுடன் நகைச்சுவை**
**போயிற்றம்மா...**


பழம்பெரும் நகைச்சுவை நடிகை மனோரமா,78 நேற்று(10உ10உ15) இரவு 11 மணியளவில் மாரடைப்பால் காலமானார். அண்ணாதுரை, கருணாநிதி ஆகியோருடன் மேடை நாடக நடிகையாக நடித்து, பின்னர் தமிழ் திரை உலகில் ஆச்சி என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்த நடிகை மனோரமா, மறைந்த நடிகர்கள் எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி கணேசன், நாகேஸ் ஆகியவர்களுடனும், ரஜினி, கமல் ஆகியோருடனும், தற்போதைய இளைய தலைமுறை நடிகர்களுடன் நடித்து புகழ்பெற்றார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து கின்னஸ் சாதனை படைத்தார்.


கடந்த சில நாட்களுக்கு முன் உடல்நலக்குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். தி.நகரில் உள்ள அவரது இல்லத்தில் அவரது உயிர் பிரிந்தது தனது திரைப்பட வாழ்க்கையில். வாழ்நாள் சாதனையாளருக்கான பிலிம்பேர் விருது, பத்மஸ்ரீ தேசிய விருது உள்ளிட்ட விருதுகளை பெற்றுள்ளார்.

## ஆச்சியின் யாத்திரை...
















## கத்துக்குட்டி விமர்சனம்

தஞ்சை மாவட்டத்தில் ஒரு
ாமத்தில் வசித்துவரும் பட்டதாரியான நரேன்,
னுடைய நண்பர் சூரியுடன் இணைந்து குடித்துவிட்டு
ியாக ஊர் சுற்றிவருகிறார். இப்படி பொறுப்பில்லாமல்
தாலும், விவசாயிகள்மீதும் விவசாய நிலங்கள் மீதும்
அக்கறையுடனும் இருந்துவருகிறார். மேலும் மீத்தேன்
த்திற்கு எதிராகவும் செயற்பட்டுவருகிறார்.
தேபோல், அதே ஊரில் வசிக்கும் சம்பத் மற்றும்
டைய மகள் சிருஷ்டி டாங்கே இருவரும் விவசாய
களையும், விவசாய மக்களையும் காக்கவேண்டும் என்ற
ில் இருக்கிறார்கள். நரேனின் அப்பா ஜெயராஜ், அரசியல்
ன்றில் முக்கிய பொறுப்பில் இருந்துவருகிறார். நாற்பது
ளாக கட்சியில் இருக்கும் இவருக்கு எம்.எல்.ஏ. சீட்டு
மல் இருக்கிறார்கள். இந்நிலையில் அந்த ஊருக்கு
வருக- றது. இதில் நிற்பதற்காக கட்சி தலை மையை
பார்க்க சென்னை செல்கிறார் ஜெயராஜ்.
அங்கு, கட்சியின் தலைமை ஜெயராஜிடம்
இந்த முறை உங்கள் ஊரில் இளைஞர்ளுக்கு
சீட் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறுகிறார்கள்.
இதனால் தலைமையிடம் வாக்குவாதம் செய்கிறார்
ஜெயராஜ்.

ஆனால், ஜெயராஜுடன் வந்த கட்சிக்காரர், ஜெயராஜுக்கு மகன் இருப்பதாகவும் அவருக்கு சீட் கொடுங்கள் என்றும் கூறுகிறார். இதற்கு கட்சி தலைமையும் சம்மதிக்கிறது.

பொறுப்பில்லாமல் ஊர் சுற்றிவரும் நரேன், இந்த தேர்தலில் ஜெயித்தாரா? ஊர் மக்களுக்கு ஏதாவது நல்லது பண்ணினாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

அழிந்துவரும் விவசாயத்தையும், வாழ்க்கையை தொலைத்த விவசாயிகளையும் நினைவூட்டும்வகையில் மிகவும் அழகான திரைக்கதை அமைத்த இயக்குனர் இரா.சரவணனை பாராட்டலாம். மீத்தேன் திட்டம், விவசாயிகள் தற்கொலை போன்ற சமூக கருத்தை மிகவும் ஆழமாக பதிவுசெய்திருக்கிறார். எப்போதும் மண்வாசனையோடு இருக்கும் பாரதிராஜாவின் சகோதரர் ஜெயராஜ் அதே மண்வாசனையோடு நடித்து இருக்கிறார். இவரை திரையில் பார்க்கும்போது பாரதிரஜாவை நினைவுபடுத்துகிறது. பொறுப்பான விவசாயியாக நடித்திருக்கிறார் சம்பத். இவருடைய கதாபாத்திரம் விவசாயிகளின் வலியும், வேதனையும் பிரதிபலிக்கும்வகையில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதை உணர்ந்து சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் சம்பத்.

# தேன் கிண்ணம்

## பிரிந்துபோன உறவைத்தேடி...



எழுதுகிறேன் ஒரு கவி - என்
உணர்வுகளை ரணமாக்கி
வரைகின்றேன் ஒரு மடல் - என்
வாழ்க்கையின் சுவடுகளை பதிவாக்கி
வீதியிலே போகையிலே விபரீதமாய் அவனைக்
கண்டேன்
பாதி வழி போகையிலே பரிதாபமாய்
அவனைப் பார்த்தேன்
அவன் பார்வையோ என் மேல்பட்டு
தெறிப்பதை உள்ளூர உணர்ந்து கொண்டேன்
காலங்கள் கரைந்தோட காதல் என்னும் கணையால்
கட்டுண்டோம். வில்லங்கம் வீண் சண்டை
விபரீத முடிவுகள் அத்தனையும் தாண்டி வாழ்க்கை
என்னும் பூந்தோட்டத்தில் இணைந்து கொண்டோம்
இல்லறத்தின் நற்பலனாய் இன்பத்தின் அடையாளமாய்
முத்தான மூன்று செல்வங்கள் முழு நிலவாய்
பிரகாசித்தன.
இன்பங்கள் துன்பங்கள் இரண்டையும் தாங்கி
அமைதியான வாழ்க்கை அழகாக ஓடியது
விதி செய்த சதியோ இறைவனின் தீர்ப்போ
காலத்தின் கொடுமையோ - நானறியேன்
உயிர்துணை என்னை விட்டு - கடல்
கடந்து சென்றது - பிரிய மனமின்றி
என் இதயம் விடைகொடுத்து அனுப்பியது
கண்களில் நீர்சொரிய வார்த்தைகள் தடுமாற
இன்றுவரை என் இதயம் அவர் வரவுக்காய்
காத்திருக்கிறது.

**எஸ்.றசி, சன்னதி றோட்,**
**அச்சுவேலி.**



## தலைமுறை மாற வேண்டும்

முந்தநாள்: என் அம்மா அழுதாள்
அப்பாவின் அடிதாங்க முடியாமல்.
அதற்கு என்
பாட்டி கூறினாள்
"உன்ரை கொப்பரிட்டை நான்
பட்ட ஆய்க்கினையை விடவா" என்று.
நேற்று:
என் அக்கா வந்தாள்
வீங்கிய கன்னங்களுடனும்
தூங்கிய முகத்துடனும்.
இன்று:
என் சின்னக்கா
புறப்பட்டுவிட்டாள்
முறிந்த கதியாலுடன்
காவல் நிலையத்திற்கு.
நாளை:
என் மனைவிக்கு
இப்படி எதுவும்
நடக்கக் கூடாதென
நான் சிந்திக்காவிட்டால்...


**ஆர்.எஸ்.ஆனந்தன், தும்பளை**



## விடிவு வருமா

என்றோ ஒரு நாள் எனக்கும்
விடிவு வரும் என்னைப் போலவே
ஏங்கிக் கொண்டிருக்கும் பல
கோடி உயிர்களுக்கும் விடிவு
வரும் ஆனால் அந்த நாள்
இப்பூமியில் எப்போது வரும்...

**எம்.றியா, கொக்குவில்.**



## என் குற்றம்

நினைத்தது நீ தான்
நானில்லை
மறந்ததும் நீதான்
நானில்லை
ஏனென்றால்
இரக்கமற்ற இதயம்
கொண்டவள்
நீயென்பதை
புரிந்துகொள்ளாமல்
காதலித்தது
என் குற்றம்.



அளவெட்டி ப.உதயகுமார்

## துரத்தித் துரத்திக் காதலிப்பேன்...



அடியே கன்னி
தினமும் உன்னை எண்ணி
அடித்தேன் தண்ணி – இன்னும்
வடித்தேன் கொஞ்சத் தண்ணி

மொறப்பையன் நானு
அத்தப் பொன்னு நீயு
அடுத்தவன் பின்னால சுத்தாதே
என்னை வேணாம் வேணாம்னு கத்தாதே

நான் கறுப்பு என்றா
என்னை வெறுப்புக் கொள்கிறாய்
என்னிலும் வெண்மையுண்டு
புரிஞ்சுக்கடி என் கண்களைக் கண்டு

எனக்கென்னடி கொற – நான்
உங்கத்த பெத்த தொற
தள்ளித் தள்ளி போகாதே
எந்நெஞ்சைக் கிள்ளி கிள்ளி போகாதே

மச்சம் கொண்ட – பெண்ணே நீ
வந்து நில்லு முன்னே
அச்சம் எதுவும் வேண்டாம்
மிச்சமின்றித் தருவேன்

நீ புத்தி கெட்ட பொம்பள
நான் நல்லா புரிஞ்சிக்கிட்ட ஆம்புள
தாக்கிக் கொஞ்சம் பேசினால்
தூக்கிக் கொண்டு போய்டுவேன்

தாலி வேண்டி வெச்சிருக்கேன்
வேலி தாண்டி ஓடிவா
மூணு முடிச்சு போட்டுக்கிட்டே
ஹனிமூணு போவலாம்
கைது கோர்த்துக்கிட்டே.

ஏண்டி கலா
வேணுமடி அந்த நிலா
பேச்சோ இனிக்கும் பலா
அதை ரசிப்பேன் தலா

ஓடி ஓடிச் சென்றாலும்
நான் தேடித் தேடி வந்திடுவேன்
காதல் செய்வோம் வந்துவிடு
என்னுடன் காலம் முழுக்க வந்துவிடு.

**ஏ. ஆர்.நவாஸ்,**
**கிண்ணியா.**

## வீதி விபத்து




பட்டென்று ஓர்
வாகனம் பறந்து வந்து


சட்டென்று மோதி...
சாவுகளமாகியது
சாலை ஓரம்
விதியின் செயலா...?
மனிதன்
மதியின் செயலா...?

வீதியில் வேடிக்கை
பார்ப்போர் – பலர்
உதவுவதற்காய் யாருமில்லை...?
உணர்ந்து கொள்ளவும்
யாருமில்லை...?

**யாழ்.அஞ்சனா,**



- ஜோசப் கிருஷ்ணா -





# பாதாள உலகம்

FIFA இன் அதியுயர் விசாரணைப்பீடம் உலக உதைபந்தாட்டத்துறையின் மிகவும் சக்திவாய்ந்த இருவரை இடைநீக்கம் செய்துள்ளது. இந்தத் தடையானது 90 நாட்களுக்கு நீடிக்கும், தேவைப்படின் அதற்கப்பாலும் நீடிக்கப்படலாம். நீடிக்கப்பட்டவர்களில் ஒருவர் பீபாவின் தலைவர் செப் பிளெட்டர். மற்றவர் UEFA இன் தலைவர் பிளட்டினி. இதோடு இணைந்து தென்கொரிய வர்த்தக இமயம் சுங்மொங் ஜூன், மற்றும் பிபாவின் செயலாளர் நாயகம் ஜெரோம் வெல்கே. பல மில்லியன் டொலர்கள் மோசடிகள் தொடர்பிலே இவர்கள் மீதான விசாரணைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இதில் எதிர்வரும் பீபா தலைவருக்கான தேர்தலில் பிளட்டினியும், சுங்மொங் ஜூன் உம் போட்டியிடத் தீர்மானித்திருந்தவர்கள், தற்போது அந்தச் சந்தர்ப்பம் கைநழுவிப் போயிற்றுபோல் தெரிகிறது. ஒரு அறிக்கையின்படி இந்த நான்கு நபர்களும் தேசிய, சர்வதேச நிலையில் எதுவிதமான உதைபந்தாட்ட விடயங்களிலும் செயற்படமுடியாது என்ற கூறப்பட்டுள்ளதுடன் இந்த உத்தரவு உடனடியாகவே அமுலுக்குவருவதாகவும் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எதிர்கால தற்காலிக அமைப்பாக யார் கடமையாற்றப் போகிறார்கள் என்று தெரிவிக்கவில்லை.

குறிப்பாக பிளெட்டர், பிளட்டினி இருவர்மீதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இவர்கள்மீதான வலைகள் இறுகிக்கொண்டே வருவதை அவதானிக்கலாம். மிகப்பெரிய பதவிகளில் இருந்த இவர்கள் இக்குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாதநிலையே காணப்படுவதாக எதிர்வுகூறப்படுகின்றது. இந்த விடயங்கள் பற்றிப் பேசும்போது, பீபா என்பது எவ்வளவு பாரிய பணத்தை வரவு - செலவு செய்யும் நிறுவனம் என்பது புலனாகிறது. அதனால்தானோ என்னவோ பீபாவை பல்லாயிரம் கோடி டொலர்கள் பெறுமதியான நிறுவனம் என்று குறிப்பிடுகிறார்கள்.

# சுடர்மிகு நட்சத்திரம்





முன்னாள் தடகள வீராங்கனை சுஸந்திகா ஜயசிங்க இலங்கைக்காக ஒலிம்பிக் பதக்கம் வென்று பெருமைப்படுத்தி தற்போது 15 வருடங்களாகின்றன. 2000 ஆம் ஆண்டில் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வென்றார் அவர். ஆன்றல் தற்போ்து தனது விளையாட்டுத்துறையின் மேம்பாட்டை இளம் தலைமுறைக்குக் கொடுப்பதற்காக ஒரு விளையாட்டு அக்கடமியை இவர் ஆரம்பிக்க உள்ளார். சுஸந்திகா தன்னைச் சந்திக்க சந்தர்ப்பம் ஒன்று கேட்கிறார் என்று ஜனாதிபதி அறிந்தவுடன் ஏதோ தனது தேவைக்காகத்தான் இருக்கும் என்று யோசித்தேன். ஆனால் அவருடன் உரையாடிய போதுதான், நாட்டுக்கு தன்னால் இயன்றதைச் செய்யுமுகமாகவே என்னைச் சந்திக்க விரும்பியுள்ளார் என்று மகிழ்வுடன் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இந்த நிகழ்வில் சுஸந்திகாவின் பயிற்சியாளராக இருந்த ரோணி ஜெம்பனும் கலந்துகொண்டிருந்தார். தனக்கு பயிற்சியாளர் பதவி கிடைத்தபோது இலங்கை எனும் இத்தீவு எங்கிருக்கிறது என்றும் எனக்குத் தெரியவில்லை.

ஆனால், சுஸந்திகா சர்வதேசமும் தன் நாட்டை அறியும்வகையில் சாதனை படைத்துவிட்டார். மேலும் 2000 பின் இதுவரையில் எந்த ஒரு ஒலிம்பிக் பதக்கத்தையும் இலங்கை வெல்லவில்லை. எனவே எதிர்காலத்தில் இதற்காக பாரிய நிறுவனங்கள் தம் பங்களிப்பைச் செய்யவேண்டும். வளர்ந்துவரும் தடகள வீரர்கள் இது மிக அத்தியாவசியமானது என்று கூறியுள்ளார்.

பொதுவாகப் புகழ்வந்ததும் மற்ற விடயங்களைப் பற்றி யோசிக்கமுடியாமல் இருக்கும். இக்காலத்தில் சுஸந்திகாவின் சிந்தனை சகலராலும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது திண்ணம். சுஸந்திகாவும் கீழ் இருந்து மேல் நோக்கி வந்து உச்சம் தொட்டவர். ஆகவே அவரது விளையாட்டு அக்கடமி மூலம், தடகளத் திறமை இருந்தும், வேறு காரணங்களால் முன்னேறமுடியாத இளம் தலைமுறைக்கு ஒரு பாய்ச்சலுக்கு வழிகாட்டியுள்ளார் என்றும் கூறலாம். நன்றி சுஸந்திகா.



# சந்திக்க ஆசை

அமெரிக்க ஐக்கிய நாடுகள் எல்லாவற்றிலும் முன்னிலையில் இருக்கும். ஆனால் கிரிக்கெட் போட்டிகளின்மீதான ஆர்வம் அவர்களுக்குக் குறைவுதான். இப்போது அவுஸ்ரேலிய ஜாம்பவான் ஷேன் வோண் ஒரு அணிக்குத் தலைவராகவும், இந்திய கிரிக்கெட் சகாப்தம் சச்சின் டெண்டுல்கார் இன்னொரு அணிக்குத் தலைவராகவும் கொண்ட நட்சத்திரக் கூட்டம் நிறைந்த, இரண்டு இருபதுக்கு இருபது அணிகள் அமெரிக்க மண்ணில் மூன்று போட்டிகளில் விளையாடவிருக்கின்றன. இந்த ஆட்டங்களின் பிரதான நோக்கம் அமெரிக்க இளந்தலைமுறையினர் இடையே கிரிக்கெட்மீதான ஆர்வத்தை அதிகரிப்பதேயாகும். இந்த ஆட்டங்களில் கலந்துகொள்ளப்போகும் வீரர்களின் பெயர்களைக் கேட்டாலே கிரிக்கெட் ஆர்வம் உள்ளவர்கள் ஆனந்தக் கூத்தாடுவார்கள்.


ஆனால் அமெரிக்க இளைஞர்கள் எப்படித் தம் விருப்பத்தை காட்டப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஷேர்ன் வோண், சச்சின் அடங்கலாக, பிறைன் லாரா, கோர்ட்னி வோல்ஷ், கேர்ட்லி அம்புறோஸ், முத்தையா முரளிதரன், வசீம் அக்ரம், ஜக்கஸ் கலீஸ், ரிக்கி பொண்ரிங், மெத்தியூஸ் ஹேடன், கிளென் மெக்ரா, பிரட் ஹடின் என்று பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. அமெரிக்க ரசிகர்கள் என்றாவது ஒரு சந்திக்கவேண்டும். பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்ட மிகப் பிரபலமானவர்களையே நாங்கள் இரண்டு அணிகளிலும் இணைத்துள்ளோம்.


ரசிகர்கள் இவர்களைச் சந்திப்பதில் மிகப்பெரிய மகிழ்ச்சிடைவார்கள் என்றே நம்புகின்றோம் என்று ஷேன் வோர்ண் கூறியுள்ளார். சச்சின் கருத்துத் தெரிவிக்கும்போது, பேஸ் போல், பாஸ்கட் போல் விளையாட்டுக்களையே பிரதானமாகக்கொண்டது. அதோடு இணைந்து கிரிக்கெட் ஆட்டங்களின் வளர்ச்சிக்கும் அமெரிக்க ரசிகர்கள் ஆதரவுதருவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார். முதலாவது இருபதுக்கு இருபது போட்டி நவம்பர் 07 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற்று, ஏனைய இரண்டு போட்டிகளும் அடுத்துவரும் நாட்களில் நடைபெறும். அமெரிக்காவிலும் கிரிக்கெட் வளர்ந்தால் மிகநல்லது. ஏனெனில் அவர்கள் தொடங்கினால் விடமாட்டார்கள் ஆகவே ஆர்வம் தொடரும் பட்சத்தில் ஒரு தசாப்த காலத்துக்குள் மிகப்பலமான அணியை அமெரிக்காவில் இருந்து எதிர்பார்க்கலாம்.

# உன்னதமே பெயர்

தற்போது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தமது இந்தியாவுடனான கிரிக்கெட் தொடருக்காக இந்தியாவில் நிற்கிறார்கள். இது பற்றிய விளம்பரங்கள் இரண்டு பெருமை மிகு நாடுகளின் சந்திப்பு, இரண்டு சுப்பர் பவர்களின் சந்திப்பு என்ற அமோகமான பெருமிதத்துடன் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதில் ஒரு நெகிழ்ச்சியான, அதோடு பெருமிதமான விடயம் ஒன்றையும் இங்கு குறிப்பிடலாம். ஒவ்வொரு சர்வதேசத் தொடருக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

அவுஸ்திரேலிய இந்தியத் தொடர் "போர்டர் கவஸ்கார்" தொடர் என்று அழைக்கப்படும் இலங்கை - அவுஸ்திரேலிய தொடர், வோர்ண் - முரளிதரன் தொடர் என்று அழைக்கப்படும். அவுஸ்ரேலிய - மே. இந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான தொடர் "பெனோ வொரல்" தொடர் என்றழைக்கப்படும். இங்கிலாந்து அவுஸ்திரேலிய தொடர் "ஆஷஸ்" (சாம்பல்) தொடர் என்று அழைக்கப்படும். தற்போது இலங்கையில் நடைபெறவுள்ள மே.இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடர் சோபர்ஸ் -திஸெரா தொடர் என்று அழைக்கப்படவுள்ளது. இந்தப் பெயர்கள் எல்லாமே கிரிக்கெட் ஜாம்பவான்கள் உடையவை. ஆனால் தற்போது இந்தியாவில் தென்னாபிரிக்கா அணியுடன் நடைபெறவுள்ள தொடரின் பெயர் மிக உன்னதமானது, உணர்வுபூர்வமானது. அன்புக்கானது, கௌரவம்மிக்கது. இதற்குமேல் விளக்கம் அவசியமில்லை. இந்தத் தொடரி பின் பெயர் "மண்டேலா - காந்தி" கிரிக்கெட் தொடர்.










# முத்தத்தை விரும்பும் பெண்கள்

முத்தம் என்ற உணர்வுப் பு்ர்வமான விசயத்திற்கு பெண்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆண்கள் கொடுப்பதில்லை என அமெரிக்காவில் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. பெண்கள் முத்தத்தை தங்கள் இணை வாழ்க்கை உறவின் ஒரு அங்கமாகக் கருதுகின்றனர்.

காதலை அர்த்தப்படுத்திக் கொள்ளவும், தங்கள் நீண்டகால உறவினை அவ்வப்போது புதுப்பித்துக்கொள்ளவும் அதன் நிலைப்பாட்டை சரி செய்துகொள்ளவும் முத்தத்தையே விரும்புவதாக அந்த ஆய்வுகூறுகிறது. முத்தம் ஒரு அவர் களுடைய சந்தோசத்திற்காக பயன்படுகிறதே தவிர, அவர்களுக்கு முத்தம் என்பது நீண்டகால உறவினைப் புதுப்பிக்க பயன்படும் ஒன்றாக இல்லை.


ஆசை அதிகரிக்கும்போது ஒரு அடையாளமாக அது வெளிப்படுகிறது. ஆண்களும் பெண்களும் முத்தத்தை மிகவும் ரசிக்கிறார்கள் என்றாலும் பெண்களே அதற்கு ஒரு ஆத்மார்த்தமான அர்த்தத்தை கற்பிக்கிறார்கள்.

எனவே, ஆண்களே புரிந்துகொள்ளுங்கள், உங்கள் இல்வாழ்க்கையில் இணையை நேரம் கிடைக்கும் போதெல்லாம் முத்தமழையால் நனைத்திடுங்கள்.

# நீண்டநேரம்
## அமர்ந்திருப்பவர்களுக்கான பயிற்சி

நீண்டநேரம் அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்பவர்கள், "எங்கே நேரம் கிடைக்கிறது?" என அலுத்துக்கொள்வது வழக்கம். ஆனால், இருந்த இடத்திலேயே சில எளிய பயிற்சிகளைச் செய்யமுடியும். அலுவலகத்தில் பணிபுரிவோர் பிட்டாக இருப்பதற்கான எளிமையான பயிற்சிகள் உள்ளன. அதில் வோர்ம் அப் பயிற்சியும் ஒன்று.

வோர்ம் அப் (Warm up) நீண்டநேரம் அமர்ந்திருக்கும்போது தசைகள் இறுக்கம் அடைந்திருக்கும். அந்தநேரத்தில் பயிற்சி செய்தால், தசைகள் பாதிக்கப்படும். எனவே முதலில் பயிற்சிசெய்ய ஏதுவாக தசைகளைத் தயார்ப்படுத்தவேண்டும். பயிற்சியைத் தொடங்குவதற்கு முன், நிமிர்ந்தநிலையில்



சேரில் உட்கார்ந்து, புன்னகையுடன் ஆழமாக மூச்சை இழுத்துவிடவேண்டும். பாதங்களைத் தரையில் பதித்து, உள்ளங்கைகளைத் தொடைகளில் வைத்து, கண்களை மூடி 10 முறை ஆழமாக மூச்சை இழுத்து, வெளிவிட வேண்டும். பலன்கள்: தேவையான ஒட்சிசன் உடலுக்குக் கிடைக்கும். உடல் வெப்பநிலை அதிகரித்து, பயிற்சிக்குத் தயாராக உதவும்.

# சுடிதாரில் அசத்தலாக இருக்க...



இன்றைய பெண்கள் தங்களின் அழகிலும், உடைகளை அணிவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். பெண்கள் பொதுவாகவே மிகவும் ஆசைப்படுவதும், அதிகம் செலவழிப்பதும் நகைகளுக்கும், துணிகளுக்கும் மற்றும் அழகுசாதன பொருட்களுக்கும்தான். தான் தேர்ந்தெடுக்கும் சுடிதார்களோ, அல்லது புடைவைகளோ மிகவும் புது வரவாகவும், புது டிசைன்களிலும் இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள்.

அதை விட்டுட்டு, தேவையில்லாமல் டிசைன்களுக்கு ஆசைப்பட்டால், என்னதான் அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தாலும், மற்றவர்களின் முன் உங்களை "டல்லாக" தான் காட்டும். எனவே அதை முதலில் தெரிந்துகொள்வது அவசியம். முதலில் கறுப்பு நிறமாக உள்ளவர்கள், லைட் நிறத்தில் உள்ள ஸ்டோன் வேலைப்பாடுகள் செய்த சுடிதாரை தேர்ந்தெடுக்கலாம். லைட் கிரீன், எலுமிச்சை நிறத்தில் உள்ள மஞ்சள் கலர், லைட் வைலட், லைட் சாண்டில், ஒயில் அல்லது ஏதாவது காமினேஷன் கலர் இது மாதிரி லைட் நிறத்தில் உள்ள சுடிதார்களை தேர்வுசெய்யுங்கள். கொஞ்சம் கலராகவோ அல்லது மாநிறமாகவோ உள்ளவர்கள் மெரூன், இங்க் புளூர், பிங்க் கலர், ஆஷ் கலர், வைட் அல்லது ஏதாவது காமினேஷன் கலன்ர தேர்வு செய்யலாம்.

கலராக உள்ளவர்களுக்கு டார்க் கலரில் எந்த நிறவகையான சுடிதார்கள் போட்டாலும் அழகாகத் தெரியும். பெரும்பாலும் நிறத்திற்கு ஏற்றார்போல் தேர்வுசெய்வதை காட்டிலும், அவரவர் உடல்வாகுக்கு தகுந்தாற்போல் சுடிதார்களை எடுக்கவேண்டும். குண்டாக உள்ளவர்கள் கொட்டன் சுடிதார் அணிந்தால், அது மேலும் அவர்களை குண்டாகத்தான் காட்டும். அதற்கு பதில், அவர்கள் நிறைய ஆடம்பர வேலைப்பாடுகள் செய்யாத சிம்பிளாக உள்ள சல்வார்களை போட்டாலே அழகாகத்தெரியும். ஒல்லியாக உள்ளவர்கள் கொஞ்சம் அதிக வேலை- பாடுகள் செய்த கொட்டன் அல்லீது சில்க் கொட்டன் சுடிதார் தேர்வுசெய்யலாம். அது அவர்களை சற்று குண்டாகக் காட்டும்.

# பெண்கள் இறுக்கமாக உள்ளாடை அணிவதால்....



பிட்டாக அணிகிறோம் என்றபெயரில் நிறையப்பேர் இறுக்கமாகத்தான் உள்ளாடை அணிகிறார்கள். இதனால் பிறப்புறுப்பு பகுதியில் நிறையப் பேருக்கு அலேர்ஜி ஏற்படுவதும் உண்டு. இதனால், நாள் கணக்காக சொறிந்துகொண்டே இருப்பார்களே தவிர அதற்கான தீர்வு என்ன? எதனால் இப்படி ஏற்பட்டது என்று யாரும் கவனிப்பது இல்லை.

விந்தணு எண்ணிக்கை, இரத்த ஓட்டம், நெஞ்செரிச்சல், அலேர்ஜிகள் என இறுக்கமாக உள்ளாடை அணிவதால் நிறைய உடல்நல அபாயங்கள் ஏற்படுகின்றன. இறுக்கமாக உள்ளாடை அணிவதால் சீரான இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. இதனால் அவ்விடத்தில இருக்கும் நரம்புகள் உணர்ச்சியற்று போக வாய்ப்புகள் இருக்கின்றன சீரான இரத்த ஓட்டம் தடைப்படும்போது அவ்விடத்தில் இருக்கும் திசுக்கள் இறந்து போகக்கூடும். எரிச்சல், அலேர்ஜி போன்றவை ஏற்படவும் இறுக்கமான முறையில் உள்ளாடை அணிவது ஓர் காரணமாக அமைகிறது.

தினமும் இவ்வாறு நீங்கள் அணிவதால் உடல்நல அபாயங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். எனவே, இறுக்கமான முறையில் உள்ளாடை அணியவேண்டாம். சிலர் உள்ளாடையை வயிறுவரை ஏற்றி இறுக்கமாக அணிவார்கள். இது வயிறு பகுதியை மிகவும் கடினமாக உணரச்செய்யும். இதனால் ஏற்படும் அமில எதிர்வினையின் காரணமாக நெஞ்செரிச்சல் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அவ்விடத்திற்கும் காற்றோட்டம் தேவை. இறுக்கமாக உள்ளாடை அணிவதால் காற்றோட்டம் தடைப்படுகிறது.

இதனால் வியர்வை அதிகம் வெளிப்பட்டு அவ்விடத்திலேயே தங்கி பக்ரீரியா தொற்று ஏற்படும் அபாயமும் உண்டு. மிக இறுக்கமாக உள்ளாடை அணிவதால் பெண்களுக்கு சிறுநீர் குழாய் தொற்று ஏற்படும் அபாயம் இருக்கிறதாம். இதற்கு காரணம் பெண்ணுறுப்பில் காற்று புகாத வண்ணம் உள்ளாடை அணிவதே ஆகும். இது மெல்ல மெல்ல ஈஸ்ட் தொற்று ஏற்பட காரணமாக அமைகிறது.

சில குறிப்பிட்ட துணி ரகங்களில் தயாரிக்கப்படும் உள்ளாடைகளை இறுக்கமாக அணிவதால் சருமநோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன. முக்கியமாக நைலோன் போன்றவை ஆகும்.

# பெண்களுக்கு பலன் அளிக்கும் கரட்



* கரட் சாப்பிட்டால் பெண்களின் மார்பகப்புற்று முற்றாமல் காத்துக்கொள்ளலாம் என்று அமெரிக்காவில் புளோரிடாவில் புற்றுநோய் ஆராய்ச்சிக்கான அமெரிக்க அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

* தரமான தாய்ப்பால் தொடர்ந்து கிடைக்க கரட் சாறு அருந்தவும்.

* பெண்களுக்கு மெனோபாஸ் காலங்களில் ஏற்படும் தாதுக்கள், கால்சியம், பாஸ்பரம், விற்றமின்கள் இழப்பை சரிசெய்ய கேரட்டை மிகவும் சரியான ஊட்டசத்து என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

* பெண்களுக்கு மாதவிலக்கின்போது உண்டாகும் அதிக உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் தன்மை நிறைந்து காணப்படுகிறது.

* கருவுற்ற பெண்கள் தினமும் 25 கிராம் அளவு காரட்டை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிட்டுவந்தால் மலச்சிக்கல், போலி வலிகள், களைப்பு ஏற்படாது. சோகை நீங்கும். பிறக்கும் குழந்தை நிறமாகவும், வலுவாகவும் பிறக்கும்.

* கரட்டை துருவி அதனுடன் தயிர்சேர்த்து நன்கு கலக்கி முகத்தில், கழுத்துப் பகுதியில் தடவி வந்தால் முகக்கறுப்பு, முகச்சுருக்கம், முகவறட்சி, எண்ணெய் வடிதல் போனறவை மாறி முகம் பளபளப்பாகக் காணப்படும்.

**250/= பரிசு — வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :- 491

**கேள்வி: வயிற்றுப் பகுதியில் இறுக்கமாக உடை அணிவதால் ஏற்படும் தீமை என்ன?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 26. 10. 2015

பரிசுப் போட்டி இல :- 489 இற்கான விடை-

உயிரணு பரிசோதனை, அல்ட்ரா சவுண்ட், ஹோர்மோன் பரிசோதனை

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
மு.காயத்திரி,
பிரதான வீதி, பதுளை.

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 491
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

491

பெயர் : ..................

முகவரி : ..................

தே.அ. அட்டை இல : ..................

விடை : ..................

கையொப்பம் : ..................



02

# கிராமங்களை நோக்கி...

இக்கட்டுரைத் தொடரில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ஒரு நாட்டினது பொருளாதார நிலையையும் அதன் கலாசாரப் பண்பாட்டு வாழ்வையும் தாங்கி நிற்கும் சுமைதாங்கிகளாக கிராமங்களே இருக்கின்றன. அந்தவகையில் ஒரு நாட்டில் உள்ள கிராமங்கள் யாவும் ஓர் உன்னதமான "கிராம இராச்சியங்களாக" உருவாகும்போதுதான் அந்த நாட்டினது விடுதலையும்...! அந்த நாட்டின் கலாசாரப் பண்பாட்டு வாழ்வும் சிறப்பானதாக இருக்க முடியும்.

அந்தவகையில் இலங்கை மக்களின் இனப்பிரச்சினைக்கான ஓர் நிரந்தரமான தீர்வை இதயசுத்தியோடு வேண்டிநிற்கும் எமது இளஞ்சந்ததியினர் இந்திய தேசத்தின் விடுதலைக்கு வித்திட்ட மகாத்மா காந்தி அவர்களின் "கிராம ராச்சியம்" பற்றிய புரிதலையும் அந்த இராச்சியம் பற்றிய நடைமுறை அனுபவங்களையும் அறிந்திருத்தல் மிகவும் அவசியமானது என்றே நான் கருதுகிறேன்!

எமது அயல்நாடான இந்தியா பிரித்தானியரின் அழுகைக்குட்பட்டிருந்த காலத்தில் இந்திய தேசத்தின் விடுதலைக்காக மிகுந்த அர்ப்பணத்துடன் போராடிய மகாத்மா காந்தி அவர்கள் இந்திய தேசத்தின் விடுதலையை விரைவுபடுத்த வேண்டுமெனில்... மாபெரும் இந்திய தேசத்தின் பொருளாதாரம் சார்ந்த வாழ்வாதாரத்தைதத் தங்களது மகத்தான உழைப்பால் தாங்கிநிற்கும் கிராமங்களை நோக்கி செல்லவேண்டும் என்ற உண்மையை உணர்ந்துகொண்டார். அந்த உணர்தலின் அடிப்படையில் பின்தங்கியநிலையில் இருக்கும் இந்திய கிராமங்களை நோக்கி மகாத்மா காந்தி அவர்கள் புறப்பட்டார்.

அங்கே கொடுமையான வறுமை நிலைக்குள் வீழ்ந்து கிடந்த மக்களைச் சந்தித்தார். அந்த மக்களோடு அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகள் பற்றி ஆழ்ந்த கவனத்தோடு உரையாடினார். அசுத்தமாய் காணப்பட்ட அவர்களது கிராமத்தையும் வீடுகளையும் சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளில் அந்த மக்களை ஈடுபடுத்தியதோடு அந்த மக்களுடன் சேர்ந்து சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளில் தானும் ஈடுபட்டார். நோயினால் பாதிக்கப்பட்ட கிரா்மத்து மக்களுக்குத் தனது மகத்தான சேவையை வழங்கினார். வறுமைக்குள் கிடந்து உழலும் அந்த மக்களிற்கு அவர்களது எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளை அவர்களது இதயங்களில் ஏற்றினார். அதன்மூலம் கிராமங்களைக் கிராமத்து மக்களே நிர்வகிக்கும் கிராம ராச்சியங்களைக் கிராமங்களில் கட்டியெழுப்பினார்.

மகாத்மா காந்தி அடிகளின் கிராம இராச்சியப் பணிகளால் கவரப்பட்ட கிராமத்து மக்கள் காந்தியடிகளிற்கும் பின்னால் அணி அணியாகத் திரண்டனர். காந்தியடிகளால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களிலும் ஏனைய போராட்டங்களிலும் மக்கள் வெள்ளம்போல் வந்துகுவிந்தனர். மக்களது சுதந்திர உணர்ச்சியையும் எழுச்சியையும் கண்ட பிரித்தானிய ஆட்சியாளர்கள் கதிகலங்கினர். கிராமப்புற மக்களின் இவ்வாறான பங்களிப்புக்களே இந்திய தேசத்தின் விடுதலையை வேகப்படுத்தியது என்ற உண்மையை எமது தமிழ் இளைஞர்கள் மிக ஆழமாகப் புரிந்துகொள்ளவேண்டும்.



அப்போதுதான் நீண்டகாலமாகத் தீர்வு காணப்படாமல் எமது மக்களின் மகத்தான வாழ்வையும் எமது தேசத்தின் வளங்களையும் அழித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான ஓர் நிரந்தரமான தீர்வைநோக்கி நாம் விரைவாகச் செல்லமுடியும். ஏனெனில் எமது தேசத்தை சிதைத்துச் சின்னாபின்னமாக்கிக் கொண்டு இருக்கும் இனப்பிரச்சினைக்கான ஓர் நிரந்தரத் தீர்வை நாம் காணாமல் எ துு நாடும், அந்த நாட்டில் வாழும் இனங்களும் ஒரு அங்குலம் கூட முன்னேற முடியாதென்ற நிலையிலேயே நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமதிந்த நிலைமைக்குரிய அடிப்படைக் காரணம் என்ன...?

கடந்த 67 வருடங்களிற்கும் மேலாக எதிர்ப்பரசியல் வழிமூலம் எமது மக்களில் மனங்களில் "இனவாதம்" என்னும் கொடிய விஷத்தை தொடர்ச்சியாக ஏற்றிக்கொண்டு இருக்கும் மேட்டுக்குடி தலைமையிடம் எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பாரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அவர்கள் காட்டும் "இனவாத" எதிர்ப்பரசியல் வழியில் அவர்களிற்குப் பின்னால் நாமும் சென்றுகொண்டிருப்பதன்மூலம் பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் சுமந்துகொண்டிருக்கின்றோம். எமதிந்த நிலைமைக்குரிய அடிப்படைக் காரணம் என்ன?

கடந்த 67 வருடங்களிற்கும் மேலாக எதிர்ப்பரசியல் வழிமூலம் எமது மக்களின் மனங்களில் "இனவாதம்" என்னும் கொடிய விஷத்தை தொடர்ச்சியாக ஏற்றிக்கொண்டு இருக்கும் மேட்டுக்குடி தலைமையிடம் எமது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பாரிய பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அவர்கள் காட்டும் "இனவாத" எதிர்ப்பரசியல் வழியில் அவர்களிற்குப் பின்னால் நாமும் சென்றுகொண்டிருப்பதன் மூலம் பெரும் அழிவுகளையும் இழப்புக்களையும் சுமந்துகொண்டிருக்கின்றோம். ஆனால் அவர்களோ...

தமது தவறான அரசியல்வழிக்குச் சாதகமாக தமிழ் புத்திஜீவிகளில் பலரை தம்முடன் இணைத்துக்கொண்டு மக்கள் மத்தியில் இனவாத விதையை தொடர்ந்தும்... தொடர்ந்தும் ஆழமாக விதைப்பதன்மூலம் இனப்பிரச்சினையை தீர்வுகாணப்பட முடியாத பிரச்சினையாக்கி அதன்மூலம் பாராளுமன்றக் கதிரைகளைப் பெற்றுக்கொண்டு தங்களதும் தங்கள் குழப்பங்களினதும் ஆடம்பரமான சுகபோக வாழ்வை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர... இனப்பிரச்சினை சம்மந்தமான உண்மையான சமூக அரசியல் விளைவுகளை அவர்கள் எப்பவுமே கிராமங்களை நோக்கிக்கொண்டு செல்லவில்லை!

கிராமப்புற மக்களை இனவாத அடிப்படையில் தங்கள் கதிரைக் கனவுகளிற்குப் பயன்படுத்தினார்களே தவிர கிராமிய மக்கள் எதிர்கொண்ட அவர்களது பாரதூரமான வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றி எள்ளளவும் தமிழ் தலைமை சிந்திக்கவில்லை கிராமப்புற மக்கள் எதிர்கொள்ளும் அவர்களது பாரதூரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குரிய தீர்வை நோக்கி அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டிய தமிழ் தலைமையானது அரசியல் அடிப்படையில் கிராமிய மக்களை முற்று முழுதாகப் புறக்கணித்தே வருகின்றனர். இது ஏன்? நிலமானிய சமூக சிந்தனையை தன்னகத்தேகொண்ட தமிழ் மேட்டுக்குடித் தலைமை கிராமப்புற மக்களை தம்க்குச் சேவைசெய்து தமக்காக வாக்குப்போட்டு தங்களுக்காகவே வாழும் அடிமை மனிதர்களாகவே இன்றுவரை கருதுகின்றார்கள். எனவேதான் எமது இனப்பிரச்சினை தீராபிரச்சினையாகி இன்று வரை தொடர்கிறது.

எனவே நாம் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை இலகுவாகப் கண்டு எங்கள் நாட்டையும்... மக்களையும்... அபிவிருத்தி நோக்கிய பாதையில் வழிநடாத்திச் செல்லவேண்டுமெனில் இனப்பிரச்சினைக்கான தீர்வைவேண்டி நிற்கும் அனைவரும் கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும். அங்கு வாழும் இளம் சமூகத்தினரைச் சந்தித்து உரையாடவேண்டும். அவர்கள் மூலமாக கிராமத்து மக்களோடு நெருக்கமான உறவை ஏற்படுத்தவேண்டும். அந்த மக்கள் வாழும் கிராமங்களை அவர்களே நிர்வகிக்கும்வகையில் கிராம அமைப்புக்களைப் பலப்படுத்துவதன்மூலம் கிராமங்கள் "கிராம ராச்சியங்களை உருவாக்கவேண்டும்" அப்போதுதான் எங்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வும் எமது மக்களிற்கான அபிவிருத்தியும் சாத்தியப்படும் என்பதால்...

தமிழ் மக்களின் உண்மையான விடுதலையும் அவர்களது வாழ்வு சார்ந்த மேலான அபிவிருத்தியையும் எந்தவிதமான சுயநல நோக்கங்களும் இன்றி இதயசுத்தியோடு வேண்டி நிற்போர் அனைவரும் கிராமங்களை நோக்கி உடனடியாகச் செல்லவேண்டும். அங்கு வாழும் அப்பாவி மக்களோடு பேசவேண்டும். அரசியல் அடிப்படையில் அனாதைகளாய் நிற்கும் அவர்களோடு இனப்பிரச்சினை என்றால என்ன..? இனப்பிரச்சினையோடு அவர்களது சந்ததியினரின் வாழ்வு எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது? கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்துவரும் இனப்பிரச்சினை இன்றுவரையும் ஏன் தீர்வு காணப்படாமல் உள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வைச் சுலபமாகக் காணக்கூடிய வழிகள் என்ன? போன்ற விடயங்கள் பற்றிப் பேசவேண்டும் அவர்களது எதிர்கால வாழ்வுக்காக அவர்கள் ஒன்றுபடவேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு உணர்வுபூர்வமாக உணர்த்த வேண்டும். அதற்காக எங்கள் மக்கள் வாழும் கிராமங்களைநோக்கி அவசரமாகப் பயணிக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்களினதும் இலங்கை மக்களினதும் சுபீட்சமான எதிர்காலமே எமது வாழ்வின் இலட்சியம் என்ற தூய்மையான எண்ணத்துடன் கிராம ராச்சியங்களிற்காகக் கிராமங்களை நோக்கிப் பயணிப்போருக்கு...! கிராமத்து மக்கள் பற்றிய புரிதலும் அந்த மக்களின் கடந்த கால வரலாறு பற்றிய அறிதலும் மிகமிக அவசியமானது ஆகும். அந்தவகையில் எமது கிராமத்தினதும் அந்தக் கிராமங்களில் வாழும் எமது மக்களினதும் கடந்த இரண்டு நூற்றாண்டுகால வரலாற்றை நாம் சுருக்கமாகப் படிப்போம்.

**தங்கன்**

# அதிரடி ஐயாத்துரை




● யானைக்கும் - வெற்றிலைக்கும் உட்பூசல் முற்றிவிட்டதாம். கொழும்பும் - பொலநறுவையும் நேரே சிரிச்சாலும் உள்ளுக்குள்ளை ஒரே புகைச்சல். இரண்டு பேருக்கும் பொதுஎதிரி குரக்கன் சால்வை. இப்போதைக்கு இது மட்டுமே ஒற்றுமை. மங்களம் பாடிக்கொண்டு திரிபவரே திரிவைக்க ஆயத்தமாவதாக தகவல்.

● வடக்கு பெரிய அவையின்ர மாதாந்தக் கூட்டமே ஒரு சுவாரசியந்தான் கண்டியளோ. சேம்சைட் கோல் அடிக்கிற டீம்தான் ஆளுங்கட்சியின் பெரும்பாலான ஆக்கள். தலைமை நீதியரசர் இடையிடையே அதிரடியாக ஆடி கோல் போடுவதால அவரைக் கவுக்க நினைக்கிற சிவமான தலைவர்பாடு திண்டாட்டம்தானாம். மனுசன் பிறசர் குளிசையை கூட்டம் தொடங்க முதலும் போடுதாம். முடிஞ்சாப் பிறகும் போடுதாம்.

● அண்மையில் ஹெலியில அமைச்சர் வந்து விழாக்கொண்டாடின பள்ளிக்கூடத்தில மாகாணத்தின்ர உயர் அதிகாரிகள் வந்து கூட்டம் நடத்தினவையாம். அந்தப் பள்ளியின்ர தலைமை ஆசிரியர் அதிகாரிகளை எல்லாம் மிரட்டும் பாணியில் நடந்தவராம். இதுக்குப் பின்னணி ரங்கமான மின்னல்தான் எண்டு எல்லோரும் புறுபுறுத்தவையாம். பள்ளிக்கூடத்திலேயும் ராஜதர்பார்.

● சர்வகலாசாலையிலே இஸ்ரமாக இருந்த காலத்திலே எதிர்காலம் தெரியல்ல. இப்ப நம்மட பட்டதாரிகள் பாடுபடுமோசம். பாவம் அங்க இங்கையெண்டு அலையுதுகள். முந்தி என்னத்துக்கெண்டாலும் தியேட்டர் பக்கம் ஓடலாம். மனுசன் லேட் எண்டாலும் வெண்டுதரும். என்ன செய்வது வேதாளம் முருங்கமரத்தில எல்லே நிற்குது.

● வடக்கு யாழ்ப்பாண பெரிய நகர சபையின்ர உயர் பதவிக்காரர் இடம்மாற்றத்திலே போகேக்கை அம்மாடி பாக்கமுடியாது. அவருக்கு பரிசுகளை மோதிரம். சங்கிலி. கைச்சங்கிலி. மோட்டார் சைக்கிள் யப்பா இவர்தான் பெரிய நகர பிதாவா எண்டு சொல்லுமளவுக்கு அங்கே ஒரே திகைப்பாம். இது இப்படியிருக்க அங்க வேலை கிடைக்காத கொஞ்சம் வாசல்ல எள்ளெண்ணைச் சட்டி ஒண்டேயும் எரிச்சுவிட்டாங்களாம. ஓய என்ற பிரணவமந்திரம் கொண்ட உயர்பதவிக்காரருக்கு ரொம்ப அப்சட் ஆப் போச்சுதாம்.

● ஜெனிவாவினை வைத்து திரைக்கதை. வசனம். பாடல். டைரக்டன். தயாரிப்பு. என பலகோணங்களில படம் எடுக்க வெளிக்கிட்ட TNA இன்ரநசனல் கொம்பனிக்கு ஒரே திகைப்பாய் போச்சாம். படம் வெளிநாட்டிலையும் நாறிவிட்டது. உள்நாட்டில போடவே முடியாமல் தடையாம். இப்ப உள்ளக விசாரணையை வைத்து ஒரு அதிரடிச் சண்டைப்படம் ஒண்டு தயாராவதாக தகவல். எல்லாம் மந்திரமானவருக்குத்தான் வெளிச்சம்.

# புதிய அரசின் அடுத்தகட்ட நகர்வு என்ன?

அளவெட்டி ப.உதயகுமார்



ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நிறைவு பெற்றுவிட்ட பின்பு இரு தேசியக் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய நல்லாட்சி அரசு. அல்லது தேசிய அரசின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்னும் எதிர்பார்ப்பு இன்று மக்கள் மத்தியிலே தோற்றம் பெற்றுவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மக்களுக்காக அமைக்கப்பட்ட அரசு என்று சொல்லிவருகின்ற இந்த அரசின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளே குழப்பங்களுக்குள்ளேயே சென்றவண்ணமுள்ளன.

ஜனாதிபதி தேர்தலின்போது சொல்லப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலானவை இன்னும் தீர்க்கப்படவில்லை. அடுத்து வழங்கிய பொதுத்தேர்தல் வாக்குறுதிகளும் காற்றிலே பறந்து விடக்கூடிய நிலையிலேயே உள்ளது! தேர்தல் காலங்களிலே குறைக்கப்பட்ட சில உணவுப் பொருட்களின் விலைகள் மீண்டும் மகிந்த காலத்துக்கு திரும்பி உள்ளது. இன்னும் பல உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

மகிந்தவின் காலத்திலே எரிபொருட்கள் அதிக விலை விற்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி சொல்லி வந்தது. பின்பு தாம் ஆட்சியமைத்தால் எரிபொருட்களின் விலையை குறைப்போம் என்று குறைத்தும்விட்டிருந்தனர். இருப்பினும் உலகச் சந்தையிலே எரிபொருட்களின் விலையோ பெருமளவு குறைந்துள்ளன. இருந்தும் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க அரசு முயலவில்லை. இப்படியாக மக்களின்மீது சுமையை செலுத்தும் அரசாகவே இவ்வரசு அமையலாம் என்று எதிர்பார்க்கலாம்.

பெரும் நெருக்கடிகள் பிரச்சினைகளுடனேயே புதிய அரசின் பயணம் தொடங்கியுள்ளது. அமெரிக்கா விரித்த மாயவலையிலே இந்த அரசு வீழந்துவிட்டது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா, சீனா, பாகிஸ்தான், யப்பான் போன்ற நாடுகள் உள்ளன. உலகின் முதற்தரச் சண்டியனான அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளினை புறந்தள்ளி இலங்கையிலே காலூன்றப் போட்ட திட்டம் வெற்றி பெற்றுவிட்டதாக கருதலாம்.

ஏனெனில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையிலே இலங்கையை அது காப்பாற்றிவிட்டது. அமெரிக்கா சொன்னால் ஏனைய நாடுகளும் தலையாட்டிவிட்டது. இதனால் போர்க் குற்ற விசாரணையை புறந்தள்ளி மீள்பரிசீலனை செய்து அதன் காரங்களைக் குறைத்து வெறும் கண்துடைப்பு போர்க்குற்றங்களே சுமத்தப்பட்டதன்மூலம் இலங்கையரசு சங்கடமான நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ள போதிலும் போரினால் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலைமை கேள்விக்குறியாகியுள்ளது. சர்வதேசங்கள் வந்து உதவும் என்று பல வருடங்களாக எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிலே மண்விழுந்துள்ளது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் நாமே என்று சொல்லிக்கொண்டு இருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் அமெரிக்கா, இலங்கையுடன் சேர்ந்து தமிழ் மக்களை படுகுழியிலே தள்ளியுள்ளது. பாராளுமன்ற தேர்தலிலும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம் என்றவர்கள், சர்வதேசத்திடம் தமிழ் மக்களின் தன்மானத்தை அடமானம் வைத்துள்ளனர். அறுபது ஆண்டுகளாக தமிழர்கள் எதை, எதையெல்லாம் எதிர்பார்த்து, ஆயுதப் போராட்டம் முதல், அகிம்சைப் போர்வரையும் நடாத்தினார்களோ அவையெல்லாம் வீணாகிவிட்டது.

புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்பு வீறுகொண்டெழுந்த கூட்டமைப்பு ஒவ்வொரு தேர்தல்களிலும் வெற்றியீட்டிக் கொண்டது. ஆனாலும் இலங்கையிலே நடைபெற்று முடிந்த இறுதிக்கட்டப் போரின்போது நடைபெற்றவை பாரிய மனித உரிமைமீறல் என்று இதுவரை காலமும் கூச்சல் போட்டவர்கள் இப்போது சர்வதேச விசாரணைகள் மழுங்கடிப்பதற்கு துணைபோயுள்ளனர். இது தமிழர்கள் வரலாற்றிலே மன்னிக்கவோ அன்றி மறக்கவோ முடியாத வடுக்களாகும். ஐக்கிய நாடுகள் சபையிலே தமிழர்களுக்கு சார்பான நிலைமை தென்பட்டிருக்குமானால், சிறையில் தடுத்து வைக்கப்பட்டோர், காணாமல் போனவர்கள், கடத்திச் சொல்லப் பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களுக்கும் நியாயம் ஒன்று கிடைத்திருக்கும். பிடித்து வைக்கப்பட்டுள்ள காணிகளின் கதவுகளும் திறக்கப்பட்டு இருக்கும். ஆனால் இவையெல்லாம் மூடிமறைக்கப்பட்டுவிட்டது!

போர்க்குற்றங்களை விசாரணை செய்யவென்று சர்வதேச நீதிமன்று உருவாக்கப்படல் வேண்டும் எனும் கோரிக்கையும் பிசுபிசுத்துப் போய் விட்டது. கலப்பு நீதிமன்றினை அமைக்கவும் இலங்கை தயாரில்லை, உள்ளூர் நீதித்துறைமூலம் விசாரணை என்று பேச்சு அடிபடுகின்றன.

எனவே எதுஎப்படி அமைந்தாலும் தமிழ் மக்கள் எதிர்பார்த்து, அதாவது கூட்டமைப்பின் விருப்பத்துக்குரிய ஆட்சியாக ஐ.தே.க அரசு கலப்பு அரசாக உருவாகிவிட்டது. அதற்காக கூட்டமைப்பினரின் சொற்கேட்டு புதிய அரசுக்கு வாக்குப் போட்டும், தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைக்க புதிய அரசு தவறிவிட்டது. இனிமேலும் அது தமிழ் மக்களின் வாழ்விலே ஒளியேற்றுமா என்பது வெறும் கண்துடைப்பாகவே அமையப்போகின்றது. ஏனென்றால் இப்போதைய புதிய அரசு இரண்டு கட்சிகள் இணைந்த கூட்டாட்சி அரசாகும். இக்கூட்டாட்சியிலே சிக்கல்கள் எழுமானால், எ்திரும் புதிருமாக நிலைமைகள் அமையுமானால் உதவிக்கரம் நீட்டியவர்கள் உதவியை நிறுத்தினால் ஆட்சியும், ஆச்சியும் இல்லை என்றாகிவிடும் நிலைமை. ஆகவே ஒருவர் கொடுக்கப் போனால் மற்றவர் தடுக்கும் நிலைமையே தோன்றும். ஆதலால் தமிழ் மக்களது பிரச்சினைகளும் ஐ.நா. தீர்மானம் போலவே ஆகிவிடும்.

எனவே ஆட்சிக்கு முரண்டுகொடுத்து பதவிகளைப் பெற்றுக்கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்விலே விடியல் உண்டாகும் என்பதெல்லாம் வெறும் நம்பிக்கைதான். சுருங்கச் சொன்னால் பூச்சியம்தான்.

புதிய அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் சற்று யோசிக்கவும் சிந்திக்கவுமே வழிசமைத்து நிற்கின்றது தமிழ் மக்களின் வாழ்வியலில் விடியலை ஒருபோதுமே வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலையொன்று புதிய அரசுக்கு ஏற்படவும் வாய்ப்புகள் காத்திருக்கின்றன. ஏனெனில், சிங்களப் பேரினவாதிகளும், பேரினவாதக் கட்சிகளும் ஆட்சியிலே பங்குகொண்டுள்ளமையினால் எதனையும் தமிழர்களுக்கு வழங்க விடாமல் தடுக்கவும் கூடும். அதே வேளை பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் சிறிதளவும் அரசுக்கு இருப்பதாகவும் புலப்படவில்லை. காரணம், ஜனாதிபதி தேர்தல் நிறைவுபெற்றதும், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சிக்கு ஆதரவு அதாவது நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கியிருந்தது. இருந்தும் மீளக்குடியமர்வு, விடுவிக்கப்படாத பிரதேசங்களை விடுவித்தல், காணாமல் போனவர்களைக் கண்டறிதல், விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டோர்களை விடுவித்தல் உட்பட பல கோரிக்கைகளை கேட்டிருந்தனர். இவற்றிலே எதனைக்கூட புதிய அரசு இன்று வரை செய்யவில்லை அது பற்றி எண்ணவுமில்லை.

இதே சில இடங்கள் விடுவிக்கப் பட்டதோ என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம். இதுவும் வெறும் பம்மாத்து நடவடிக்கையாகும். அதாவது முன்னைய மகிந்த அரசு விடுவிக்க எண்ணிய, நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், காணிகளை விடுவிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியிருந்த பத்திரங்களில்கூட மகிந்தவின் படமும் செய்திகளுமே பொறிக்கப்பட்டிருந்தன.

மகிந்தவின் செயற்பாட்டிலே இவர்கள் திருவிழாவினை நடாத்தியிருக்கின்றனர். இதுமட்டுமே உண்மை. ஏனைய இடங்களை விடுவிக்க இராணுவம் சம்மதிக்க மறுகின்றனர் என்று ஜனாதிபதி கூறுகின்றார். நாட்டின் முப்படைகளின் தளபதி அவரே என்பதனை மாண்புமிகு ஜனாதிபதி ஐயா மறந்துவிட்டு இராணுவம்மீது குற்றஞ்சாட்டும் விடயத்தை பார்த்தால் இராணுவ விருப்பு வெறுப்பின்றி ஏதுமே நடவாது என்பதற்கு இது நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

இதனைவிட சிறைகளில் உள்ளவர்களைக்கூட விடுவிக்கமுடியாத நிலையே புதிய அரசுக்கு உள்ளது.

இதேவேளை பதின்மூன்றாம் திருத்தத்துக்கு அப்பால் செல்லவே முடியாது என்று அழுத்தம் திருத்தமாக பிரதமர் கூறிவிட்டார்.

13ஆம் திருத்தத்தை வழங்கவே சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச போன்ற பேரினவாதிகள் தடுக்க நிற்கின்றனர். இந்த நிலை இவ்வாறு இருக்க 30 அமைச்சுக்களுக்கு மேல் அமைச்சர்களை நியமிக்கமாட்டோம். அமைச்சுக்களுக்கு செலவிடும் பணத்தினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம் என்றுகூறிய இன்றைய ஆட்சியாளர்கள் தற்போது நூறுக்கு அண்மித்த அமைச்சுக்களை நியமித்து விட்டனர். அதேவேளை அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள அமைச்சு அந்தஸ்துள்ள 48 அமைச்சுக்களில் இன்னும் இரண்டுபேருக்கு அமைச்சுப் பொறுப்பை வழங்கமுடியாத சூழ்நிலையிலே புதிய அரசு உள்ளது.

எனவே இதுமட்டுமன்றி உணவுப் பொருட்களை விலையுயர்த்தாமல் இருக்கமுடியாத நிலைமையொன்று புதிய அரசுக்கு உள்ளது. நிதி நிலைமைகளை சீர்செய்யவென்று உணவுப் பொருட்கள் உட்பட்ட சில பல பொருட்கள் எதிர்வரும் வேளைகளில் விலையேற்றம் காணக்கூடிய சூழலே காணப்படுகின்றன.

ஜனாதிபதி ஒரு கூட்டிலும் பிரதமர் இன்னொரு கூட்டிலும், அமைச்சுக்கள் இரண்டு கூட்டிலும் சேர்ந்து வாழ முடியாத நிலை எதிர்காலத்திலே தோன்றலாம். புதிய அரசு அடுத்த கட்டங்களுக்கு நகர்வதற்கு இவர்கள் இடையூறாக நிற்கலாம்.

எது எப்படியமைந்தாலும் தமிழ் மக்களது எதிர்பார்ப்புக்களை நோக்கி நகரமுடியாத அளவுக்கு அழுத்தங்களை புதிய அரசு எதிர்கொள்ளக் கூடும்.

விலைவாசிகளை - உயர்த்தும் போது மக்கள் கூக்குரலிடவும் அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே புதிய அரசு எவ்வளவு காலம் இன்னும் நீடித்து நிலைக்கும். நிலைக்கப் போகின்றது என்பதைவிட எல்லோரையும் ஒருங்கமைத்து அடுத்த கட்டங்களுக்கு நகரமுடியுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டியுள்ளது.



# மருத்துவம்

### 1) பொன்மேனி தரும் குப்பைமேனி

குப்பை மேனி இலையையும் உப்பையும் சேர்த்து அரைத்து சொறி, சிரங்குகளுக்குத் தேய்த்துவர தணமாகும்.

### 2) தேளை விரட்டும் குழியோட்டிப்பூண்டு

பிரம்மதண்டின் பச்சை வேரைச் சிதைத்து தேள்கடி வாயில் வைத்துக் கட்ட நஞ்சு நீங்கும்.



# எளிய மருத்துவக் குறிப்புகள்

**3) வயிற்றுவலி போக்கும் நறுவலி –** நறுவிலிப்பட்டையை இடித்துச் சாறு பிழிந்து. தேங்காய்ப் பாலில் கலக்கி குடிக்க கடினமான வயிற்றுவலி போகும்.

**4) காற்று சுத்திகரிப்பான் சீனி** - சீனியை நாட்பட்ட நோயாளிகளின் படுக்கை அறையில் புகைக்க சுத்தக்காற்று உண்டாகி அறை சுத்தப்படும்.

**5) தலை பாரம் நீக்கும் கிராம்பு** - கிராம்பை நீர்விட்டு மை போல அரைத்து நெற்றியிலும் மூக்கு தண்டின்மீதும் பற்றிட தலைபாரம் நீரேற்றம் குணமாகும்.

**6) காயத்துக்கு காட்டாமணக்கு**

காயம்பட்டு, இரத்தம் வெளிப்பட்ட இடத்தில் காட்டாமைக்கு பாலைப் பூச குருதி நிற்கும். காயமும் ஆறும்.

**7) உப்பலுக்கு உப்பிலாங்கொடி-** மாந்தத்தினால் குழந்தைகளின் வயிறு உப்பிக் காணின், உப்பிலாங்கொடியை அரையில் கட்டத் தீரும்.

**8) குழந்தையை காப்பான் கரிப்பான்–** கரிசாலைச் சாறு 2 துளியுடன், 8 துளி தேன் கலந்துகொடுக்க கைக்குழந்தைகளுக்கு உண்டாகும் நீர்க்கோவை நீங்கும்.

**9) கடலையும் அடிதடியும்-** கடலை இலையை வேகவைத்து அடிபட்ட வீக்கம், மூட்டுப்பிசகல் முதலியவைகளுக்குச் சூட்டோடு வைத்துக்கட்ட தீரும்.

**10) மயக்கத்துக்கு ஏலம் –** ஏலக்காய் 1 பங்கு, பனைவெல்லம் பங்கு சேர்த்து, எட்டுப்பங்கு நீர்விட்டுக் காய்ச்சி கொடுக்க பித்த மயக்கம் நீங்கும்

புகைபிடிப்பவர்கள் அல்லாமல் மற்றவர்களுக்கு அலேர்ஜி, சுற்றுப்புற சூழ்நிலை, தூசுகளினால் நுரையீரல் அழற்சி ஏற்படுவதுண்டு. அதேசமயம் 45 வருடமாக புகைப்பிடித்தாலும் எந்த பாதிப்பு இல்லாமல் நுரையீரல் நன்றாக இயங்குபவர்களும் உண்டு. இது ஆளாளுக்கு வித்தியாசப்படலாம்.

எவ்வாறு இருப்பினும், இப்பொழுது மூன்று நாட்களில் நுரையீரல் சுத்தம் செய்வது என்று பார்ப்போம்.




# எவ்வாறு மூன்று நாட்களில் எளிதாக நுரையீரலை சுத்தம் செய்வது ?

* இதை செய்வதற்கு இரண்டு நாட்கள் முன்பே எல்லா பால் பொருட்கள் சாப்பிடுவதை நிறுத்திவிடவேண்டும். உதாரணத்திறக்கு பால், தேநீர், தயிர், மோர், வெண்ணெய், சீஸ் போன்றவை. உடலிருந்து நச்சுகளை நீக்க வேண்டியது அவசியம். எனவே தவறாது இதை கடைப்பிடிக்க வேண்டும்.

* சுத்தம் செய்வதற்கு முந்தைய நாள் இரவு ஒரு கப் மூலிகை தேநீரை குடிக்கவும். இது குடலில் இருந்து நச்சுகளை வெளியேற்ற உதவும். சுத்தம் செய்ய நுரையீரலுக்கும், உடலுக்கும் ஓய்வு தேவை. எனவே கடுமையான பயிற்சிகள், வேலைகளை செய்யவேண்டாம்.

**முதல் நாள்:**

* இரண்டு எலுமிச்சை பழங்களின் சாற்றை 300 மில்லி தண்ணீரில் கலந்து காலை உணவுக்கு முன்பு குடிக்கவும்.

* ஒரு மணி நேர இடைவெளிக்கு பிறகு 300 மில்லி சுத்தமான கிரேப்புரூட் சாற்றை குடிக்கவும். இதன் சுவை பிடிக்காவிட்டால் கிரேப் புரூட் சாற்றுக்கு பதிலாக பைனாப்பிள் சாற்றை குடிக்கலாம். எல்லாம் சுத்தமான தண்ணீர், சீனி கலக்காத சாறாக இருக்கட்டும். இந்த சா-றுகளில் இயற்கையான சுவாசத்தை சீராக்கும் அன்டிஆக்ஸிடன்டஸி நிறைந்துள்ளதால் நமது நுரையீரலுக்கு நன்மை பயக்கும்.

* மதிய உணவிறக்கு முன்பாக 300 மில்லி சுத்தமான கேரட் சாற்றை பருகவும். இதில் தண்ணீரோ, சீனியோ சேர்க்கக்கூடாது. கேரட் சாறு சுத்தம் செய்யும் மூன்று நாட்களும் இரத்தத்தை அமில நிலையிலிருந்து காரத்தன்மைக்கு மாற்றுகிறது.

* இரவு படுக்கபோகும் முன்பு 400 மில்லி பொட்டாசியம் நிறைந்த கிரேன்பெரி போன்ற சாற்றை குடிக்கவேண்டும். பொட்டாசியம் சுத்தம் செய்ய ஒரு டொனிக்காக உதவுகிறது. இது உடலின் உள்ளுறுப்புகளில் முக்கியமாக சிறுநீர்பாதை, நுரையீரல் தொற்றுகளை உண்டாக்கும் பக்டீரியாக்களை நீக்குகின்றது. கிரேன்பெரி கிடைக்காதவர்கள் சுத்தமான சிவப்பு திராட்சை அல்லது பைனாப்பிள், ஒரேஞ்சு சாற்றை கலப்பிடமில்லாமல் குடிக்கலாம்.

*இதை மூன்று நாட்கள் கடைப்பிடிக்கும் போது எளிதில் ஜீரணிக்ககூடிய உணவுகளை சாப்பிடவேண்டும். குறைந்தது 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்து வேர்வையை வெளியேற்றவும்.

அல்லது 20 நிமிடங்களில் சுடுதண்ணீரில் குளிக்கலாம். வியர்வை வெளியேறும்போது நச்சுகளும் வெளியேறும்.

* இரவில் கொதிநீர் ஆவி பிடிக்கவேண்டும். 5 முதல் 10 சொட்டுவரை யூகாலிப்ட்டஸ் ஆயில் கொதிநீரில் சேர்த்து தலையினை சுத்தமான போர்வையைக்கொண்டு மூடி ஆவியை நன்றாக உள்ளுக்குள் இழுத்து சுவாசிக்கவும். இவ்வாறு கொதிநீர் ஆறும்வரை ஆவி பிடிக்கவும்.

* மூன்று நாட்கள் இவ்வாறு கடைப்பிடிக்கவும். ஆஸ்துமா, நுரையீரல் அழற்சி, சைனஸ் தொல்லை உள்ளவர்களுக்கும் நல்ல பலனை அளிக்கும்.

# "கடமையை இன்றே செய்வதில் தானே ஆனந்தம்"

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வளவுதான்.

சில குறிப்பிட்ட காரியங்கள் நம் முன் நிகழும் போது, இயல்பாகவோ அல்லது பழக்கத்தின் காரணமாகவோ ஒரு குறிப்பிட்டவகையில் நடந்துகொள்ளும் உள்ளுந்தல் நம்மிடம் தோன்றுகிறது. இத்தகைய உள்உந்தல் எழுந்ததும் மனம் அந்தச் சூழ்நிலையைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறது. அந்தச் சூழ்நிலையில் இன்னவகையில் நடந்துகொள்வது நல்லது என்று சிலவேளைகளில் நினைக்கிறது. வேறு சிலவேளை களிலோ, அதே சூழ்நிலையில் அப்படி நடப்பது தவறு என்று நினைக்கிறது. எல்லா இடங்களிலும் கடமையைப் பற்றிய பொதுவான கருத்து என்னவென்றால் நல்லவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப நடந்து கொள்கிறார்கள். என்பதே.

ஒரு செயலைக் கடமை யாக்குவது எது? ஒரு கிறிஸ்தவன் தனக்கு முன் சிறிது மாட்டிறைச்சியைக் காண்கிறான். ஒன்று அவன் அதைச் சாப்பிட்டுத் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது இன்னொருவனுக்குக் கொடுத்து. அவன் உயிரைக் காக்கவேண்டும். இரண்டையும் செய்யவில்லை என்றால் கடமையிலிருந்து தான் தவறியதாகவே கட்டாயமாக அவன் எண்ணுவான். ஆனால் ஓர் இந்து அதைச் சாப்பிடத் துணிந்தாலோ அவனும் தன் கடமையிலிருந்து வழுவிவிட்டதாகவே நினைப்பான். பயிற்சியும் படிப்பும் ஓர் இந்துவை அப்படி நினைக்கச் செய்கின்றன. கடந்த நூற்றாண்டில் இந்தியாவில் தக் எனப்படும் பயங்கரமான ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் இருந்தனர். யாரை வேண்டுமானாலும் கொல்வதும், அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையடிப்பதும் தங்கள் கடமை என்று அவர்கள் எண்ணினர். எவ்வளவு அதிகம் பேரைக் கொல்கிறார்களோ, அந்த அளவிற்கு அவர்கள் தங்களைச் சிறந்தவர்களாகக் கருதினார்கள். சாதாரண-மாக ஒருவன் தெருவில் சென்று மற்றொருவனைச் சுட்டுக் கொன்றுவிட்டால், தான் தவறு செய்துவிட்டதற்காக அவன் வருந்தவேண்டும், அது தான் சரி, அதே மனிதன் போர்வீரனாகப் படையில் சேர்ந்து ஒருவனை அல்ல, இருபது பேரைக் கொன்றாலும் தன் கடமையைச் சிறப்பாகச் செய்ததாகவே நிச்சயமாக மகிழ்வான். எனவே செயலைக் கொண்டு கடமை வரையறுக்கப் படுவதில்லை.

அதனால் கடமை என்பதற்குப் புறச்சார்பான விளக்கம் தருவது என்பது இயலாத ஒன்று. ஆனால் அகச்சார்பான விளக்கம் இருக்கிறது. எந்தச் செயல் நம்மைக் கடவுளை நோக்கிச் செலுத்துகின்றதோ அது நற்செயல், நமது கடமை. எது நம்மைக் கீழ்நிலைக்கு இழுத்துச் செல்கிறதோ அது தீயது. நமது கடமை அல்ல. அகச்சார்பான இந்தக் கோணத்தில் நாம் பார்த்தால் சில செயல்களில் நம்மை உயர்த்தவும் உன்னதமாக்குவதற்குமான போக்கு இருப்பதையும், மற்றும் சிலவற்றில் நம்மைச் சீரழித்து தீயவர்கள் ஆக்குகின்ற போக்கு இப்பதையும் காணலாம்.

பல்வேறு நிலைகளிலும் சூழ்நிலைகளிலும் செயற்படுபவர்களான மனிதர்கள் அனைவரையும் பொறுத்தவரையில் இன்ன செயல் இன்ன போக்குக் கொண்டதாக இருக்கும் என்று ஆணித்தரமாக ஒருபோதும் வரையறுக்க முடியாது. ஆனால் எல்லா காலங்களிலும் எல்லா நெறியினருக்கும் எல்லா நாட்டினருக்குமான கடமையென்று மனிதகுலம் முழுவதுமே ஒருமனதாக ஏற்றுக்கொண்ட கருத்து ஒன்று உள்ளது ஒரு சமஸ்கிருத சுலோகம். அதை இப்படிச் சுருக்கமாகக் கூறுகிறது. எந்த உயிரையும் துன்புறுத்தக் கூடாது. எந்த உயிருக்கும் துன்பம்தராமல் இருப்பது புண்ணியம் எதையும் துன்புறுத்துவது பாவம்.

பிறப்பையும் வாழ்க்கை நிலையையும் அடிப்படையாகக் கொண்ட கடமைகளைப்பற்றி பகவத்கீதை பல இடங்களில் கூறுகிறது. பிறப்பும் வாழ்க்கையும் மற்றும் சமுதாயத்தில் ஒருவன் பெறுகின்ற இடமுமே அவனது வாழ்க்கையின் பல்வேறு செயற்பாடுகளின் மீது அவன் கொள்கின்ற மனநிலையையும் தார்மீக நிலையையும் பெருமளவிற்கு நிர்ணயிக்கின்றன. எனவே நாம் எந்தச் சமூகத்தில் பிறந்துள்ளோமோ. அந்தச் சமுதாயத்தின் இலட்சியங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப நம்மை உயர்த்தவும் உன்னதப்படுத்தவும் உதவுகின்ற செயலே நமது கடமையாகிறது.

வாரமொரு வாழ்வியற் சிந்தனையெனும் இப்பகுதி தேவையின் நிமித்தம் உருவாக்கப்பட் ஒன்று. எமது சமூகம் ஏதேதோ பாவனைசெய்து எங்கெங்கோ போகின்றது. தான் போகும் பாதை தனக்கே தெரியா-மல் தாண்டவமாடுகின்றது. இதை மாற்ற என்ன வழி?..... இம்மியளவேனும் இப்பகுதிக்கூடாக மாற்ற எத்தனிக்கின்றோம். பத்திரிகையின் பல்துருவக் கடமைகளில் இதுவும் ஒன்று. மாற்றங்களை எதிர்பார்த்து வாரமொருமுறை சந்திப்போம்.



அதன் செயற்பாட்டு முறைகளையும் விளைவுகளையும் வைத்து ஓரளவுக்கு அதைப் புரிந்துகொள்ளலாம்.

**நீ என்னை உன் அடிமை என்று நினைக்கும் போது உன்னைக் கொல்லும் ஆயுதமாய் நான் மாறி வி டுவது என் கடமை**

# அக்கினி புத்திரி




# விளக்கு மட்டுமா சிவப்பு?

வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்டுகொண்டிருந்ததை இன்னும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு பழைய கட்டடம். அதற்கு ஒரு மாடியும் உண்டு.

கீழ்ப்பகுதியில் மூன்று பெரிய அறைகள் ; மேல் பகுதியில் அறைகள். மேல் பகுதியில் இரண்டு. ஒவ்வோர் அறையிலும் பாரத பூமியின் தெய்வப் புதல்வர்கள் காணவேண்டிய அற்புதமான காட்சிகள்.

ஒரு மூலையில் அடுக்கிவைக்கப்பட்ட பானைகள். அவற்றிலிருந்து வரும் துர்நாற்றம்.

இன்னொரு பகுதியில் பாதி காலியாகவும் பாதி முழுமையாகவும் கோணிப்பைகளில் அடைக்கப்பட்ட பிராந்திப் போத்தல்கள். சுவரோரத்தில் வெள்ளைக்காரன் விட்டுப்போன சில நாற்காலிகள். அவற்றில் வடிவாம்பாள், காளியம்பரள், அங்கம்மாள், ரெங்கம்மாள், மாலெட்சுமி, மீனாட்சி ஆகிய தேவதைகள். அவர்களுக்குப் பக்கத்தில் அபராதம்கட்டவோ, ஜாமீன் கொடுக்கவோ வந்திருக்கும் இந்நாட்டு மன்னர்கள்.

இரண்டு மூன்று அலுமாரிகள்.

விக்டோரியா மகாராணி காலத்தில் அமர்த்தப்பட்ட அந்த அலுமாரிகள்மீது, ஜோர்ஜ் மன்னர் காலத்திலிருந்து தூசு படிந்து கிடக்கும் சில தஸ்தாவேஜுகள்.

லண்டன் வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டதன் ஞாபகச்சின்னமாக, நடுவிலே ஒரு வட்டமேசை. அதைச் சுற்றிலும் குற்றவாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வக்கீல் பிரதிநிதிகள். அவர்களுக்குப் பக்கத்திலேயே அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மேல் சபை வக்கீல்கள். அதாவது பிராஸிக்கூட்டர்கள். அவர்களுக்குப் பின்னால் கட்டுக் காகிதங்களுடன் இரகசியம் பேசும் காக்கியுடைக் காவலர்கள்.

உட்கார இடமில்லாமல் சுற்றிலும் நின்றுகொண்டிருக்கும் வாக்காளப் பெருமக்கள். ஒரு பெரிய மேசைக்கு முன்னாள் காகிதங்களை மேலும் கீழுமாக அடுக்கிக்கொண்டிருக்கும் இரண்டு குமாஸ்தாக்கள்.

ஆங்காங்கே கோர்ட்டுக்கு வந்த அழகிகளையும் அவர்களது வயதுகளையும் குறித்துக்கொள்ள வந்திருக்கும் பத்திரிகை நிருபர்கள்.

சாலை மணிக்கூண்டு தவறான நேரம் காட்டினாலும் தான் தவறுவதில்லை என்று அங்கிருக்கும் கடிகாரம் பதினொரு முறை மணியடிக்கிறது.

திடீரென்று, "உஸ்...உஸ்..." என்று சத்தம். எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

யாரையும் பார்த்துச் சிரித்தால் அதுவும் ஒரு சிபாரிசாகி விடும் என்ற பயத்தோடு, தலை குனிந்தபடியே மேடையின்மீது ஏறி ஆசனத்தில் அமருகிறார் ஒருவர்.

அவர், நீதிதேவனின் வாரிசு.

குமாஸ்தா எழுந்து நின்று அழைக்கிறார்.

"பி. வடிவாம்பாள்! வடிவாம்பாள்!"


ஆசையில் அடிபட்ட மனித இருதயம் போல், கிழிந்துபோன சேலையோடும் வங்காளப் பஞ்சத்தின் ஞாபகச்சின்னம் போன்ற உடலமைப்போடும் ஒரு நடுத்தர வயதுப் பெண் வந்துநிற்கிறாள்.

"மூணு லீற்றர் சாராயம் வைத்திருந்தாயா?" குமாஸ்தாவின் கேள்வி.

"ஆமா, எஜமான்." அவள் பதில். மூன்று நிமிஷம் நீதிபதி ஏதோ எழுதுகிறார். அதைக் கையில் வாங்கிக்கொண்டு. "இருநூறு ரூபாய் அபராதம்" என்கிறார் குமாஸ்தா.

அவள் கையைப் பிசைகிறாள். சுற்று முற்றும் பார்க்கிறாள். பொலிசுக்குப் பயந்து கண்ணீர் கண்களுக்குள்ளேயே நின்றுவிடுகிறது.

அடுத்தது காளியம்மாள். மீனாட்சி, சிட்டிபாபு, வடிவேலு எல்லாம் ஊறல், தொண்டி சோறு, சாராயம், வோர்னிஷ்.



கோவில்களிலே ஊதுவத்தி, சூடம், தேங்காய், புஷ்பம் அத்தனையும் சேர்ந்து வாசனை எழுப்புவதுபோல் பலவகைக் கஷாய வாசனைகள் எழுப்பி, "முருகா முருகா" என்று கோஷம் போடுவது போல் 'அபராதம்! ஆறு மாதம்!' என்று கோஷம்போடும் இந்த இடத்திற்குப் பெயர்தான் மாஜிஸ்திரேட் கோர்ட்.

மது வழக்குகள் முடிந்து மாது வழக்குகள் ஆரம்பமானபோது, முதலில் அழைக்கப்பட்ட பெயர்தான் ஜெயஸ்ரீ.

ஜெயஸ்ரீ எதிரே வந்து நிற்கிறாள்.

ஒரு சப்இன்ஸ்பெக்டர் ஒரு பக்கத்தில் எழுந்து நிற்கிறார்.

பத்திரிகா பாஜைப்படி அவள் அழகி! பத்திரிகைகளுக்கு எழுபது வயதுக் கிழவியும் இளம் பெண்தான் என்றாலும், அங்கே நின்ற ஜெயஸ்ரீ உண்மையிலேயே இளம்பெண். நல்ல அழகி. பூப்போட்ட பச்சைச்சேலை, கட்டி அதற்குத் தோதான ரவிக்கை அணிந்திருந்தாள். கழுத்திலே பத்து பவுண் சங்கிலி, கையிலே பன்னிரண்டு பவுனுக்கு வளையல்! இடது கை மோதிரவிரலில் நீலக்கல் பதித்த ஒரு மோதிரம்; காதிலே முத்துக் கம்மல்கள்.

அவளைப் பார்த்துக் கோர்ட் குமாஸ்தா கேட்கிறார்.

"ஏம்மா. நீ முந்தா நாள் சாயங்காலம் பீச் ரோட்டில் நின்றுகொண்டு அங்கு போய்க்கொண்டிருந்த வாலிபர்கள். "ஐம்பது ரூபாய் கொடுத்தால் ஜாலியாக இருக்கலாம் என்று அழைத்ததாகப் பொலிசார் வழக்குப் போட்டிருக்கிறார்கள்: நீ என்ன சொல்கிறாய்?"

" இல்லை ஐயா. நான் அப்படியெல்லாம் செய்யவில்லை" என்று கையெடுத்துக் கும்பிடுகிறாள் ஜெயஸ்ரீ.

ஐம்பது ரூபாய்க்கு வாலிபர்களை அழைத்த அந்தக் கைகளில் பளபள வென்று மின்னும் வளையல்களைக் கவனிக்கிறார் ஒரு வக்கீல்.

"அதுசரி. நீ குற்றவாளியா, இல்லையா?" என்று கேட்கிறார் மாஜிஸ்திரேட்.

அங்குமிங்கம் திருப்பிப் பார்த்து விட்டு, "இல்லை" என்கிறாள் ஜெயஸ்ரீ.

"உனக்கு ஜாமின் கொடுக்க யாராவது இருக்கிறார்களா?" என்பது அடுத்த கேள்வி.

வழுக்கி விழுந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கில் விழுந்த அந்த வனிதையை ஜாமினில்விட்டு, வழக்கம் போல் வாய்தா போடுகிறார் மாஜிஸ்திரேட்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் கோபத்தோடு அவளைப் பார்க்கிறார். குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் ஏமாற்றிவிட்டாளே என்ற கோபம் அது.

ஜாமின் கொடுத்தவர்களிலே ஒருவரை அழைத்து அவர் காதில் இரகசி யமாக ஏதோ சொல்கிறார். ஜெயஸ்ரீ அனுதாபத்தோடு கவனித்த அந்த வக்கீல். கோர்ட் நடவடிக்கை தொடர்கிறது. அது தொடர்ந்தாலென்ன, தொடராவிட்டாலென்ன, நாம் அந்த வக்கீலைத் தொடர்வோம்.

(விளக்கு எரியும்)

## வாரமொரு சிந்தனை

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# தமிழர்களின் மங்கல மரபு

தமிழ் மக்களிடையே நிலவி வரும் பழக்கவழக்கங்கள் பலப்பல. அவை ஒவ்வொன்றும் தமிழ் மக்களின் பழம்பெருமையை விளக்குவனவாகும். பழக்கவழக்கங்கள் என்றாலே அவை அனைத்தும் மூடநம்பிக்கையிலிருந்து முளைத்தவையே என்று முடிவுகட்டி விடுகின்றனர் சிலர். இது தவறு. எந்தக் காலத்திலும், எந்த ஒரு செயலும், அவசியத்தை முன்னிறுத்தியே தோற்றுவிக்கப்பெறுகின்றது. ஆனால், அவசியம் இல்லாதபோதும் வெறும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு அதில் ஈடுபடுவதனால் அது மூடநம்பிக்கையாகிறது. இன்று தமிழர் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களில் சில அவசியமற்றனவாகவும், தள்ளத்தக்கனவாகவும் இருக்கலாம். ஆனால், ஆதியில் அவசியத்தை முன்னிட்டே அவை தோன்றின. மேலும் பண்டைய பழக்கவழக்கங்கள் எல்லாமே இன்றைக்குத் தேவையற்றவை என்று கூறமுடியாது. அவற்றில் தேவைப்படுவனவும் பல உண்டு.

தமிழர் வாழ்க்கையோடு நீக்கமற நிறைந்துள்ள பழக்கவழக்கங்களின் வரலாற்றை ஆராயவேண்டும். எந்த ஒன்றையும் அது பழமையாகட்டும் அல்லது புதுமையாகட்டும், ஆராய்ச்சியின்றி ஏற்பதோ அல்லது மறுப்பதோ அறியாமையாகும். இந்தக் கண்ணோட்டத்துடன் தமிழர் பழக்கவழக்கங்கள் சிலவற்றை ஆராய்வோம்.

பார்ப்பது, படிப்பது, கேட்பது ஆகிய எல்லாம் அமங்கலத்தை நினைவூட்டாத மங்கலமாகவே இருக்கவேண்டும் என்று கருதினர் நமது முன்னோர். இந்த நல்லெண்ணத்தையொட்டி எழுந்த பழக்கவழக்கங்கள் பல.

தமிழ் புலவர்கள், கவிதையோ, காவியமோ எழுதப் புகுந்தால் துவக்கச் சொல்லை மங்கல சொல்லாக அமைப்பது மரபு. உலகம், திங்கள், திரு, சீர் ஆகியனவெல்லாம் இலக்கியங்களில் வரும் மங்கலச் சொற்களாகும்.

"உலகு, ஆதிபகவனை முதலாக உடைத்து" என்பது திருக்குறளின் முதல் வாக்கு"

"உலகம் உவப்ப" என்பது, திருமுருகாற்றுப் படையில் முதலில் வரும் திருவாக்கு

"உலகம் யாவையும்" என்பது கம்பராமாயணத்தில் கருச்சொல்.

"உலகெலாம்" என்பது, பெரிய புராணத்தின் துவக்கமொழியாகும்.

பண்டைப் புலவர்கள் உலகத்தின் ஒரு பகுதியாகவே தாங்கள் வாழும் நாட்டைக் கருதினர். உலக நன்மையை அடிப்படையாகக்கொண்டே தம்முடைய நலத்திற்கு, தாம் பேசுகின்ற மொழியின் வனத்திற்கு, தம்மைப் பெற்றெடுத்த நாட்டின் வாழ்வுக்குப் பாடுபட்டனர். ஆகவே, "உலகம்" என்ற ஒப்புயர்வற்ற சொல்லை மங்கலச் சொல்லாக்கினர்.

தம் அன்றாட வாழ்க்கையில் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் "இறை" உணர்வோடு அதாவது தெய்வசிந்தனையோடு ஈடுபடுவது பண்டைத் தமிழரின் வழக்கம். இன்றுகூட, இந்தப் பழக்கம் எல்லாத் தமிழரிடத்தும் இல்லாவிடினும் பெரும்பாலோரிடம் இருக்கக் காணலாம். உண்ணப் புகும்போது, உறங்கப் படுக்கும்போதும், விழித்து எழும்போதும், தாம் வழிபடும் தெய்வத்தின் பெயரைச் சொல்லுவது சர்வசாதாரணம். ஆம் "உலகம்" என்பதைப்போலவே, கடவுள் பெயரைக் குறிக்கும் சொல்லையும் மங்கலச் சொல்லாகவே கருதுவது தமிழர் மரபு.

சாதாரணமாக, கடிதம் எழுதும் போதுகூட, ஆரம்பத்தில் கடவுட் பெயரை எழுதுவதை இயன்றளவும் காண்கிறோம். சிலர், பிள்ளையார் சுழி, அதாவது கடவுட் சின்னத்தை வரைவதும் உண்டு. இந்தப் பழக்கம் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும். அதைத் தூய்மைப்படுத்தும் பரம்பொருளோடு தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நல்ல நோக்கத்தை ஒட்டி எழுந்ததாகும்.

அமங்கலச் சொல்லானதுவழுக்கியும் வாயில் வரக்கூடாது என்பது தமிழருடைய வழக்கம்.

**ஒழுக்கமுடையார்க்கு ஒல்லாவே தீய வழுக்கியும் வாயால் சொலல்**

என்பது வாய்மொழிக்கு வள்ளுவன் வகுத்த மரபு. குடும்பத்தில் யாரேனும் ஒருவர் இயற்கை எய்திவிட்டால் அதைப் பிறருக்கு தெரிவிக்கும்போது, இறந்துவிட்டார், செத்துவிட்டார், மாண்டு போனார் என்பது போன்ற அமங்கலச் சொற்களால் அறிவிப்பது மரபன்று. இயற்கை எய்தியவர் சைவராயின், சிவலோக பதவியடைந்தார்" என்றும், வைணவராயின், "வைகுந்த பதவி அடைந்தார் என்றும் அல்லது பொதுப்படையாக இறைவனடி சேர்ந்தார் என்றும் குறிப்பிடுவது வழக்கம்.

ஆனால் தமிழர்களின் மங்கல மரபு என்றும் கடைப்பிடிக்க வேண்டிய உயர்பண்பாகும். இன்றைய தமிழ்ச்சமூகத்தினர் இதனை அறிந்து உணர்ந்து செயற்பட வேண்டும்.




# நகர வீதிகளில் நதிப் பிரவாகம்

## ஷெல்லிதாசனின் புதுக்கவிதைத் தொகுதி

ஒன்று எட்டு அளவில் 100 பக்கங்களில் 69 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. முகப்பு, பதிப்பு, விபரம், இந்நூல்... பதிப்புரை, அணிந்துரை, கவிஞர் ஷெல்லிதாசன் பற்றி...? என் இதயத்திலிருந்து... பொருளடக்கம் இத்தியாதிகளுக்கு 16 பக்கங்கள் எல்லாமாக 116 பக்கங்களில் உருவாக நூலை 'தான்தோன்றிக் கவிராயர்' என்னும் சில்லையூர் செல்வராசனுக்கு

இறந்ததன் பின்னால்
என்னை
எண்ணியோர் நிமிடம்
தன்னை
மறந்திரு துளிர்நீர்
கண்ணில்
மல்கி 'ஆம், மனித சாதி
சிறந்திடக் கிரியை, வாக்கு
சிந்தையால் உழைப்பதற்கு
மறந்திலன் என்றும்'
என்றோர்
மானிடன் நினைத்தாற்
போதும்!

என்று சில்லையூரார் கவிதையைக் கொண்டே ஷெல்லிதாசன் தன்னுடைய இரண்டாவது கவிதைத் தொகுதியான இந்நூலை அணிவகுத்துள்ளது சிறப்பாகவே அமைந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக இருக்கும் புதுக் கவிதைக்கு வயதும் 75 தைத் தாண்டிவிட்டது. இனியினியும் தொடர்ந்தும் புதுக்கவிதையென அதனைச் சுட்டுவது சரியல்ல. நல்ல பெயரொன்றைச் சூட்ட வேண்டுமென அறைகூவல் விட்டிருந்தேன்.

புதுக்கவிதை ஆர்வலர் எவரும் அதனைக் கண்டு கொண்டதாகப்படவில்லை. என் சார்பில் அதற்கு 'படிதை' எனப் பெயரும் குறிப்பிட்டிருந்தேன். வேறு பெயர்களையும் பொருத்தமாக சூட்டினால் பரிசீலித்து புதுக்கவிதைக்கு பெயரைச் சூட்டிவிடலாமென்று கேட்டிருந்தேன். அதனை மீண்டும் இவ்விடயத்தில் ஞாபகப்படுத்தி ஷெல்லிதாசனின் கவிதை நூலுள் நுழைவோம்.

பழைமையான விடயங்களே புதுமையாகப் பரிணமிக்கின்றன என்பது கண்கூடு தமிழில் பழங்காலத்தில் செய்யுள் என்னும் இலக்கியவடிவம் உள்ளதைப் பலரும் அறிவர். அதே செய்யுள் போன்றே புதுக்கவிதைகளும் அமைவதைப் பார்க்கக் காணக் கூடியுள்ளது.

அந்தச் செய்யுளில் பழங் காலப் புலவர்கள் பாடிய பொருளைப் புரிவதற்கு விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அதே போன்றே இப்புதுக் கவிதைகளுக்கும் அடிக் குறிப்புகள் போடப்படவேண்டி உள்ளது. எனின் செய்யுளும் விளங்குவதில்லை. புதுக்கவிதைகளும் விளங்குவதில்லை.

'நகர வீதிகளில் நதிப் பிரவாகம்' என்னும் இந்நூலில் கவிஞர் ஷெல்லிதாசன் வாசிக்கும் வாசகனை அலைக்கழிக்காமல் சொல்லவருகின்ற விடயங்களை புரியும்படியாக எழுதியுள்ளார். அதனால் கவிதைகளூடே விழிப்புணர்வைத் தூண்டும் கருத்துக்கள் உடனடியாகவே வாசகனைச் சென்றடைகிறது.

'பந்தலுக்குள் பணி' என்னும் முதலாவது கவிதையில்

"சுதந்திரமா இது
நிரந்தரமாய் அதனை
அறுபதாண்டுகளுக்கு
மேலாக
காவு கொடுத்த ஏக்கங்கள்!"

இவ்விதம் அக்கவிதையில் எட்டு படிமங்கள் சொல்லப்பட்டு உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முத்துக்கள். அவரது கவிதைகளில் மரபுக்கவிதைகளுக்கான எதுகை, மோனை அமைவதனையும் அவதானிக்கலாம்.

சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மனிதனை மனிதன் மதியாமை, ஏமாற்றம் போன்ற காரியங்களைக் கண்டு அவரது கவிதைகள் சுட்டி நிற்பதை நூலில் அதிகமாக அனுபவிக்கலாம்.

காணாமற் போய்விட்ட
நீதியாக
சதங்களின் சலசலப்பை
உண்டியலில்கூட
காண முடியவில்லை.

என்னும் கவிதை வரிகளூடாக சில்லறைத் தட்டுப்பாட்டைச் சுட்டுவதுடன் இப்போதெல்லாம் பாவனை இழந்து போய் விட்டதையும்,

துடுப்பாட்டத்தில் மட்டும்
சதம் தனது பெயர்
உச்சரிக்கப் படுவதைக் கேட்டு
உள்ளூர ஆனந்தப் படுகிறது!

என்பதினூடாக 50, சதத்திற்குக் குறைவான சதக் காசுகளுக்கு எந்தப் பொருளையும் பெற்றுக்கொள்ள முடியாததையும் சிந்திக்கவைத்துள்ளது. மேற்கூறிய வரிகள் 'நோட்டுக்களின் நோட்டம்' கவிதையில் பார்க்கலாம்.

11 ஆம் பக்கத்தில் 'மண்புதைத்த மனிதங்கள்' கவிதையில் கவிஞர் இப்படிச் சாடி இருக்கின்றார். எங்கள் நடைமுறைகளை,

அசையும் அசையாச்
சொத்துக்களையும்
அந்தஸ்துகளையும்
ஆராய்ந்தே
சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட
திருமணங்கள்கூட இன்று
நிச்சயமாக்கப்படுகின்றன
எமது இல்லங்களிலே!

'குருதிப் புனல்' (பக்:13) மனிதம் பற்றி நீண்டதொரு கவிதையில் விலாவாரியாக ஆராய்ந்துள்ளவர் சிலவரிகளில் காட்டியுள்ளதை வாசித்துப் பார்க்கலாம்.

ஆலமரம் ஒன்றைச் சொல்ல
கிளைகளோ
இன்னொன்றை உச்சரிக்க
கிளைகளில் முளைவிட்டுத்
தொங்கும்
விழுதுகளோ
வெவ்வேறு விதங்களாய்!

'பூங்காவனத்துப் புதுக்கனவு' (பக்:24) என்னும் கவிதையில் புதிதாக எழுந்துவரக் காத்திருக்கும் நவயுக மண்ணில் பெண்களின் வாழ்வும், பங்களிப்பும் விடுதலையும் நிச்சயம் உண்டென அறைகூவுகிறார்.

மாதர் தம்பெருமை
மனுக்குலத்தின் நற்சிறப்பு
அந்தப் பூங்காவனத்தினிலே
புதுக்கவிதை பாடிவரும்!

கவிஞர் ஷெல்லிதாசன் மூத்த படைப்பாளி ஆதால் அவரது ஒவ்வொரு கவிதைகளும் இம் மண்ணில் நவயுக பொதுவுடைமைச் சமுதாயத்தை எதிர்நோக்கி எழுதப்பட்டுள்ளதை 100, பக்கங்களிலும் அடங்கியுள்ள 69, கவிதைகளிலும் நுகரக் கூடியதாகக் காணப்படுகிறது.

அவ்வப்போது அவரால் எழுதப்பட்டவை. ஆனாலும் ஒரு சேரப் பார்க்கையில் அவரது கனமான கடின உழைப்பைச் சிந்தித்து ஆச்சரியப்பட வைத்துள்ளன அவரது அத்தனை கவிதைகளும்.

புதிதாக கவிதைகள் எழுத முயலும் புதுக்கவிதை இளவல்கள் இவரது நூல்களைப் பெற்று வாசித்துப் பண்படைந்து எழுத்துலகில் கால்பதிக்க முன்வரலாமென சிபார்சு செய்யலாம்.

**தேவிபரமலிங்கம்**

ச மூக வலைதளங்கள் பலதரப்பட்ட மக்களைக் கொண்டு இருக்கின்றன. பெரும்பாலானோர் நினைவுகளையும் நனவுகளையும் பகிர்கின்றனர். ஆனால், அங்கே இயங்குபவர்கள் அனைவரும் ஒரேமாதிரியான மனநிலையில் இருப்பதில்லை. வட்ஸ்அப், ஃபேஸ்புக், ட்விட்டர் முதலானவற்றைப் பயன்படுத்துபவர்களில் சுவாரசியமான பயனர்கள் பலர் உண்டு. அவர்களைப் பற்றிய சிறு - குறு தகவல் குறிப்புகள் இவை:

**புகைப்பட பிரபலங்கள்:**

நின்றால் புகைப்படம், நடந்தால் புகைப்படம், அமர்ந்தால், ஊர்சுற்றினால் படம் என்று புகைப்படங்களாகப் போட்டு பிரபலம் ஆனவர்கள் இவர்கள். அவர்களின் புகைப்படத்துக்கு குவிந்திருக்கும் லைக், கமெண்டுகளைப் பார்க்கும்போதுதான் நமக்கு காதில் புகைவரும். சரி பிரபலமானவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் தெரியுமா?

தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக செல்ஃபியைப் பதிவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரைத் தூக்கத்தில் ஒரு செல்ஃபி, தூங்கி எழுந்தவுடன் செல்ஃபி, பல் விளக்கும்போது செல்ஃபி என்று இவர்களின் செல்ஃபி பட்டியல் சென்று கொண்டே இருக்கிறது. ஆணாதிக்கம் நசுக்கப்படுவதும் இங்கேதான். ஆம், இந்த வகைப் பிரபலங்களில் பெண்களுக்கே அதிக மவுசு.

**'வணக்க' வல்லுநர்கள்:**

இவர்களின் தினசரி வேலைகளில் முக்கியமானது வணக்கம் என்று சொ(கொ)ல்லும் நிலைத்தகவலை மறக்காமல் பதிவேற்றுவது!

காலை எழுந்தவுடன் படிப்பு என்று பாரதியார் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு ஃபேஸ்புக்கைப் படிப்பார்கள். அதோடு மறக்காமல் □காலை வணக்கம்□ என்று ஸ்டேட்டஸ் போட்டுவிடுவார்கள். மதிய வேளையில் □மதிய வணக்கம்□ என்ற ஸ்டேட்டஸும், இரவில் □இரவு வணக்கம் நண்பர்களே, உறவுகளே, சொந்தங்களே!□ ஸ்டேட்டஸும் போடப்படும். வணக்கம் சொல்லியே வதக்கி எடுப்பவர்கள் இவர்கள்.

**புரியாத புதிர்கள்:**

இந்த வகை ஆட்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்பது அவர்களுக்கே புரியாது. தமிழில் புதிதாக சில வார்த்தைகளைத் தெரிந்து கொண்டு வந்து, பத்துப் பக்கங்களுக்குக் குறையாமல் எழுதி, (படிப்பது ஃபேஸ்புக் நண்பர்களின் கடமை என அவதானிப்பவர்கள்!) சாமான்ய ரசிகர்களைத் திணறடித்தே பிரபலமானவர்கள் இவர்கள்.

**ரசிக பிரபலங்கள்:**




# சமூக வலைதளங்களில் நீங்கள் யார்?

எப்படியாவது பிரபலம் ஆகவேண்டும் என்று நினைத்து, பிரபலங்கள் அடிக்கடி கமெண்டில் கதைப்பது, அவர்களோடு சேர்ந்து புகைப்படம் எடுத்துத் தன் பக்கத்தில் பதிவது, அவர்களின் எல்லாப் பதிவுகளுக்கும் சூப்பர், செம்ம சொல்லிக்கொண்டே இருப்பதுபோன்ற காரியங்களில் கர்மசிரத்தையாய் இருப்பவர்கள்.

**ஃபீலிங்ஸ் பறவைகள்:**

காதல் மற்றும் காதல் சார்ந்த இடங்களில் அல்லது தளங்களில் மட்டும் ஈடுபாட்டுடன் இயங்குபவர்கள் காதல், பிரிவு ஆகியவற்றைத் தவிர வேறெதுவும் அவர்களுக்குத் தெரியாது.

**'புஜ்ஜிமா'க்கள்:**

இவர்கள் எப்போதும் குழந்தைப் படங்கள், பூக்கள், இயற்கை ஆகியவற்றை மட்டுமே சேருபவர்கள் லைக்குபவர்கள். அடுத்தவர்கள், அழகான குழந்தைப் படங்களைப் பதிவேற்றினால் மட்டும்தான் ச்சசோ ஸ்வீட், லவ்லி, கியூட் சொல்வார்கள்.

**தொழில் முறை பதிவர்கள்:**

மாதக்கணக்காக அமைதியாக இருப்பார்கள். ஆனால் அவர்களின் பொருட்களை விளம்பரப்படுத்தும் வேலை வந்துவிட்டால் மட்டும், தீயாய் வேலை செய்வார்கள்.

**கடவுள் பற்றாளர்கள்:**

பண்டிகைக் காலங்கள், விழாக் காலங்களில் மட்டும் சுறுசுறுப்பாக கடவுள்களின் வரலாறு, தோற்றம், விழாக்கள் குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொள்வார்கள்.

**கொப்பி பேஸ்டாளர்கள்:**

நன்றாக இருக்கும் பதிவுகளை, காப்பியடித்து தன் பக்கத்தில் போட்டு, "அட, இந்தப் பையனுக்குள்ள இம்புட்டு அறிவா?!" என்று புருவம் உயர்த்த வைக்கும் கொப்பி பேஸ்டாளர்கள். இந்தப் பதிவுகளில் பெரும்பாலானவை பத்திரிகைகளில் தொகுக்கப்படுவதும் கவனிக்கத்தக்க கொடுமை.

**தகவல் சொல்லிகள்:**

2 நிமிடத்தில் சமைப்பது எப்படி, அழகாவது எப்படி, இயற்கை விவசாயம் செய்வது எப்படி, தகவல் பெறும் உரிமைச்சட்டத்தைக் கையாள்வது எப்படி என்று தடுக்கி விழுந்தால்கூட தகவல் சொல்லிக் கொண்டே இருப்பது இவர்களின் ஸ்பெஷாலிட்டி. எப்புடிங்க இப்படி?

**'கோட்'டீஸ்வரர்கள்:**

கருத்து சொல்லி, கைகாலை புண்ணாக்கிக் கொள்ளாமல், கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்து பேர் வாங்குபவர்கள். தெளிவாக தத்துவங்களை (மற்றவர்களின்) மட்டுமே பகிர்வார்கள். பிரபல கோட்ஸ் சைட்டுகளின் கோட் இமேஜ்களைப் பகிர்ந்து உலகத்துக்கு ஏதாவது சொல்லிக்கொண்டு தங்கள் இருப்பை நிலை நிறுத்துபவர்கள்.

**சமூக சேவையாளர்கள்:**

சமூக ஊடகங்களை, சமூக சேவைகளுக்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்ளும் குறைந்த லைக்குகளுக்கு சொந்தக்காரர்கள்.

சரி... நீங்கள் எந்த வகை?



‘இலக்கியம்’ என்றதும் நம் எண்ணத்தில் முதலில் தோன்றுவது ‘காதல்’ என்ற பொருள்தானே? காரணம், ‘காதல்’ மனித உணர்வுகளில் பின்னிப் பிணைந்து, உணர்வுகளை தட்டிச் சீக்கிரம் தூண்டி விடுகிறது. காதல் சுவை சொல்லாத இலக்கியங்களே இல்லை என்று கூறுமளவிற்கு இலக்கியத்தில் ‘காதல்’ பின்னிப் பிணைந்து இழையோடுகிறது.

இங்கு காதலில் கட்டுண்டு, கன்னி ஒருத்தி தன் காதல் ஜெயித்து, திருமணத்தில் கொண்டு வந்துசேர்த்த சேதியை அறிந்து கட்டுக் கடங்காத மகிழ்வினில் துள்ளிக் குதிக்கின்றாள்.

“காத்திருந்தேன்
காத்திருந்தேன்

காலமெல்லாம்
பார்த்திருந்தேன்

பார்த்திருந்த
காலமெல்லாம்

பழம் போல் கனிந்
ததம்மா...”

என்று காத்திருந்த காதல், பழம்போல் கனிந்ததை கவிஞர் கூறுகிறார்.

‘தாய்’ ஒரு பெண்ணிற்கு பிறந்த போதிலிருந்து, அவளிற்குரிய தேவை அறிந்து, நேரம் அறிந்து, அன்பும் பாசமும் கலந்து கொடுத்து, அவள் மனதின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, அரவணைத்து வளர்க்கின்றாள். அத்தகைய அன்பும் பாசமும், மணநாள் சேதியை காதலன் கூறுவதைக் கேட்ட மாத்திரத்தில் மறைந்துவிடும் என்று கூறுகிறாள்.

இதையே கவிஞர்.....

“காதல் உன்பால் இல்லை
என்றால்

கன்னி உள்ளம் கருகி விடும்

தேதி வைத்து சேதி
சொன்னால்

தாய் முகமும் மறந்துவிடும்...”

என்று கூறுகிறார்.

அடுத்து, பெண்கள் கூந்தலுக்கு பூச்சூடும் அழகு, அந்தக் கூந்தலுக்கு ஒரு தனி அழகைக் கொடுத்து, அவர்கள் எழிலுக்கு மேலும் மெருகு சேர்த்துவிடுகிறது. தாயானவள் தன் மகளிற்கு கூந்தலில் பூச்சூடி, தன் மகளின் அழகை ரசித்து மகிழ்வாள். அந்தப் பூச்சூடும் உரிமைகூட மணமானதும் கணவனுக்குச் சொந்தமாகி விடுகிறது.

இதையே மிக இயல்பாக, யதார்த்தமாக கண்ணதாசன் அந்தப் பெண்ணின் உள்ளப் பாங்கில் நின்று...

“தங்கமகள் கூந்தல் என்று

தாய் முடித்துப் பூவும்
வைப்பாள்

மங்கை மணம் முடித்து
விட்டால்

மணவாளன் பூ முடிப்பான்...”

என்று வடித்துவிடுகிறார்.

அடுத்து இன்னொரு தத்துவத்தை மிக அழகாக, நாமாக விரும்பிக் கொண்டுவந்து இவ்வுலகில் பிறந்து விடுவதில்லை என்பதையும், பிறந்தவர்கள் யாவரும் பெற்றவர்களாலே வளர்க்கப்படுகின்றார்கள் என்பதையும் கூறி, தம்மை விரும்பி மணம் முடிப்பவர்கள் தம்முடைய உயிரில் தம்மை இணைத்து வளர்ப்பார்கள்.



# கண்மூடிக் காத்திருப்பேன்...

என்று “தம் கணவனே தமக்கு உயிர்” என்றும், ஒரு கணவனுக்கே மனைவியானவள் சொந்தமாகி விடுகிறாள் என்பதையும், மிக நயமாக, பண்பாடு, நாகரிகம் தவறாமல், காதலால் பிணைக்கப்பட்டு, உயிரோடு கலந்துகொண்ட உறவாக இணைத்து விடுகிறார்.

தாய்க்குப் பின் தலைவனே தனது வழிகாட்டி, வாழ்க்கை என்று கூறிவிடும் அழகு கண்ணதாசனுக்கே உரிய நடையில் நான்கு வரியில் வடித்து கொடுத்திருக்கிறார்.

“நாம் விரும்பிப்
பிறப்பதில்லை

பெற்றவளே
வளர்ப்பதில்லை

தாம் விரும்பி
மணமுடிப்பார்

தம் உயிரில்
நமை வளர்ப்பார்...”
என்று கூறுகிறார்.

அடுத்துவரும் வரிகளில் காதல் என்றாலே தோல்விதான், என்ற ஒரு உண்மையை நாம் உலகில் பரவலாக பார்க்கக் கூடியதாக இருக்கின்ற காலத்தில், இந்தக் கன்னி தன் காதல் ஜெயித்த பூரிப்பில் திளைக்கின்றாள்.

“காதலிலே
தோல்வி கண்டோர்

கதைகளை நான்
படித்ததுண்டு

காதலிலே வெற்றி கண்ட

கன்னி என்போல்
யாருண்டு...” என்று, களிப்பில், பெருமிதத்தில் இருக்கும் பெண்ணில் தன்னை நிலைப்படுத்தி கவிஞர் கூறுகிறார்.

அடுத்து, ஒரு பெண் ஒருவனுக்கு மனைவியாகி விட்டாலே, அவளைத் தென்றல் தீண்டுவதைக்கூட அவள் விரும்பமாட்டாள். தன் கணவனன்றி தன் உடலை வருடுவதற்கு தென்றலுக்குக் கூட உரிமை கிடையாது, தன் உடல் முழுக்க முழுக்க தன் கனவனுக்கே சொந்தம் என்று கூறும் பாங்கு தமிழர் பெருமை கூறும் கற்புநெறி நிலைப்படுத்தப் பட்டிருக்கும் பாங்கு, கற்பு என்னும் அணிகலன் பெண்ணிற்கு என்றும் பெருமை தேடித்தரும் என்பதை மிக நயமாக எளியநடையில் கூறுவதில் கண்ணதாசனுக்கு நிகர் கண்ணதாசனே.

“தனித்திருந்த
என்னுடலை

தழுவி வந்த தென்றலுக்கு

துணை அடைந்த என்
உடலை

தொடுவதற்கும் உரிமை
இல்லை...” என்று கூறுகிறார்.

அடுத்துவரும் வரிகளில் இலக்கியச் சிறப்பின் உச்சிக்கே நம்மை இழுத்துச் சென்று விடுகிறார்.

“கண் திறந்து
நானிருந்தேன்

கட்டழகர் குடிபுகுந்தார்

கண் திறந்தால் போய்
விடுவார்

கண்மூடிக்
காத்திருப்பேன்...”

என்று, தன் கண்ணைத் திறந்துவிட்டால் தன் கணவன் தன்னைவிட்டுப் பிரிந்துவிடுவாரோ என்ற பயம் கலந்த ஏக்கம் அந்தப் பெண்ணில் பின்னி நிற்கிறது. தன் கணவனை தன்னை விட்டுக் கணமேனும் பிரித்துப்பார்க்க இயலாதவளாக, கண்ணைத் திறந்த நேரத்தில் உள்புகுந்தவர், மீண்டும் கண்ணைத் திறந்து விட்டால் போய்விடுவாரோ என்ற பயத்துடனும், எங்கே கண் திறந்தால் கணவன் வேறு இடம் நாடிவிடுவாரோ என்ற தாபமும் இணைந்து நிற்க, தன் கணவனை உள்ளத்தில் நிறுத்தி தனக்கே உரிமையாக்கி வைத்திருக்க விரும்புகிறாள் என்பதை நல்ல நயத்துடன் சிலேடையாக்கி, கவிதையாக்கி அந்தப் பெண்ணின் உணர்வுகளில், ஏக்கங்களில், களிப்பில் நின்று வடித்திருக்கும் நயம் அற்புதம்...! அற்புதம்!

## மனதுக்குள் சிரிப்பதற்கு



**கணவன்:** பொழுது போகேலயண்டா போய் காய்கறி வாங்கி வாங்க...!
**மனைவி:** பாத்து வாங்கிப் பழக்கமில்லையுங்க...!
**கணவன்:** சரி வந்து காய்கறி நறுக்கியேனும் கொடுங்களேன்...!
**மனைவி:** அட அதுவும் எனக்குத் தெரியாதே...!
**கணவன்:** சமையல் ஆயிட்டுது சாப்பிட வாங்க...!
**மனைவி:** நீங்கள் கேக்கிறதை எல்லாம் மறுத்திட்டே இருக்கிறது நல்லதில்ல. இதோ வரேன்...!



இரு நண்பர்கள்
கொஞ்ச நாள் ஆஸ்பத்திரியில இருக்கலாம் என நினைக்கிறன்.
டாக்டரைப் பாத்தியா?
இல்லை. நேசைப் பாத்தன்.



**ஆசிரியர் :** தம்பி வற்றாத நீரூற்றொன்று சொல்லு பாப்பம்.
**மாணவன்:** எங்கட வகுப்பு சங்கரின் மூக்குத்தான் சேர்!.
**ஆசிரியர் :** உன் தாய்மொழியில் தந்தையைப் பற்றி சில வாக்கியம் சொல்லப்பா!
**மாணவன்:** இந்தாளுக்கு சொன்னாலும் புரியாது....! தானாகவும் யோசிக்கத் தெரியாது...! இந்தாளோட நான் படுற பாடு...!




**கணவன்:** இண்டைக்கு வெண்டிக்காய் கூட்டு வேண்டாமப்பா...!
**மனைவி :** கடந்த நாலு நாளும் வெண்டிக்காய் கூட்டுத்தானே வைத்தேன். இன்று மட்டும் ஏன் அப்படியொரு வெறுப்பு... அதில பேசாமல் சாப்பிடுங்கோ...!

**விருந்தாளி:** அந்த நாய் ஏன் என்னைப் பாத்து அப்படிக் குரைக்குது.
கொஞ்சம் கவனமா பிடிச்சிரு தம்பி.
**வீட்டுப்பையன் :** விரைவ சாப்பிடு மாமா! தான் சாப்பிடற தட்டில இன்னொருத்தர் சாப்பிட்டா அதுக்கு பிடிக்காது.



# வாரமொரு காரம்

# என்னால் முடியுமென்றால் ஏன் உன்னால் முடியாது?...




**தனிநபர் ஒருவரால் அதிகாரத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு அப்பாவிப் பொது மக்களை சட்டத்தின் கூடாரத்துக்குள் சந்தோசமாக வைக்க முடியுமானால் ஏன் மற்றவர்களால் அது முடியாது என்பதுதான் இக்காரத்தின் சாரம்.**

இன்று குடாநாட்டில் குற்றத் திற்கான சட்டநெறி முறைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமையால் குற்றவாளிகள் திட்டமிட்ட தீவிரவாதத்தை கைவிடும் நிலை உருவாகிவருகின்றது. பொலிசாரின் கடமைகள் கண்காணிக்கப்படுகின்றன. சட்டத்தின்முன் எவரும் தப்பிக்க முடியாத சௌபாக்கிய நிலை உருவாகியுள்ளது. வாய்தாவான வழக்குகள் எல்லாம் வாசலுக்கு வருகின்றது. தீரவின் திசை முகங்கள் அனைவரையும் திகிலடையச் செய்கின்றது. உண்மையில் இது போற்றுதலுக்குரிய விடயம். தனிநபர் ஒருவரால் அதிகாரத்தை மாத்திரம் ஆதாரமாகக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களை சட்டத்தின் கூடாரத்துக்குள் சந்தோசமாக வைக்க முடியுமானால் ஏன் மற்றவர்களால் அது முடியாது என்பதுதான் இக்காரத்தின் சாரம்.

யாரையும் குறிவைப்பது இங்கு நோக்கமல்ல நிறைகளைச் சொல்வதன் உடாக குறைகளை நிராகரிக்க எத்தனிக்கின்றோம் இதுவே உண்மை.

சட்டமெரு இருட்டறை, சமூகத்தின் குற்றங்களை குறைக்க சட்டத்தால் முடியாது, சிறை பிடிக்கப்பட்டவன் நாளை நிறைவு பெற்றுவருவான். எதிலும் இலஞ்சம் எவரிலும் 'உண்மையில்லை என்றெல்லாம்' பலமாக விமர்சித்தோம் இன்று அதற்குப்பதில் கிடைத்துள்ளது. சட்டவீாளர்கள் புரியும் சாதனைதான் சட்டத்தின் திரியில் ஒளியேற்றுகின்றது. இதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் எத்தனை அசம்பாவிதங்கள் யாழ்.மண்ணில் அரங்கேறின, இன்று அது இல்லை என்று கூறவரவில்லை இருக்கின்றன. ஆனால் அது பெருமளவு குறைந்து விட்டன என்பதை எவரும் மறுக்க முடியாது. அதைத் தடுக்க எவ்வாறு முடிந்தது?... ஏன் அது முன்பு முடியவில்லை?... அதிகாரத்தைப் பயன்படுத்தி தனியொருவரால் இவ்வாறு குற்றங்களை கட்டுப்படுத்த முடியுமென்றால் அதே அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்டுப்படுத்த ஏன் மற்றவர்களால் முடியாது?....

தயவுசெய்து சிந்தியுங்கள். பல துருவங்களில் எமது சமூகம் நொந்து வெந்துபோய் இருக்கின்றது. மீண்டும் மீண்டும் துன்பங்களை சுமந்து வாழ எவர்க்கும் இடமளிக்க முடியாது. சமூகக் குற்றங்களிற்கு அடிப்படைக் காரணம் அவரவர் தமது கடமையை செய்ய பின்னிற்பதேயாகும்.

எம்மை நம்பி, எமது சேவையை நம்பி, ஒரு சமூகம் ஊசலாடும்போது அதற்குத் துரோகமிழைப்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. உயிருக்கு உத்தரவாதம் தேடியோ அல்லது சுயலாபத்தை முன் நிறுத்தியோ கடமையை செய்ய எத்தனிக்கும்போது தான் எங்களில் குளிர்காய சிலர் முற்படுகின்றனர்.

வேறு மாவட்டங்களில் தடுக்க முடியாத அடக்கமுடியாத குற்றச் செயல்கள் யாழ் மாவட்டத்தில் எவ்வாறு தடுக்கப்படுகின்றது?.. எவ்வாறு அடக்கப்படுகின்றது?.. அது ஏன் மற்றவர்களால் முடியாது?.. என்னால் முடியுமென்றால் ஏன் உன்னால் முடியாது?... முயன்று பாருங்கள் இதுவே இந்த வார காரத்தின் சாரமாகும்.

**• வெண்கட்டியன்**

# இந்தவாரம் உங்கள் பலன்

**(15.10.2015 தொடக்கம் 21.10.2015 வரை)**

## மேடம்

குலதெய்வ வழிபாடு செய்துவர முயற்சித்த எண்ணங்கள் நிறைவேறும். பிரிந்துபோன கணவன் – மனைவி உறவுகளில் கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒன்று சேரக்கூடிய காலமாகும். வெளிநாடு சம்மந்தமான விசா பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. நண்பர்கள் உறவினர்களின் வருகையால் பண உதவியும் மனநிம்மதியும் உண்டாகும். வீடு மற்றும் தொழிற்சாலைகளுக்காக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பண உதவிகள் கிடைக்கும். நீண்டதூரப் பயணங்களால் எதிர்பார்த்து இருந்த ஆதாயம் கிடைப்பதில் சற்று காலதாமதம் ஏற்படும். புதிய கடன்கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லதாகும். விபரீதமான எண்ணங்களை நினைத்து வீண் மனக்குழப்பத்திற்கு ஆளாகவேண்டாம்.

## துலாம்

தொலைதூரப் பயணங்களைத் தவிர்த்தல் நல்லதாகும். வாகனங்களில் எச்சரிக்கையுடன் பயணம் செய்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம். கண், காதுகளில் கவனம் தேவை. புதிய மருத்துவர்களின் உதவியால் நோய்கள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்திருந்த பணம் பிரச்சினைகளின் பேரில் திரும்பக் கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பாராத நல்ல தகவல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. தேவையற்ற புதிய நண்பர்களின் தொடர்புகளால் மனநிம்மதி குறைய இருப்பதால் எச்சரிக்கையுடன் இருக்கவும். மனைவியின் உடல்நலக் குறைவுகாரணமாக பொருட்செலவுகள் உண்டாகும்.

## இடபம்

குழந்தைகளுக்கான மருத்துவச்செலவுகள் ஏற்படக்கூடும். நீண்டதூரப் பயணங்கள்மூலமாக எதிர்பார்த்த காரியங்களில் சில பின்னடைவுகள் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் சற்று குறைந்து காணப்படும். உடல்நிலையில் வாயு மற்றும் வயிற்று சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். வெகுகாலமாக குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சிகளில் ஏற்பட்டு இருந்த தடைகள் நீங்கிச் சுபகாரியங்கள் நடைபெறக்கூடிய காலமாகும். மனத்தைரியமுடன் எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்துமுடிப்பீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவதுபோன்ற முயற்சிகளில் சற்று காலதாமதம் ஏற்படலாம். கணவன் – மனைவி உறவு – களில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள்.

## விருச்சிகம்

தனப்புழக்கம் சுமாராக காணப்படும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோர்கள் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. புதிய கடன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். குடும்பத்தில் காரணம் இல்லாத விசயங்களுக்காக வீண் பிரச்சினைகள் வந்துபோகும். புதிய தொழில்கள் துவங்குவதற்கான முயற்சிகளில் காலதாமதம் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகளில் சற்றுக்கவனமுடன் நடந்துகொள்வது நல்லதாகும். தந்தைவழிச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் கிடைக்கும். உடல்நிலையில் உஷ்ணம், மேகம் போன்ற உபாதைகள் வந்துபோகலாம். தந்தையின் உடல்நிலை பாதிப்புகளால் பொருட்செலவுகள் ஏற்படலாம்.

## மிதுனம்

தூரத்து உறவினர்களின் வருகையால் சில சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். நாட்பட்ட பழைய கடன்களை அடைத்து புதிய கடன்கள் வாங்க முயற்சிப்பீர்கள். எடுத்துக்கொண்ட காரியங்களை மிகுந்த முயற்சியின்மேல் செய்து முடிப்பீர்கள். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பிறருக்காக உதவிசெய்து மனமகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் – மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் குறைந்து ஓரளவு மனமகிழ்ச்சி அடையலாம். உத்தியோகத் துறையினர்களுக்குப் பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றம் ஏற்படலாம். வெளிநாடுகளுக்குச் சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும்.

## தனுசு

குலதெய்வ வழிபாடு செய்துவருதல் நல்லதாகும். வங்கிகள் மற்றும் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமான அலுவலகங்களில் பணி புரிவோர்களுக்குப் பதவி உயர்வுடன்கூடிய பணி இடமாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. சொந்தபந்தங்களுடன் குடும்பத்தில் நீண்டகாலமாக இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். மற்றவர்களில் பிரச்சினைகளில் அநாவசியமாகத் தலையிட்டு மனக்குழப்பத்தை ஏற்படுத்தாதீர்கள். தந்தை, மகன் உறவுகளில் நல்ல சூழ்நிலை காணப்படும். புதிய வீடு மாற்றம் செய்யப்போட்டிருந்த திட்டங்கள் நிறைவேறும் காலமாகும். தென்திசையில் இருந்து திடீர் அதிர்ஷ்டம்மூலம் தனம் வந்துசேரும்.

## கடகம்

விவசாயம் செய்பவர்களுக்கு எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவார்கள். கோர்ட் வழக்கு விசயங்களில் முடிவுகள் கிடைக்கச் சற்று காலதாமதம் ஆகும். கணவன் – மனைவி உறவுகளில் சில கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். காதல் விசயங்களில் சற்றுக் கவனமுடன் செயற்படுவது நல்லது. வீட்டைத் திருத்திக்கட்டுவதற்காக நீண்டநாட்களாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிறைவேறும். விட்டுப்போன உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணங்கள் மூலம் இதுநாள்வரை தீராத நோய்களுக்கு விடை – கள் காணுவீர்கள். அரசு வழக்கு சம்பந்தமாகிய விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவியால் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும்.

## மகரம்

புதிய ஆடைகள் அணிகலன்கள் வாங்குவதற்காக புதிய கடன்கள் வாங்குவீர்கள். வங்கிகள் மூலமாக எதிர்பார்த்து இருந்த பணம் கை வந்துசேரும். பொழுதுபோக்கு விசயங்களுக்காக வீண் பணச்செலவுகள் ஏற்படலாம். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி போன்ற விசயங்களில் பணம் கிடைக்கலாம். சகோதரர்களால் சம்பந்தமில்லாத பிரச்சினைகளும், மனக் குழப்பங்களும் வந்துசேரும். புதிய கடன்களை வாங்குவதால் திருப்பிச்செலுத்த இயலாமற் போகக்கூடும் என்பதால் கடன்வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. பிள்ளைகளால் இருந்துவந்துள்ள தொல்லைகள் சற்றுக் குறைந்து காணப்படும். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள்.

## சிங்கம்

உயரமான இடங்களில் மிகுந்த கவனமுடன் வேலைசெய்வது நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். நாட்பட்ட தீராத நோய்க்கு விடைகாணும் காலமாகும். அண்டை அயலாருடன் எச்சரிக்கையாகப் பேசிப் பழகுதல் நல்லது. புதிய வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய வாய்ப்பு உள்ளது. மனநிம்மதியின்மை காரணமாக நித்திரை பங்கமும் காலந்தாழ்ந்த உணவருந்துதலும் ஏற்படும். குடும்பத்தில் மருத்துவச்செலவுகள் சற்று குறைந்து மனநிம்மதி ஏற்படும். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களின் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் உண்டாகலாம்.

## கும்பம்

ஒரு சிலருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றங்கள் ஏற்படலாம். காதல் விசயத்தில் நல்ல செய்திகள் கிடைக்கும். தொழிற்சாலைகளை திருத்தி அமைக்கப்போட்ட திட்டங்களில் வெற்றி அடையலாம். காணாமற்போன பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்ப வீடுவந்து சேரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளுடன் கவனமுடன் நடந்துகொள்வதால் வீண் பிரச்சினைகள் குறையும். நிலம் மற்றும் நகை – களை அடகுவைத்தல் போன்றவற்றின்மூலமாகப் பணம் வந்துசேரும். பிள்ளைகளுக்கு வெகுகாலமாக தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடிய காலமாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கன்னி

வெகுகாலமாகத் திருமணமாகாதவர்களுக்கு திருமண காரியங்கள் நிறைவேறும். தாயின் உடல் இருந்துவந்த பாதிப்புகள் சற்று குறைந்து மருத்துவச் செலவுகள் குறையும். வெகுகாலமாகத் திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்குத் திருமணத்தடைகள் நீங்கித் திருமணம் ஆகும். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி போன்றவற்றின்மூலம் தனம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மாணவர்கள் கல்வியில் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெறுவார்கள். மனைவியின் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளால் இருந்துவந்த தொல்லைகள் சற்றுக்குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். நண்பர்கள் உறவினர்களின் ஆதரவால் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள்.

## மீனம்

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளில் மனத்திருப்தி அடைவீர்கள். மற்றவர்களின் விசயங்களில அநாவசியமாகத் தலையிட்டு மனநிம்மதியை இழக்காதீர்கள். வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுகளும், பண உதவியும் கிடைக்கும். உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருக்கவும். பொருளாதாரத்தில் இருந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். பொருளாதாரத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் சற்று குறைந்து நண்பர்களால் பொருளுதவிகள் கிடைக்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைப்பதில் சற்று காலதாமதம் ஏற்படும்.

நீங்க எத்தனையோ மனிதர்களை பார்திருப்பீர்கள். ஆனால் இவர்களைப்போல் ஒரு சில விசித்திரமான மனிதர்களை நீங்கள் நிச்சயம் பார்த்திருக்கமாட்டீர்கள். ஆம், இந்த உலகின் உண்மையான சூப்பர் மான்ஸ் என்றால் இவர்கள்தான். எந்திரன் ரஜினி மாதிரி ஒருத்தர் புத்தகங்கள் எல்லாதையும் கண்ணுலயே ஸ்கேன் பண்ணறார், இன்னொருத்தர் இரும்ப சாப்பிடறார், இதோ அது என்ன என்னனு நீங்களே பாருங்கள்.

# அதிசய மனிதர்கள்







## கண்ணால புத்தகத்தையே "ஸ்கேன்" செய்யும் அதிசய மனிதன்!!!

இவரது பெயர் கிம் பீக் இவர் புத்தகத்தில் இருக்கின்ற பக்கங்களை 3 செகண்ட் பார்த்தால் போதும் எந்த வாக்கியம் எங்க இருக்கென்பதை சரியாகச் சொல்வார். ஆனால் இவர் இப்ப உயிரோட இல்லை.

இவரது பெயர் மைக்கேல் லோலிட்டோ. இவர் இரும்பை வாயால் வளைத்து சாப்பிடும் வல்லமைகொண்டவர்.

## உங்களால் முடியுமா?



## பற்றி மனிதர் (மின்கலம்)




சீனாவைச் சேர்ந்த பெண்ணொருவர் கண்ணிமையை நீளமாக வளர்த்ததன்மூலம் உலகின் மிக நீளமான கண்ணிமைக்கு சொந்தக்காரர் என்று சாதனைபடைத்துள்ளார். கண் இமையில் இவ்வளவு அதிகமான முடிகள் வளர்வதற்கு சாத்தியம் இல்லை என்றாலும், சில ஹோர்மோன் மாற்றங்கள்மூலம் தலைமுடிபோல கண்ணிமையும் வளரலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

## இருபது அடி கூட நகர முடியாத பிரித்தானியாவின் குண்டுப்பெண்!!



பிரித்தானியாவிலேயே மிகவும் குண்டான ஆண் பற்றிய தகவல்கள் வெளியாகி சில தினங்களிலேயே அந்த நாட்டின் குண்டான பெண் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

43 வயதான பிரண்டா பிளான்கம் டேவிஸ். இவர் தினமும் 6,000 கலோரி பெறுமதியான உணவுகளை உட்கொள்ளுகின்றாராம். இதனால் 20 அடிகூட நடக்கமுடியாத அளவிற்கு இவரது உடல் பருமன் காணப்படுகின்றது. மேலும் 45 ஸ்டோன் நிறையை உடைய சரோன் மேவ்சிம்லர் என்ற பெண் கடந்த 2010ஆம் ஆண்டில் இறந்ததன்பின்னர் அதே நிறையை கொண்டுள்ள பிரண்டா அவரின் இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

## மனிதரின் தோல்வியும் மருத்துவ வெற்றியும்





சீனாவைச் சோந்த பெங் லினிற்கு வியட்நாமில் நடந்த சம்பவம் அது. சாலை ஓரமாக சென்றுக் கொண்டிருந்த பெங் லின் மீது லொறி மோதியபோது தடுமாறி விழுந்த பெங் லின் உடலின் மேல் லொறி ஏறியதில் வயிற்றுப் பகுதி கீழே பாதி துண்டாக்கிவிட்டது. ஏகப்பட்ட இரத்தம் வெளியேறிவிட்டது. பெங் லின் உயிர் பிழைக்கமாட்டார் என்று அங்கிருந்தவர்கள் நினைத்திருந்தனர். ஆனால் இன்றும் இவ்வாறு உயிருடன் வாழ்கின்றார்.